சிங்கிஸ் ஐத்மாத்தவ்

# ஜமீலா



T04611
R002A06

''சீன எல்லையின் அருகே, தியன்-ஷான் மலைத் தொடரில் வாழும் கிர்கீஸிய மக்கள், தங்கள் மொழிக்கென எழுத்துக்களும் இலக்கியமும் படைத்தது சோவியத் ஆட்சிக் காலத்தில் தான். இப்போதோ, கிர்கீஸிய உரைநடையின் குணு குணங்களைப் பற்றி விவாதிக்கக் கூடும். அவ்வளவு தூரத்திற்கு அதுவளர்ந்து விட்டது.

''ருஷ்ய இலக்கியத்தின் மாண்பு வாய்ந்த பரம்பரை, கிர்கீஸிய இலக்கியத்தின் தற்காலப் பரம்பரை ஆகியவற்றின் அடிப்படையில் மலர்ந்த புதிய தலைமுறையைச் சேர்ந்த கிர்கீஸிய எழுத்தாளர்களில் நானும் ஒருவன்.



சிங்கிஸ் ஐத்மாத்தவ்

சோவியத் சிறு கதைகள்

# சிங்கிஸ் ஐத்மாத்தவ்

# ஜமீலா

அயல் மொழிப் பதிப்பகம்
மாஸ்கோ

ЧИНГИЗ АЙТМАТОВ

ДЖАМИЛЯ

மொழிபெயர்ப்பாளர்: பூ. சோமசுந்தரம்


வாசக நேயர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்து வரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தாங்கள் கூறும் யோசனைகளை வரவேற்கவும் அயல் மொழிப் பதிப்பகம் மகிழ்வுடன் காத்திருக்கிறது.

கடிதங்களைத் தயை செய்து "Foreign Languages Publishing House, 21, Zubovsky Boulevard, Moscow, U.S.S.R." என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

சாதாரண விளிம்பிட்ட இந்தச் சிறு வண்ணப் படத்தின் முன்னே இதோ நான் மறுபடியும் நிற்கிறேன். நாளை அதிகாலையில் நான் சொந்த கிராமம் செல்ல வேண்டும். ஏதோ, பயணத்திற்குப் பயன்படும் அறிவுரைகளை இந்தப் படம் தருமென எண்ணியவன் போல நெடுநேரம் அதையே உற்றுப் பார்த்த வண்ணம் இருக்கிறேன்.

இந்தப் படம் காட்சியில் வைக்கப் பட்டதே இல்லை. அது மட்டுமல்ல. ஊரிலிருந்து சொந்தக்காரர்கள் யாரேனும் வரும்போதெல்லாம், அவர்கள் கண்ணில் படாமல் இதை மறைத்து வைத்து விடுவது என் வழக்கம். அப்படி வெட்கப் படும்படியாக இதில் ஒன்றுமில்லைதான்.

எனினும் உண்மையான கலைப்படைப்பு என இதைச் சொல்ல முடியாது. இதிலே தீட்டப் பெற்றிருக்கும் நிலக்காட்சியைப் போன்றே இதுவும் சர்வசாதாரணமானது.

ஓவியத்தின் பின்னணியில் கருண்ட சரத்கால வானின் ஒரு பகுதி சித்திரிக்கப் பெற்றிருக்கிறது. விரைந்து செல்லும் வெண் பழுப்பு மேகங்களைத் தொலைவிலுள்ள மலைத் தொடருக்கு மேலே விரட்டுகிறது காற்று. முன்னணியில், காஞ்சிரை படர்ந்த செம்பழுப்பு ஸ்தெப்பி நிலம். அண்மையில் பெய்த மழையின் ஈரம் உலராமல், கரேலென்றிருக்கும் சாலை. அதன் இரு மருங்கிலும் உலர்ந்து முறிந்த ஈர்க்கம் புல் புதர்கள் மண்டிக் கிடக்கின்றன. மழையால் அழிந்துபோன வண்டித் தடத்தோடு செல்கின்றன இரண்டு வழிப் போக்கர்களின் காலடிச் சுவடுகள். தொலைவில் போகப் போக அடிப் பதிவுகள் முன்னைவிட மங்கலாகத் தெரிகின்றன. வழிப்போக்

கர்கள் இன்னும் ஓரடி மட்டும் எடுத்து வைப்பார்களாளுல் விளிம்பிற்குப் பின்னே மறைந்துவிடுவார்கள் என்று பிரமையுண்டாகிறது. அவர்களில், ஒரு பிரயாணி.... அடேடே, முந்திய கதையைச் சொல்லாமலே மேலே போகிறேனே!

இது நடந்தது நான் சின்னப் பையனுயிருந்தபோது. போர் தொடங்கிய மூன்ருவது ஆண்டு. எங்களுடைய தந்தையரும் உடன் பிறந்தோரும் எங்கோ கூர்ஸ்க்கிலும் ஓர்யோலிலும், தொலைவிலிருந்த போர் முனைகளில் பகைவரோடு பொருது கொண்டிருந்தார்கள். அப்போது பதினைந்தே வயதுப் பாலகர்களாயிருந்த நாங்களோ, கூட்டுப்பண்ணையில் உழைத்தோம். பெரிய ஆட்கள் செய்ய வேண்டிய கடுமையான தினப்படி வேலைச் சுமையை எங்களது முதிராத இளந்தோள்கள் சுமக்க வேண்டியிருந்தது. அதிலும் அறுவடைக் காலத்தில் எங்களுக்குத் தாவு தீர்ந்து போய்விடும். இரவும் பகலும் வயலிலோ, அடிகளத்

திலோ உழைப்பதும், இல்லாவிட்டால் தானியத்தை ரயில்வே நிலயத்திற்குக் கொண்டு செல்வதுமாக வாரக் கணக்கில் வீட்டை எட்டிப்பாராமல் வெளியிலே யே உழன்று கொண்டிருப்போம்.

இப்படித்தான் ஒரு நாள் வெயில் பொசுக்கிக் கொண்டிருந்தது. இடைவிடாது கதிரறுத்ததால் அரிவாள்கள் பழுக்கக் காய்ந்து போனவை போலக் காணப்பட்டன. நான் ஸ்டேஷனில் தானியத்தை இறக்கிவிட்டு வெற்று வண்டியோடு திரும்பிவந்து கொண்டிருந்தவன், வீட்டுக்குப் போகத் தீர்மானித்தேன்.

தெருக்கோடியில், இறங்கு துறையை அடுத்த குன்றின் மீது இருக்கின்றன இரண்டு வீடுகள். அவற்றைச் சுற்றிலும் சுடாத செங்கற்களால் எழுப்பப்பட்ட திண்மையான சுவர். சுவருக்கு வெளியே நாற்புறமும் ஓங்கி வளர்ந்த பாப்லர் மரங்கள். இவைதாம் எங்கள் வீடுகள். நெடுங்காலமாக அடுத்தடுத்து வாழ்கின்றன எங்கள் இரு குடும்பங்கள். நான்

வாழ்ந்தது ''பெரிய வீடு'' எனப்பட்டது. என் உடன் பிறந்தவர்கள் இருவரும் எனக்கு மூத்தவர்கள். இருவரும் மண மாகாதவர்கள். இருவரும் போர்முனை சென்றிருந்தார்கள். வெகு காலமாக அவர்களிடமிருந்து செய்தியே கிடை யாது.

எனது தகப்பனார் முதிய தச்சர். பலபலவென்று விடியும் நேரத்தில் தொழுகை படிப்பார். அப்புறம் பொது முற்றத்தில் இருந்த தச்சுக் கூடத்திற்குப் போய் விடுவார். பொழுது சாய்ந்து வெகு நேரமான பின்பே அங்கிருந்து திரும்புவார்.

என் தாயாரும் தங்கையும் மட்டு மே வீட்டில் இருப்பார்கள்.

பக்கத்து வீட்டைக் கிராமத்தார் ''சின்ன வீடு'' என்று அழைத்துவந்தார் கள். அதிலே எங்கள் நெருங்கிய உறவி னர் இருந்தார்கள். எங்களுடைய கொள் ளுப்பாட்டன்மாரோ, எள்ளுப்பாட்டன் மாரோ ஒரு தாய் வயிற்றில் பிறந்த

அண்ணன் தம்பிகளாம். இருந்தாலும் இவர்களை நெருங்கிய உறவினர் என ஏன் அழைக்கிறேன் என்ருல் நாங்கள் ஒரே குடும்பமாக வசித்து வந்ததால் தான். நாங்கள் நாடோடிகளாயிருந்த காலம் முதற்கொண்டே, எங்கள் கொள்ளுப்பாட்டன்மார் ஒன்ருகக் கூடாரங்களைப் பெயர்ப்பதும் ஒன்ருக ஆடுமாடுகளை மந்தை திரட்டுவதுமாகச் சேர்ந்து வாழ்ந்தகாலம் தொட்டே, எங்கள் குடும்பங்களில் இவ்வழக்கம் நடப்பிலிருந்து வந்தது. நாங்களும் இதை விடாது பேணிஞேம். எங்கள் கிராமம் கூட்டுப் பண்ணை முறைக்கு உட்பட்டதும் எங்கள் தகப்பன்மார் அடுத்தடுத்து வீடுகள் கட்டிக்கொண்டார்கள். நாங்கள் மட்டுமல்ல, கிராமத்தின் ஒரு கோடியிலிருந்து ஆற்றங்கரை வரையில் நீண்டிருந்த அரால்ஸ்காயா வீதியில் வாழ்ந்தவர்கள் எல்லோருமே ஒரே இனத்தவர்தாம், ஒரு குடும்பத்திலிருந்து கிளைத்தவர்கள்தாம்.

கூட்டுப்பண்ணை முறை அமுலுக்கு வந்த சிறிது காலத்திற்கெல்லாம் சின்ன வீட்டுத் தலைவர் காலமாகிவிட்டார். அவருடைய மனைவி, இரண்டு இளம் புதல்வர்களும் தானுமாக ஒன்றியாகி விட்டாள். அந்தக் காலத்தில் எங்கள் கிராமத்தில் நடப்பிலிருந்த தொன்று தொட்ட இனச் சட்டப்படி, மகன்களுள்ள விதவையை இனத்திற்கு வெளியே ஆண்கொள்ள விடுவது கூடாது. ஆகவே, எங்கள் இனத்தார் அவளை எனது தகப்பனுருக்கு மணம் செய்வித்தார்கள். காலஞ்சென்றவருக்கு எல்லோரிலும் நெருங்கிய உறவினர் என்ற முறையில் என் தகப்பனுர் தமது முன்னேரின் ஆன்மசாந்தியின் பொருட்டு இவ்வாறு செய்வது கடமையாயிருந்ததாம்.

எங்களுக்கு இரண்டாவது குடும்பம் ஏற்பட்ட விதம் இது தான். சின்ன வீடு சுதந்திரமான குடித்தனமாகவே கருதப்பட்டது. அதற்குச் சொந்த நிலமும் சொந்தக் கால்நடைகளும் உண்டு.

ஆயினும் உண்மையில் நாங்கள் ஒன்ருக வே வாழ்ந்து வந்தோம்.

சின்ன வீட்டிலிருந்தும் இரண்டு பையன்கள் இராணுவத்தில் சேர்ந்திருந் தார்கள். மூத்தவன் ஸாதிக், மணம் புரிந்துகொண்ட சிறிது காலத்திற்கெல் லாம் படைக்குச் சென்று விட்டான். அவர்கள் இருவரிடமிருந்தும் எங்களுக் குக் கடிதங்கள் வந்து கொண்டிருந் தன—நீண்ட நாட்கள் இடைவிட்டு விட்டு.

ஆகச் சின்ன வீட்டில் எஞ்சியவர் கள், ''கிச்சி ஆப்பா'' — சின்னம்மா— என நான் அழைத்த தாயார்காரியும் அவளது மாற்றுப்பெண்ணும் — அவள் தான் ஸாதிக்கின் மனைவி — தாம். இவர்கள் இரண்டு பேரும் காலைமுதல் மாலைவரை கூட்டுப்பண்ணையில் உழைத் தார்கள். என் சின்னம்மா ரொம்ப நல்ல மாதிரி. இனிய சுபாவம். எல் லோருக்கும் ஒத்தாசையாயிருப்பாள். பாசனக் கால்வாய்கள் வெட்டுவதாகட்

டும், வயலுக்கு நீர் பாய்ச்சுவதாகட்டும், எந்த வேலையிலும் இளம் பெண்களுக்குச் சளைக்க மாட்டாள். விதியும் அவளுக்குப் பரிசளிப்பதுபோல உழைப்பாளியான மாற்றுப் பெண்ணை நல்கியிருந்தது. ஜமீலா மாமியாருக்கேற்ற மருமகள்தான். சோர்வறியாதவள், லாகவம் மிக்கவள். சுபாவம் மட்டுமே கொஞ்சம் வேறு மாதிரி.

எனக்கு ஜமீலாவின் மேல் உயிர். அவளும் என்னிடம் அன்பாயிருந்தாள். நாங்கள் ஒருவரை யொருவர் மிகவும் நேசித்தோம். ஆயினும் ஒருவரை யொருவர் பெயரிட்டழைக்கத் துணியவில்லை. நாங்கள் வெவ்வேறு குடும்பத்தினராயிருந்தால் நான் கட்டாயமாக அவளை ஜமீலா என்றே அழைத்திருப்பேன். அண்ணன் மனைவியாயிருந்தபடியால் ''ஜேனே''— மதனி— என்று அழைத்தேன். அவள் என்னைக் ''கிச்சினே பாலா''— குஞ்சுப் பையன்—என அழைத்தாள். நான் குஞ்சுப் பையனுமல்ல, எங்களிரு

வருக்குமிடையே வயது வித்தியாசமும் ஒன்றும் பிரமாதமாக இல்லை. இருந்த போதிலும் மதனிகள் தங்கள் சின்ன மைத்துனர்களை ''கிச்சினே பாலா'' என்றே அழைப்பது எங்கள் கிராமத்து வழக்கம்.

இரண்டு வீட்டுக் குடித்தனத்தையும் மேல்பார்த்தது என் தாயார்தான். அவளுக்குக் கூடமாட ஒத்தாசை செய்தவள் என் தங்கை. நூல்களால் முடிந்த பின்னல்களும் தானுமாக இலகிய வேடிக்கையான பெண். அந்தக் கஷ்டமான நாட்களில் அவள் எவ்வளவு கடுமையாகப் பாடுபட்டாள் என்பதை நான் ஒரு போதும் மறக்க மாட்டேன். இரண்டு வீட்டு ஆட்டுக் குட்டிகளையும் கன்றுகளையும் மேய்த்து வருவது அவள்தான்; வீட்டிலே எப்பொழுதும் விறகு வேண்டிய அளவு இருக்க வேண்டும் என்பதற்காகச் சுள்ளிகளும் சாணமும் பொறுக்கிச் சேர்ப்பவள் அவள்தான். என் தாய் ஏகாங்கியாக இருந்த காலத்தில், சண்

டைக்குப் போன மகன்களின் பிரிவால் அவள் உள்ளத்தில் ஏக்கம் நிறைந்த எண்ணங்கள் தோன்ருதபடி களிப்பூட்டி மகிழ்வித்தவள், எனது தூக்கிய மூக்கியான தங்கைதான்.

எங்கள் பெரிய குடும்பத்திலே நிலவிய ஒற்றுமைக்கும் செழிப்புக்கும் என் தாயாரே காரணம். இரண்டு வீடுகளுக்கும் முழு அதிகாரம் பெற்ற தலைவி, இல்லக் கிழத்தி, அவளே. எங்கள் நாடோடிப் பாட்டன்மாரின் குடும்பத்தில் அவள் சின்னப் பெண்ணுயிருந்தபோதே வாழ்க்கைப்பட்டுவிட்டாள். அவர்கள் காலமானபின்பு அவர்களது நினைவை வணக்கத்துடன் போற்றினுள். குடும்ப வியவகாரங்களை நியாயத்துடன் நிர்வகித்தாள். குடும்பம் நடத்துவதில் அவள் காட்டிய நேர்மையும் அனுபவ முதிர்ச்சியால் ஏற்பட்ட அறிவும் காரணமாக, கிராமத்திலே அவளுக்குப் பெருமதிப்பு. வீட்டிலே எந்தக் காரியத்தையும் பொறுப்பேற்று நிர்வகித்தவள் அம்மா

தான். உண்மையைச் சொல்லப் போனுல், கிராமத்தார் என் தகப்பனுரைக் குடும்பத் தலைவராக மதிக்கவே இல்லை. ஜனங்கள் அவரை ''உஸ்த்தாக்கா''— ஆசாரியார் —என்று அழைப்பார்கள். கம்மியர்களை மரியாதையாகக் குறிக்க வழங்கும் சொல் அது. ''இந்தா, தம்பீ, 'உஸ்த் தாக்கா'விடம் போய் வீணுக அவதிப் படாதே. அவருக்குத் தெரிந்ததெல்லாம் வாய்ச்சியும் இழைப்புளியும் தாம். அவர் கள் வீட்டிலே பெரியம்மாள் தான் எல் லாவற்றையும் நடத்துபவள். அவளிடம் போ. விஷயம் சட்டென முடியும்'' என்று கிராமத்தார் அடிக்கடி பேசுவது என் காதில் படும்.

இங்கே இன்னென்றும் சொல்லிவிட வேண்டும். நான் சின்னவனுயிருந்தபோதி லும் வீட்டு விவகாரங்களில் அடிக்கடி தலையிடுவதுண்டு. அண்ணன்மார் இருவ ரும் போர்முனைக்குப் போயிருந்ததால் தான் நான் இப்படிச் செய்ய முடிந்தது. பெரும்பாலும் வேடிக்கையாகவும், சில

சமயம் உண்மையாகவேயும் என்னை ''ஜிகித்'' என மற்றவர்கள் அழைப்பார்கள். ஜிகித் என்ருல் திறமை வாய்ந்த குதிரைவீரன் எனப் பொருள். குடும்பத்தைக் காப்பவன், சம்பாதிப்பவன் என்ற அர்த்தத்தில் இச்சொல் வழங்கி வந்தது. எனக்கு இதிலே ஒரே பெருமை. பொறுப்புணர்ச்சி என் உள்ளத்தில் குடி கொண்டது. தன் பொறுப்பில் காரியம் செய்யும் எனது இந்த உணர்ச்சியை என் தாயும் உற்சாகமூட்டி வளர்த்து வந்தாள். நாள் முழுதும் வாயே திறவாமல் இழைப்பதும் அறுப்பதுமாகத் தச்சு வேலையுண்டு தானுண்டு என்றிருந்த என் தகப்பனைப் போலில்லாமல் நான் துடியான குடித்தனக்காரனுகவும் சாமர்த்தியமுள்ளவனுகவும் வர வேண்டும் என்பது அவள் ஆசை.

ஆயிற்று. வண்டியை வீட்டருகே ஒரு வில்லோ நிழலில் நிறுத்தி, இழுவார்களைத் தளர்த்திவிட்டு, வாயிலுக்குள் நுழையப் போனவன், எங்கள் வேலைக்

குழுத் தலைவன் ஒரோஸ்மாத் முகப்பு வெளியில் இருப்பதைக் கண்டுகொண்டேன். அவன் குதிரை மேல் அமர்ந்திருந்தான். அவனது கவைக்கோல் வழக்கம் போலச் சேணத்துடன் சேர்த்துக் கட்டப் பட்டிருந்தது. என் தாயார் அவனருகே நின்று கொண்டிருந்தாள். அவர்களுக்குள் ஏதோ தர்க்கம் நடந்து கொண்டிருந்தது. நான் சற்று அருகே போனதும் அம்மாவின் பேச்சு என் காதில் விழுந்தது.

''அதெல்லாம் ஒரு நாளும் நடவாது! பெண்ணுவது, வண்டியிலே தானிய மூட்டைகளை ஏற்றிக்கொண்டு போவதாவது! எங்கேனும் கண்டதுண்டா? வேண்டாம், அப்பனே, என் மருமகளை விடு. அவள் முன்பு செய்து வந்த வேலையையே செய்து வரட்டும். எனக்கானுல் தலை நிமிர்த்தக் கூட முடியாமல் வேலை நெரிகிறது. இரண்டு வீடுகளை நிர்வகித்துப் பார்—அப்போது உனக்குத் தெரியும். நல்ல காலம், மகள் பெரியவளாகிக்

கூடமாட ஒத்தாசை செய்கிருளோ, பிழைக்கிறேனே! இந்த ஒரு வாரமாக அப்பாடா என்று முதுகை நிமிர்த்த முடியவில்லே. இடுப்பு ஒடிந்து போய்விட்டது. ஏதோ நமுதா தயாரித்தவள் போல மேல்காலெல்லாம் வலியான வலி யில்லே. இந்த லட்சணத்தில் இதோ பார், சோளப் பயிரெல்லாம் தண்ணீருக்கு ஏங்கிப் போய் எப்படி வாடியிருக்கிற தென்று!'' என்று வெடித்துக் கொட்டினுள் அம்மா. பேசும் போதே தலேப்பாகையின் நுனியை இழுத்து இழுத்துக் கழுத்துப் பட்டைக்குள் செருகிக் கொண்டாள். கோபமாயிருக்கும் போதெல்லாம் இப்படிச் செய்வது அம்மாவுக்கு வழக்கம்.

இந்தச் சொல்மழையில் திக்கு முக்காடிப் போன ஒரோஸ்மாத் சேணத்தில் உட்கார்ந்தபடியே சடக்கென முன்னே குனிந்து, ''இதென்னம்மா நீங்கள்! ஆளேப் படு விரட்டு விரட்டுகிறீர்களே. எனக்கு மட்டும் இந்தக் கட்டைக்கால்

இல்லாமல் உண்மையான கால் இருக்கு மானுல் உங்களை வந்தா கேட்டுக்கொண்டு நிற்பேன்? முன்னெல்லாம் செய்தது போலவே நானே மூட்டைகளை வண்டியில் தூக்கிப் போட்டுக் கொண்டு குதிரைகளை முடுக்கியிருக்க மாட்டேனு? பெண் செய்கிற வேலை இல்லை தான் இது, எனக்கும் தெரியும். ஆனுல் ஆண்களுக்கு எங்கே போவதாம்? அதனுலே தான் போர்வீரர்களின் மனைவிகளை உதவிக்கு அழைக்கத் தீர்மானித்தோம். நீங்களானுல் மாற்றுப் பெண்ணை அனுப்ப மறுக்கிறீர்கள். எங்கள் தலைவரோ, எல்லாப் பெண்களையும் அழைத்து வந்தால்தான் ஆயிற்று என்று வெட்டொன்று துண்டிரண்டாகச் சொல்லிவிட்டார். போர் வீரர்களுக்கு உணவு வேண்டும். நாம் என்னடா என்ருல் திட்டமே நிறைவேருவிடாமல் அடிக்கிருேம். இது எங்கேயாவது சரியாகுமா? நீங்களே சொல்லுங்கள்'' என்று எதிர் வாதம் செய்தான்.

இந்தச் சமயத்தில், சாட்டை வார்

தரையில் இழுபட நான் அருகே போய்ச் சேர்ந்தேன். என்னைக் கண்டதுமே குழுத் தலைவன் முகத்தில் உவகை பொங்கி வழிந்தது. சட்டென ஏதோ யோசனை அவன் மனத்தில் உதித்திருக்க வேண்டும்.

''மருமகள் மேல் எவனாவது கண் வைத்துவிடுவானோ என்று தானே பயப் படுகிறீர்கள்? கவலைப்படாதீர்கள். அவ ளுடைய அருமை மைத்துனன் இதோ இருக்கிறான். ஒரு பயலை அவள் பக்கத் தில் அண்ட விட மாட்டான்'' — இவ் வாறு சொல்லியவாறே ஒரோஸ்மாத் மகிழ்ச்சி ததும்ப என்னைச் சுட்டிக் காட்டி ''சையது அருமையான பையனா யிற்றே. இவனைப் போன்ற சிறுவர்கள் தான் நமக்குப் பசியாற்றுகிறார்கள். ஒவ் வொரு இக்கட்டிலிருந்தும் நம்மைக் கை தூக்கி விடுபவர்கள் இவர்கள் தாம்...'' என்று சொல்லிக்கொண்டே போனான்.

அம்மா அவனை மேலே பேச விட வில்லை.

''அட கடவுளே, இதென்ன கோல மடா, பார்க்கவே சகிக்கவில்லையே, நாடோடி!'' என்று அங்கலாய்த்தவள், ''பாரேன் இவன் தலையையும் சந்தத்தையும்! பிடரி மாதிரி வளர்ந்து கிடக்கிறது மயிர்! உன் அப்பாவோ, அதற்கு மேலே. மகனுக்கு முடி வெட்டக் கூடப் பொழுதில்லையாக்கும் அவருக்கு!'' என்று முறையிட்டாள்.

''அப்படியானால் சரி. பையன் இன்றைக்கு அப்பா அம்மாவோடு வீட்டிலேயே இருந்து முடி வெட்டிக் கொள்ளட்டும்'' எனச் சாமர்த்தியமாக அம்மாவுடன் ஒத்துப் பாடினான் ஒரோஸ்மாத். பிறகு, ''இதோ பார் சையது, நீ இன்றைக்கு இங்கேயே இருந்து கொள். குதிரைகளுக்குத் தீனி காட்டு. நாளைக் காலை, ஜமீலாவுக்கும் ஒரு வண்டி கொடுப்போம். இருவரும் ஒன்றாக வேலை செய்வீர்கள். ஒன்று மாத்திரம் சொல்லிவிட்டேன். அவளுக்கு நீதான் பொறுப்பாளி, ஆமாம். நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்

படாதீர்கள், அம்மா! நம் சையது அவளுக்கு ஒன்றும் நேராமல் பார்த்துக்கொள்வான். அது போதாதென்ருல் தானியாரையும் இவர்களோடு அனுப்புகிறேன். தானியார் தெரியுமே உங்களுக்கு! பாவம், சாதுப் பையன். அவன் தான் என்கிறேன், போர்முனையிலிருந்து சமீபத்தில் திரும்பிவந்தானே. மூன்று பேருமாக ஸ்டேஷனுக்குத் தானியம் ஏற்றிச் செல்லட்டும். அப்புறம் உங்கள் மருமகள் பக்கம் நெருங்க எவன் துணிவான்? என்ன நான் சொல்கிறது, சையது? விஷயத்தைக் கேள். ஜமீலாவும் சரக்கு வண்டியை ஓட்டிச் செல்லட்டும் என்பது எங்களுக்கு. உன் அம்மா அதற்கு இசைந்து கொடுக்க மாட்டேன் என்கிருர்கள். நீதான் கொஞ்சம் சொல்லி அவர்களை வழிக்குக் கொண்டு வர வேண்டும்'' என்ருன்.

குழுத் தலைவனின் புகழ்ச்சியைக் கேட்டு எனக்கு உச்சி குளிர்ந்து போய் விட்டது. ஏதோ பெரிய மனிதனிடம்

கேட்பது போல் அவன் என்னை யோசனை கேட்டது எனக்கு நிதி கிடைத்தாற் போலிருந்தது. ஜமீலாவோடு ஸ்டேஷனுக்கு வண்டியில் செல்வது எவ்வளவு இன்பமாயிருக்கும் என்று அப்போதே கற்பனை செய்து பார்த்துக்கொண்டேன். ஆழ்ந்த யோசனையுடன் சொல்பவன் போல முகத்தை வைத்துக் கொண்டு, ''அவளுக்கு அப்படி எதுவும் வந்து விடாது அம்மா, நீ ஒன்று. ஓனாய்கள் கடித்து விழுங்கிவிடுமோ என்று பயப் படுகிறாயா என்ன?'' என்று சொன்னேன்.

அப்புறம், வருஷக் கணக்காக வண்டி ஓட்டுபவனைப் போலப் பற்களின் இடை வழியே 'புளிச்' சென்று கனகாரியமாகத் துப்பிவிட்டு, அலட்சியமாகச் சாட்டையைக் கரகரவென இழுத்துக்கொண்டே தோளைக் குலுக்கிய வாறு மிடுக்காய் நடந்து அப்பால் சென்றேன்.

''அட சமர்த்தே!'' என வியப்பும் ஓரளவு மகிழ்ச்சியும் பொங்கக் கூவிய அம்மா, அதே நொடியில் கோபம்

தொனிக்க, ''ஒனுயாமே ஒனுய்! இதோ காட்டுகிறேன் உனக்கு. ரொம்பக் கண்டாய் பாரு ஒனுயையும் இன்னென்றையும். சாமர்த்தியசாலி தான் போ!'' என்று இரைந்தாள்.

''அவன் காணவில்லை யென்றால் வேறு யார் கண்டார்களாம்! உங்கள் இரண்டு குடும்பத்துக்கும் ஜிகித் அவன் தானே. அவனைப்பற்றி நீங்கள் பெருமை கொள்ளலாமே!'' என்று எனக்குப் பரிந்து பேசிய ஒரோஸ்மாத், அம்மா எங்கே மறுபடியும் பிடிவாதம் பிடிப்பாளோ என்ற அச்சத்தில் அவளை எச்சரிக்கையுடன் பார்த்தான்.

அம்மா அவன் பேச்சை மறுக்கவில்லை. திடீரென அவள் முகம் விழுந்து போயிற்று. ஏக்கத்துடன் பெருமூச்சு விட்டவாறே, ''பாவம் இவனுவது ஜிகித்தாவது. அறியாக் குழந்தை இவன். இருந்தாலும் இரவும் பகலும் ஒரே உழைப்பாய் உழைக்கிறான். நமது உண்மையான ஜிகித்கள் எங்கோ கண்காணுத

இடத்திலல்லவா இருக்கிறுர்கள்! எங்கே இருக்கிறுர்களோ, அல்லாவுக்கே வெளிச்சம்! நம் வீடுகளெல்லாம் ஜனங்கள் விட்டு விட்டுப் போன முகாம்களைப் போல வெறிச்சோடிக் கிடக்கின்றன...'' என்று சொல்லிக்கொண்டு போனுள்.

இதற்குள் நான் எட்டப் போய் விட்டபடியால் மேலே அம்மா சொன்னது ஒன்றும் என் காதில் படவில்லை. போகிற போக்கில் வீட்டு மூலேமேல் சாட்டையால் சுளீரென நான் அடித்த அடியில் புழுதிப் படலம் கிளம்பிற்று. முற்றத்தில் வறட்டி தட்டிக்கொண்டிருந்த என் தங்கை என்னைப் பார்த்து முறுவலித்ததற்கும் பதிலுக்குப் புன்னகை செய்யாமல் படு விறைப்பாக வாயிற்பக்கம் சென்றேன். அங்கே குத்திட்டு அமர்ந்து, கூஜாச் செம்பில் நீரெடுத்து நிதானமாகக் கைகழுவிக்கொண்டேன். அதன் பின் அறைக்கு வந்து, ஒரு கோப்பை புளித்த பாலேப் பருகிவிட்டு இன்னெரு கோப்பையில் புளித்த பாலே நிரப்பி,

பலகணிக் குறட்டில் வைத்து, அதில் ரொட்டியைப் பொடித்துப் போட்டேன்.

அம்மாவும் ஒரோஸ்மாத்தும் வாயில் முற்றத்திலேயே இருந்தார்கள். இப்போது அவர்கள் தர்க்கம் செய்யாமல், தணிந்த குரலில் அமைதியாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். என் அண்ணன் மாரைப் பற்றியே அவர்கள் பேசிக் கொண்டிருக்க வேண்டும். ஒரோஸ்மாத் அம்மாவுக்கு ஏதோ தேறுதல் சொல்லிக் கொண்டிருந்தான் போலும். அம்மா அடிக்கடி சட்டைக் கையால் கண்களைத் துடைத்தவாறே, எங்கோ சிந்தனையாக அவன் வார்த்தைகளுக்குத் தலையாட்டிக் கொண்டிருந்தாள். அவளது நீர் மல்கிய விழிகள் மரங்களுக்கு மேலாக எங்கோ தொலை தூரத்தில் நோக்கிக் கொண் டிருந்தன. அங்கே தன் புதல்வர்களைக் காணக் கூடும் என எண்ணினுள் போலும், பாவம்!

தன் கவலைகளில் ஆழ்ந்திருந்த அவள், ஒரோஸ்மாத்தின் யோசனைக்கு

முடிவில் இணங்கி விட்டாள் போலக் காணப் பட்டது. தன் காரியத்தைச் சாதித்துக் கொண்டதில் களிப்புற்ற ஒரோஸ்மாத் குதிரையைச் சவுக்கால் சொடேர் என்று அடித்துக் கெச்சை நடை யாக விரட்டிக் கொண்டு முன் முற்றத் திலிருந்து வெளியே பாய்ந்துவிட்டான்.

இதெல்லாம் எதில் போய் முடியும் என்பது என் தாயாருக்கோ எனக்கோ அப்போது தெரியவே தெரியாதே.

இரட்டைக் குதிரை வண்டியை ஜமீலாவால் ஓட்ட முடியும் என்பதில் எனக்குச் சந்தேகமே இல்லை. பக்கயிர் என்னும் மலைக் கிராமத்தைச் சேர்ந்த குதிரைப் பண்ணைக்காரன் ஒருவனின் மகளான ஜமீலா, குதிரை யேற்றத்தில் தேர்ச்சி பெற்றவள். எங்கள் ஸாதிக்கும் குதிரைப் பண்ணைக்காரன் தான். ஒரு வசந்த விழாவின் போது நடந்த குதிரை சவாரிப் போட்டியில் ஸாதிக்கால் ஜமீ லாவை முந்த முடியவில்லையாம். இதனல்

அவமானமடைந்த ஸாதிக், ஜமீலாவைப் பலவந்தமாகக் கவர்ந்து வந்தானும். இப்படிச் சிலர் சொல்லிக்கொண்டார்கள். எவ்வளவு தூரம் உண்மையோ, யார் கண்டார்கள்? ஸாதிக்கும் ஜமீலாவும் காதல் மணம் புரிந்து கொண்டதாக வேறு சிலர் சொன்னுர்கள். அது எப்படியாயினும், அவர்கள் இருவரும் சேர்ந்து வாழ்ந்ததெல்லாம் நான்கே மாதங்கள் தான். அதன்பின் போர் தொடங்கி விடவே ஸாதிக் ராணுவத்தில் சேர வேண்டியதாயிற்று.

குதிரைப் பண்ணேக்காரனின் ஒரே மகளாக— அவனுக்கு மகனுமாய் மகளுமாய் — குழந்தைப் பருவம் முதலே அவனுடன் குதிரைகளே மேய்த்து வந்ததனுல் தானே என்னவோ, ஜமீலாவின் சுபாவத்தில் ஒரு வகையான ஆண்தன்மை, கூர்மையும் சிற்சில வேளைகளில் முரட்டுத் தனமுங்கூடக் காணப்பட்டது. ஆண்களேப் போன்றே தீவிரமும் அழுத்தமுமாக அவள் வேலே செய்தாள். அக்கம்

பக்கத்துப் பெண்களுடன் சுமுகமாகப் பழகினுள். ஆயினும் வீணைக் குற்றங் குறை கூறியவர்களை லேசில் விட மாட்டாள். சில சமயங்களில் அவள் கோப மிகுதியால் மற்றப் பெண்ணின் தலைமயிரைப் பற்றி இழுத்ததும் உண்டு.

''உங்கள் மாற்றுப் பெண் என்ன இப்படி இருக்கிருள்? புக்ககம் வந்து முழுதாக மூன்று நாள் ஆகவில்லை, அதற்குள்ளேயே என்ன வாய் பாருங்களேன், சம்மட்டியால் அடிப்பது போல! மட்டு மரியாதை கிடையாது, கூச்ச நாச்சம் கிடையாது!'' என்று அண்டை அயலார் வந்து குறை சொல்லுவார்கள்.

''அவள் அப்படியிருப்பதுதான் நல்லது. எங்கள் மாற்றுப் பெண் நேருக்கு நேரே உள்ளதைப் பட்டென்று சொல்லி விடுவாள். அது தான் அவளுக்குப் பிடிக்கும். வெளிக்குப் பசப்புவதும் உள்ளுக்குள் புகைவதுமாக இருப்பதை விட இது எவ்வளவோ மேலாயிற்றே. உங்கள் பெண்கள் அடக்க ஒடுக்கமா

யிருப்பது போலப் பாசாங்கு செய்கிறார் கள். உள்ளுக்குள் பார்த்தாலல்லவா தெரியும் அவர்களுடைய அடக்கமும் ஒடுக்கமும் நாறுகிற நாற்றம்! அழுகல் முட்டைபோல வெளியே மழமழப்பும் நாசூக்கும். உடைத்துப்பார்த்தாலோ, மூக்கைப் பொத்திக் கொண்டு ஓட வேண்டியது தான்'' என அவர்கள் முகத்திலடித்தாற் போலப் பதில் சொல்லிவிடுவாள் அம்மா.

என் தகப்பனாரும் சின்னம்மாவும் ஜமீலாவிடம் மாமனார் மாமியார் வழக்கமாக இருப்பதுபோலக் கண்டிப்பும் காறுபாறுமாக இருப்பதில்லை. பரிவும் பாசமுமாக இருந்தார்கள். அவர்கள் விரும்பியதெல்லாம் அவள் தன் கணவனுக்கு உண்மையாக நடந்துகொள்ள வேண்டும் என்பது ஒன்று தான்.

அவர்கள் மனப் போக்கு எனக்குப் புரிந்தது. நான்கு மகன்களைப் போர்க்களத்திற்கு அனுப்பிய அவர்கள் இரண்டு வீடுகளுக்கும் ஒரே மாற்றுப் பெண்ணாக வாய்த்திருந்த ஜமீலாவால்தான் ஆறுதல்

பெற்றுவந்தார்கள். அதனுலேயே அவள் மகிழ்வும் மனநிறைவுமாக வாழ வேண்டும் என்பதில் அவ்வளவு கவலே யெடுத்துக் கொண்டார்கள். அம்மாவின் போக்கு தான் எனக்கு விளங்காத புதிராயிருந்தது. யாரையுமே சாதாரணமாக நேசிப்பவள் அல்ல அவள். அதிகாரமும் கண்டிப்புமாக இருப்பது அவள் சுபாவம். அவளுக்கென்று சில சட்டதிட்டங்கள் உண்டு. அவற்றிலிருந்து அவள் ஒரு போதும் பிறழ்ந்தது கிடையாது. ஒவ்வோர் ஆண்டும் வசந்தகாலம் வந்ததுமே, பழைமையான நாடோடிக் கூடாரத்தை வீட்டு முகப்பில் அடித்து சூரைச் செடிக் கிளேகளே எரித்துப் புகையூட்ட அவள் தவறியதே இல்லே. இந்தக் கூடாரம் என் தகப்பனுர் வாலிபராயிருந்தபோது செய்தது. எங்களேக் கடும் உழைப்பாளிகளாகவும், பெரியவர்களுக்கு வணங்கி நடப்பவர்களாகவும் அம்மா வளர்த்திருந்தாள். குடும்பத்தினர் எல்லோரும் அவளுக்குக் கீழ்ப்

படிந்தாக வேண்டும். இல்லாவிட்டால் விட மாட்டாள்.

இவ்வளவெல்லாம் இருந்தும், இந்த ஜமீலா என்னடா என்றால், தான் முறைப் படி இருக்கவேண்டிய வகையைச் சேர்ந்த மாற்றுப்பெண் அல்ல என்பதை எங்கள் வீட்டிற்கு வந்த நாள் முதல் கொண்டே காட்டிவிட்டாள். பெரியவர்களிடம் மரி யாதையாகவும் அவர்களுக்குக் கீழ்ப்படிந் தும் அவள் நடந்து கொண்டதென்னவோ உண்மையே. ஆயினும் மற்ற மாற்றுப் பெண்களைப் போல் அவள் அவர்கள் முன்பு சிரந் தாழ்த்தவோ, அவர்கள் பின்னே துவேஷத்துடன் குசுகுசுக்க வோ இல்லை. மனத்தில் தோன்றியதைப் பட்டென்று சொல்லிவிடுவாள். தன் கருத்தை வெளியிட அஞ்ச மாட்டாள். அம்மா பெரும்பாலும் அவளைத் தாங்கிப் பேசுவாள், அவள் சொல்வதை ஒப்புக் கொள்வாள், எனினும் முடிவாகத் தீர்மானிக்கும் உரிமையை மட்டும் தன் னிடமே வைத்துக்கொள்வாள்.

ஜமீலாவின் ஒளிவு மறைவற்ற பேச்சு, நியாயமான போக்கு, இவை காரணமாக அவள் தன் போன்றவள் என அம்மா கண்டு கொண்டாள். தன்னைப் போலவே அதிகாரம் வாய்ந்த குடித்தனத் தலைவியாக, இல்லக் கிழத்தியாக ஜமீலாவை ஆக்க வேண்டும் என்று அவள் கனவு கண்டாள். ஆகவே தான் அவள் விஷயத்தில் இவ்வாறு நடந்து கொண்டாள் என நினைக்கிறேன்.

''அல்லாவின் அருளால் தான் நீ இவ்வளவு உறவுப் பிணைப்பும், சௌபாக்கியமும் வாய்ந்த வீட்டில் வாழ்க்கைப் பட்டிருக்கிறாய் குழந்தாய். இது உன் அதிர்ஷ்டம். குழந்தைகள் பெற வேண்டும், வீட்டில் எல்லாம் செழிப்பாக இருக்க வேண்டும், இது தான் பெண்ணின் ஆக்கம். கிழடுகளான நாங்கள் சேர்த்து வைத்திருப்பதெல்லாம் உனக்குத் தான் அம்மா வரப்போகிறது. நாங்கள் என்ன, சவக் குழிக்கா

இதை யெல்லாம் கொண்டு போகப் போகிறேம்! ஆனல் ஒன்று: தன் கௌரவத்திற்கும் மனச் சாட்சிக்கும் பழுதில்லாமல் நடந்துகொள்பவர்களிடம் தான் ஆக்கம் தங்கும். இதை எப்போதும் நினைவில் வைத்துக்கொள். ஜாக்கிரதையாக இரு!'' என்று அம்மா ஜமீலாவுக்கு மீண்டும் மீண்டும் உபதேசம் செய்வாள்.

ஜமீலாவின் சுபாவத்தில் காணப்பட்ட ஓர் அம்சந்தான் இரண்டு மாமியார்களுக்கும் மனக் கலக்கம் அளிப்பதாயிருந்தது. குழந்தை போல ஒரே குதியும் கும்மாளமுமாயிருப்பாள் ஜமீலா. இருந்தாற்போலிருந்து ஒரு காரணமும் இல்லாமல் நகைப்பாள், அதுவும் குதூகலமாக, உரக்க. வேலையிலிருந்து திரும்பும்போது நிதானமாக நடக்க மாட்டாள், பாசன வாய்க்காலை எகிறித் தாண்டியவாறு, குண்டோட்டம் குதியோட்டமாக முகப்பு வாயிலுக்குள் பாய்வாள். பின்பு, வெளிப்படையான முகாந்தரம் எதுவு மில்லாமலே முத

வில் ஒரு மாமியாரையும் அப்புறம் மற்ற மாமியாரையும் கட்டித் தழுவி முத்தமிடுவாள்.

பாடுவதில் ஜமீலாவுக்குப் பிரியம். பெரியவர்கள் முன்னிலையிலும் கூச்சமே படாமல் எப்போது பார்த்தாலும் ஏதோ பாடிக் கொண்டிருப்பாள். குடும்பத்தில் மாற்றுப் பெண் நடந்துகொள்ள வேண்டிய முறை பற்றி எங்கள் கிராமத்தில் நிலவிய சம்பிரதாயத்துக்கு இதெல்லாம் கொஞ்சமும் ஒத்து வரவில்லைதான். இருந்தாலும், ''நாளடைவில் ஜமீலா ஒழுங்குக்கு வந்து விடுவாள். சிறுப்பத்திலே எல்லாருமே இப்படி இருப்பது சகஜம் தானே'' என்று இரண்டு மாமியார்களும் தம்மைத் தாமே தேற்றிக்கொள்வார்கள். எனக்கோ, ஜமீலாவைவிட மேலானவர்கள் உலகிலே எவருமே இல்லை என்று பட்டது. நாங்கள் இருவரும் எப்போதும் வேடிக்கையும் விளையாட்டுமா யிருப்போம்; காரணமின்றிக் கலகல வெனச் சிரிப்

போம்; முன் முற்றத்தில் ஒருவரை யொருவர் துரத்திப் பிடிப்போம்.

ஜமீலா கண்ணுக்கு லட்சணமாயிருப் பாள். வடிவான அங்க அமைப்பு, ஒயி லான தோற்றம். முரடான நீண்ட கூந் தலை வகிரெடுத்து இரண்டு பருத்த பின் னல்களாகத் தொங்க விட்டிருப்பாள். வெள்ளைத் தலைக் குட்டையை நெற்றி மீது சற்றே சாய்வாக விட்டுக் கட்டிக் கொள்வாள். அவளது மழமழப்பான முகத்தின் சாமள நிறத்தை இது மிக அழகாக எடுத்துக் காட்டும். அவள் சிரிக்கும் போது வாதாம் பழ வடிவின வான அவளது கருநீலக் கண்களில் இளமைக் குதூகலம் சுடர்விட்டு ஒளி ரும். கிராமாந்தரச் சரசப் பாட்டுக்கள் பாடும்போதோ, அவளது எழில் விழி களில் பளிச்சிடும் ஒளி, அவள் இன்னும் சின்னப் பெண் அல்ல என்பதைக் காட் டும்.

ஜிகித்கள், அதிலும் போர்முனையி லிருந்து திரும்பிய இளைஞர்கள், ஜமீலா

வை ஆர்வத்துடன் நோக்குவதை நான் அடிக்கடி கண்டேன். ஜமீலாவுக்குக் கேலிப் பேச்சில் விருப்பமுண்டு. ஆனால் எவனாவது அத்து மீறி நடந்துகொண்டால் உடனே அவனை அடக்கிவிடுவாள். இருந்தபோதிலும் அவள் வாலிபர்களுடன் பழகுவது எனக்குக் கடுப்பாயிருக்கும். தம்பிகளுக்குத் தமக்கைகள் விஷயமாக ஏற்படுவது போன்ற பொறாமை எனக்கு அவளைப்பற்றி ஏற்படும். அவளருகே யாராவது இளைஞனைக் கண்டால் எப்படியாவது குறுக்கிட்டு அவனைத் தடை செய்ய முயல்வேன். விறைப்பாக நின்று அவனை வெறுப்புடன் முறைத்துப் பார்ப்பேன். ''இந்தாரும், ரொம்பத் தானே பல்லிளிக்க வேண்டாம், தெரிகிறதா? இவள் என் மதனியாக்கும். இவளைக் காப்பாற்ற ஒருவரு மில்லை என்று எண்ணிவிடாதேயும்!'' என்று என் பார்வை அவனை எச்சரிக்கும்.

இந்த மாதிரிச் சந்தர்ப்பங்களில் நான் அதியாகவே சொந்தம் பாராட்

டிக்கொண்டு, பொருத்தமோ பொருத்தமில்லையோ, பேச்சுக்கு இடையில் திடுதிப்பென்று புகுந்து, ஜமீலாவின் காதலை விரும்பும் இளைஞர்களைக் கிண்டல் செய்ய முயல்வேன். இது பலிக்காவிட்டால் கட்டுமீறிய சீற்றத்துடன் எருது கொம்புகளைச் சிலுப்புவது போலச் சிலுப்பிக்கொண்டு விர்ட்டென்று பின்வாங்கி விடுவேன்.

வாலிபர்கள் களுக்கென நகைத்து, ''அடேயப்பா, ஆளைப் பாரப்பா ஆளை! இவள் அவனுடைய மதனியோ? அப்படிச் சொல்லடா என்றேன். நமக்குத் தெரியாமல் போயிற்றே!'' என்று கொக்கரிப்பார்கள்.

நான் பொங்கி வரும் ஆத்திரத்தை அடக்கிக் கொள்ள முயல்வேன். ஆயினும் என் காதுகள் குப்பென்று சிவப்பேறிக் காந்தும். ரோசக் கண்ணீர் விழிகளில் ததும்பும். என் 'ஜேனே'— மதனி — ஜமீலா என் நிலைமையைப் புரிந்து கொள்வாள். பீறி வரும்

சிரிப்பைச் சிரமத்துடன் உள்ளடக்கிக் கொண்டு, கடுகடுவென்ற முகத்துடன், ''நீங்கள் என்ன நினைத்தீர்களாம்? மதனி கள் தெருவில் கிடப்பார்களென்ரு? உங்கள் ஊரிலே தெருவில் கிடப்பார் கள் போலிருக்கிறது. எங்கள் ஊரில் அப் படி யல்ல!'' என வாலிபர்களிடம் மிடுக் காகச் சொல்லிவிட்டு, ''வா கண்ணு, என் கிச்சினே பாலா, இவர்கள் கிடக் கிருர்கள், போகலாம் வா!'' என்று, அவர்களை வீருப்புடன் பார்த்து, தலை யைச் செருக்கோடு நிமிர்த்தி, தோள் களைச் சிலுப்பிக்கொண்டு பெருமிதம் தோன்ற என்னுடன் நடந்துவிடுவாள். நடக்கும்போதே அவள் மௌனமாக முறுவலித்துக்கொள்வாள்.

அந்த முறுவலில் எரிச்சலும் மகிழ்ச் சியும் ஒருங்கே திகழும். ''அட மட்டிப் பயலே! நான் மட்டும் இஷ்டப்பட்டுவிட் டால் அப்புறம் என்னைக் கட்டுப்படுத்த யாரால் முடியும்? உங்கள் குடும்பத் தார் எல்லோருமே கண்காணித்தாலுங்

கூட, என்னைக் கண்டுகொள்ளப் போவதில்லை, தெரியுமா?'' என அவள் எண்ணமிடுவாள் போலும். இத்தகைய சந்தர்ப்பங்களில் நான் தகாதது செய்து விட்டவன் போலக் கம்மென்றிருந்து விடுவேன். ஆம், ஜமீலா விஷயத்தில் எனக்கு ஒரே பொருமை. அவள்மீது எனக்கு ஒரே பக்தி, அவள் என் மதனி என்பதில் மட்டற்ற பெருமை. அவளுடைய அழகு, கட்டற்ற, சுயேச்சையான மனப்போக்கு இவற்றில் எனக்கு கர்வம். நாங்கள் இருவரும் உயிர்த் தோழர்கள். எங்களுக்குள் ஒளிவு மறைவே கிடையாது.

போர் நடந்து கொண்டிருந்தபடியால் அந்த நாட்களில் எங்கள் கிராமத்தில் இளம் ஆடவர்கள் மிகக் குறைவு. இந்த நிலைமையைச் சாதகமாக எடுத்துக்கொண்டு சில இளைஞர்கள் பெண்களிடம் துடுக்காக நடந்துகொண்டார்கள். பெண்களென்ருல் அவர்களுக்குக் கிள்ளுக் கீரை. ''இதுகளிடம் எதற்காக

அப்பா பொழுதை வீணுக்க வேண்டும்! எவள் வேண்டுமானுலும் சுடக்குப் போட்டுக் கூப்பிட்டால் தானே ஓடி வருகிருள்!'' என்பது போலிருந்தது அவர்கள் நடந்துகொண்ட மாதிரி.

ஒரு தடவை, தீனிப் புல் அறுவடையாகும்போது எங்கள் தூர உறவினனுன ஒஸ்மோன், ஜமீலாவிடம் சரசம் பாராட்டத் தொடங்கினுன். தங்களுக்கு வசப்படாத பெண் எவளுமே இல்லை என்று நினைக்கும் வகையைச் சேர்ந்தவன் இவன். புல் பற்றையின் நிழலில் இளைப்பாறிக் கொண்டிருந்த ஜமீலா, அவன் கையை ஆத்திரத்துடன் உதறித் தள்ளிவிட்டுச் சட்டென எழுந்து நின்ருள்.

''அட எட்டப் போ அய்யா!'' என எரிச்சலுடன் சொல்லிவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டு, ''உங்களைப் போன்ற கடாக் குதிரைகளிடம் வேறு எதை எதிர்பார்க்க முடியும்?'' என்ருள்.

புல் பற்றையின் கீழ் மல்லாக்காக

விழுந்து கிடந்த ஒஸ்மோன், இளக்கா ரம் தோன்ற உதடுகளைச் சுளித்தான்.

''உறியிலே உயரத் தொங்கும் மா மிசம் கவிச்சடிக்கிறது என்றதாம் பூனை! என்னம்மா ரொம்பக் கிராக்கி பண் ணிக்கொள்கிருய்! உள்ளுக்குள்ளே என் னவோ ஆசை கிடந்து அடித்துக்கொள் கிறது. மேலுக்கு இந்த ராங்கி யெல் லாம் எதற்காம்!'' என்று நையாண்டி செய்தான்.

இதைக் கேட்டதும் ஜமீலா சடக் கென்று அவன் பக்கம் திரும்பினுள்.

''ஆமாம். ஆசை அடித்துக்கொள் ளத்தான் செய்கிறது என்று வைத்துக் கொள்ளேன். எங்கள் தலைவிதி அப்படி வந்து வாய்த்திருக்கிறது. அதற்காக என்னவோ இளிக்கிருயே கெக்கெக்கே என்று, மடையா! நூறு வருஷம் படை வீரனின் மனைவியாகத் தனித்து வாழ்ந் தாலும் உன் போன்றவர்கள் முகத்தில் காறித் துப்பக்கூட ஆசைப்பட மாட் டேன், தெரிந்ததா, கழிசடைப் பயலே!

சண்டை மாத்திரம் வரவில்லையானால் உன்னை ஏனென்று கேட்பவள் யார்? தெரியாமல் தான் கேட்கிறேன். ஊம்?'' என்று சீறினாள்.

''நானும் அதைத்தானே சொல்லுகிறேன்! போர் நடக்கிறது. அதனால் தான் புருஷன் காரனின் சாட்டையடியில்லாமல் நீ மதங் கொண்டு துள்ளுகிறாய். வேறென்ன?'' என்று இளித்த ஒஸ்மோன், ''நீ மட்டும் என் பெண் சாதியா யிருந்தாயானால் நீ பாடுகிற பாட்டே வேறாயிருந்திருக்கும்!'' எனக் கறுவினான்.

ஜமீலா அவன் மேல் பாய்ந்துவிடுவாள் போலக் காணப்பட்டாள். ஏதோ சொல்வதற்கு வாயெடுத்தவள், இந்த அற்பன் சச்சரவிடக்கூடத் தகுதியற்றவன் என எண்ணி, ஒன்றும் பேசாதிருந்துவிட்டாள். வெறுப்பைக் கக்கும் விழிகளால் அவனை நெடு நேரம் உறுத்துப் பார்த்தாள். பின்னர், இகழ்ச்சி தோன்றத் தூவென்று காறி உமிழ்ந்து

விட்டுத் தரையில் கிடந்த கவர்க்கோலை எடுத்துக்கொண்டு விடு விடென அப்பால் சென்றுள்.

நான் புல் பற்றைக்குப் பின்னுல் ஒரு சக்கடா வண்டியில் நின்று கொண் டிருந்தேன். என்னைக் கண்டதுமே ஜமீலா சட்டென மறுபுறம் ஒதுங்கிவிட்டாள். நான் என்ன மனநிலையிலிருந்தேன் என் பது அவளுக்குத் தெரியாதா என்ன? அவளல்ல, நானே அவமானப்பட்டது போலவும், பரிசுகெட்டது போலவும் என் உள்ளம் குமுறியது.

''இந்த மாதிரி ஆட்களோடு ஏன் தொடர்பு வைத்துக்கொள்கிருய்? இவர் களோடு எதற்காகப் பேசுகிருய்?'' என்று வேதனையால் நொந்த உள்ளத்துடன் அவளைக் கடிந்துகொண்டேன்.

அன்று மாலை வரையிலும் ஜமீலா ஒரே ஏக்கத்துடன் முகத்தை உர் ரென்று வைத்துக்கொண்டு வளைய வந் தாள். முன்போல என்னிடம் ஒரு வார்த் தைகூடப் பேசவோ, சிரிக்கவோ இல்லை.

நான் வண்டியை அவளருகே ஓட்டிச் சென்றதும், அவள் தனக்குள்ளேயே மறைத்துக் கொண்டிருந்த பயங்கர மான மனப்புண்ணைப் பற்றி என்னைப் பேச விடக் கூடாது என்பதற்காகக் கவர்க்கோலைப் புல் பற்றைக்குள் செருகி, அதை எடுத்து முன்னே உயர்த் திப் பிடித்தவாறே, தன் முகத்தை நான் காண முடியாதபடி ஒளித்துக் கொண்டு நடந்தாள். புல்லை வண்டியில் கடாசியதும் உடனே திரும்பி அடுத்த பற்றையைக் குத்தி எடுத்தாள். இப்படி யாக வண்டி வெகு விரைவில் நிறைந்து விட்டது. வண்டியை ஓட்டிக் கொண்டு செல்கையில் நான் திரும்பி அவளைப் பார்த்தேன். கவைக்கோல் பிடி மீது சாய்ந்த வண்ணம் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். பின்பு திடுக்குற்று, மீண்டும் வேலையில் ஈடுபட்டாள்.

கடைசி வண்டியில் புல் நிறைத்து முடித்ததும் ஜமீலா உலகிலுள்ள மற்ற எல்லா விஷயங்களையும் அடியோடு

மறந்து விட்டவள் போலச் சூரியாஸ்த மனத்தை நீண்ட நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள். அங்கே ஆற்றிற்கு அப்பால், கஸாஃக் ஸ்தெப்பி வெளியின் விளிம்பில், வலியிழந்த மாலைக் கதிரவன், கணகணக்கும் 'தந்தூர்'—குழியடுப்பு— வாய் போலக் கனன்று கொண்டிருந் தான். தொடுவானத்துக்குப் பின் மெல்ல மெல்ல ஆழ்ந்து கொண்டிருந்த பரிதிக் கோளம், சிதறிய மேகங்களுக் குச் செவ்வண்ணம் தீட்டியது. அதன் கடைசிக் கதிர்கள் கருஞ்சிவப்பு ஸ்தெப்பி நிலத்தில் ஒளி பரப்பின. ஸ்தெப்பிப் பள்ளங்களிலோ, முன்மங்குலின் நீலச் சாயல் படியத் தொடங்கி விட்டது. ஜமீலா, ஏதோ அற்புதத்தைக் காண்ப வள் போலத் தன்னை மறந்த லயத் துடன் சூரியாஸ்தமனத்தைக் கண்கொட் டாது பார்த்துக் கொண்டிருந்தாள். அவளது வதனத்தில் கனிவு ஒளிர்ந் தது. சற்றே விரிந்த அவளது இதழ் களில் குழந்தையின் புன்னகை போன்ற

மென் முறுவல் அரும்பியது. பின்னர் அவள் என் புறம் திரும்பினுள். எனக்கா அவளைக் கடிந்து கொள்ள வேண்டு மென்று நா துடித்தது. உரைக்கப் பெருத இந்தக் கண்டனத்துக்குப் பதில் சொல் பவள் போன்று, ஏதோ இடையில் விட்ட இடத்திலிருந்து பேச்சைத் தொடர்ப வள் போல அவள் பேசத் தொடங்கினுள்.

''நீ அவனைப் பற்றி மனத்தை அலட்டிக் கொள்ளாதே, கிச்சினே பாலா, அவன் கிடக்கிறுன்! மனிதனு அவன்?'' இவ்வாறு கூறியவள், பரிதியின் மறையும் விளிம்பை நோக்கியவாறு மௌனத்தில் ஆழ்ந்தாள். அப்புறம் பெருமூச்சு விட்டு, சிந்தனை ததும்ப மேலே சொன்னுள்: ''ஒருவரது உள்ளத்தில் இருப்பதை இவர்கள்—அதுதான், ஒஸ்மோன் போன்றவர்கள்—எங்கே கண்டார்கள்? யாருக்குமே அது தெரியாதே. உலகம் பூராவிலும் இதை அறியக் கூடியவனே கிடையாது போலும்....''

நான் குதிரைகளைத் திருப்புவதற்

குள் ஜமீலா, அடுத்த வயலில் வேலை செய்த பெண்களை நோக்கிப் பாய்ந் தோடினுள். அவர்களது உரத்த மகிழ்ச் சிக் குரல்கள் என் காதுகளுக்கு எட்டின. ஜமீலாவுக்கு இந்த மாறுதல் எப்படி நேர்ந்தது என விளக்குவது கடினம். மறையும் கதிரவனைப் பார்த்துக் கொண் டிருந்த பொழுது அவளது மனம் ஒளிபெற்றதோ? நன்ருக வேலை செய்த தன் விளைவாக அவள் மகிழ்வடைந் தாளோ? தெரியாது. உயரமாகத் தீனிப் புல் நிரப்பிய வண்டியின் உச்சியில் உட்கார்ந்திருந்த நான் ஜமீலாவைப் பார்த்தேன். தலைக்குட்டையை ஒரு சுண்டு சுண்டி இழுத்துக் கையில் பிடித் துக் கொண்டு, அறுவடையான, நிழல் படிந்த வயலில் தன் தோழியைத் தொடர்ந்து ஓடினுள். அவளது கரங்கள் அகல விரிந்திருந்தன. அவளுடைய ஆடைத் தலைப்பு காற்றில் படபடத்தது. அதைக் கண்ட எனது சோகம் எங்கோ போயொழிந்தது. ''அந்த வம்புக்காரன்

ஒஸ்மோனைப் பற்றி நினைப்பதால் என்ன பயன்?'' என்றது என் மனம்.

''ஹை, ஹை, ட்ரியோ!'' என்று குதிரைகளைச் சவுக்காலடித்து விரட்டிச் சென்றேன்.

அன்றைய தினம், குழுத் தலைவன் சொன்னபடியே வீட்டில் தகப்பனார் வரும்வரை காத்திருந்து தலையை மழித்துக் கொள்வதென்று தீர்மானித்தேன். இந்த இடைநேரத்தில் ஸாதிக்கின் கடிதத்திற்குப் பதில் எழுத உட்கார்ந்தேன். இந்தக் கடிதங்களிலும் எங்கள் வீட்டில் ஒரு தனி நியமம் வழங்கிவந்தது. அண்ணன்மார் கடிதங்களை அப்பா பெயருக்கு எழுதுவார்கள். கிராமத் தபால்காரன் அவற்றை அம்மாவிடம் கொடுப்பான். அவற்றைப் படிப்பதும் அவற்றிற்குப் பதிலெழுதுவதும் என் கடமைகள். ஸாதிக்கின் கடிதத்தை உறையிலிருந்து வெளியில் எடுக்காமலே, அவன் என்ன எழுதியிருந்தான் என்பதை நான் சொல்ல

முடியும். அவன் கடிதங்கள் எல்லாம் மந்தையில் செம்மறிக் குட்டிகள் போல ஒன்றை யொன்று ஒத்திருக்கும். எல் லாக் கடிதங்களையும் ஸாதிக் ''க்ஷேமம். க்ஷேமத்துக்குஎழுதவும்'' என்றே தொடங் குவான். அடுத்தாற்போல, ''இந்தக் கடி தத்தை நான், நறுமணம் கமழும், மலர் கொஞ்சும் தலாஸில் வாழும் என் உற வினர்களுக்குத் தபால் மூலம் அனுப்பு கிறேன். அவர்களாவர்: உளமார்ந்த அன்புக்குரிய, அருமைத் தந்தையார் ஜோல்சூபாய்...'' என்று ஆரம்பித்து, என் தாய், அவன் தாய், எங்களில் மற்றவர்கள், எல்லோரையும் வரிசைக் கிரமப்படி விவரிப்பான். இதைத் தொடர்ந்து எங்கள் இனத்திலுள்ள எல் லா அக்ஸாகால்கள்*, எங்கள் நெருங்கிய உறவினர்கள் ஆகியோரின் யோக க்ஷேமங்களைப் பற்றிய இன்றியமையாத

---

* அக்ஸாகால் — முதுகுரவர். இனமுதிய வர்கள்.

கேள்விகள். எல்லாவற்றிற்கும் கடைசியில், ஏதோ அவசரத்தில் கிறுக்கியது போல, ''என் மனைவி ஜமீலாவுக்கும் முகமன் கூறுகிறேன்'' என்று முடிப்பான் ஸாதிக்.

இதில் ஒன்றும் விந்தையில்லை. தாய் தந்தையர் உயிருடன் இருக்கும்போது, கிராமத்தில் அக்ஸாகால்களும் நெருங்கிய உறவினர்களும் நிறைந்திருக்கும் போது, முதன் முதலில் மனைவியின் பெயரைக் குறிப்பிடுவது நன்முயிராது, உசிதமும் அல்ல. அவளுக்குத் தனிப் படக் கடிதம் எழுதுவதைப் பற்றியோ, கேட்கவே வேண்டாம். ஸாதிக் மட்டுமே யல்ல, தன்மதிப்புள்ள ஒவ்வோர் ஆண்மகனும் இவ்வாறே கருதினன். இதிலே கேள்விக்கே இடமில்லை. கிராமத்திலே வேரூன்றிவிட்ட வழக்கம் இது. இதைப்பற்றி நாங்கள் சர்ச்சை செய்ததில்லை; அது மட்டுமல்ல, இது சரியாதவரு என்று எண்ணிப் பார்த்ததுகூடக் கிடையாது. கடிதம் வருவதே நீண்ட

நாட்கள் ஆர்வத்துடன் எதிர்பார்த்த இன்ப நிகழ்ச்சி அல்லவா?

என் தாயார் என்னைப் பல தடவை கடிதத்தைப் படிக்கச் சொல்லிக் கேட்பாள். பின்பு, உழைப்பால் கரடுதட்டிய கரங்களில் கடிதத்தைப் பயபக்தியுடன் எடுத்துக்கொள்வாள். ஏதோ பறவையைப் பிடிப்பது போலத் தத்தக்க பித்தக்க வென அதைப் பிடிப்பாள். பறவை இதோ பறந்துவிடும், இதோ பறந்துவிடும் என்று பார்ப்பவர்களுக்குத் தோன்றும். விறைத்த விரல்களால் மிகுந்த சிரமத்துடன் முக்கோண வடிவில் காகிதத்தை மடிப்பாள்.

''ஆ என் கண்களா, உங்கள் கடிதங்களை ரட்சை போலப் பேணுவோமப்பா!'' என்று துக்கத்தால் நடுங்கும் குரலில் சொல்வாள். ''அப்பாவும் அம்மாவும் பந்துக்களும் அங்கே சௌக்கியமா என்று கேட்கிறான். எங்களுக்கு என்ன வந்துவிட்டது அப்படி? நாங்கள் சொந்தக் கிராமத்திலே தானே சொஸ்தமாக

இருக்கிறோம். நீங்கள் எப்படி யிருக்கிறீர்களோ? உயிரோடிருக்கிறோம் என்று ஒரு வார்த்தை கிறுக்கி அனுப்பி வாருங்கள். அது போதும். எங்களுக்கு வேறு ஒன்றுமே வேண்டாம்'' என்பாள்.

முக்கோணக் காகிதத்தை அம்மா நீண்ட நேரம் பார்த்துக் கொண்டிருப்பாள். பின்பு கடிதங்கள் வைப்பதற்கான தோல் பையில் அதைப் பத்திரப்படுத்தி, பையைப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டுவாள்.

இம்முறை ஸாதிக்கின் கடித உறை மீது ''சராதவ் நகரம்'' என்ற முத்திரை காணப்பட்டது. அவன் அங்கே ஆஸ்பத்திரியில் கிடந்தான். அல்லா அருள் கூர்ந்தால் இலையுதிர்காலத்திற்குள் வீடு திரும்பிவிடுவதாக எழுதியிருந்தான். இதைப் பற்றி அவன் முன்பும் எழுதியிருந்தபடியால் நாங்கள் அவன் வரவை விரைவில் எதிர்பார்த்து மகிழ்ந்தோம்.

இந்தத் தடவை, கடிதம் படிக்கும் வேளையில், ஜமீலா வீட்டில் இருந்தபடியால் அம்மா அவளிடம் அதைப் படித்துப் பார்ப்பதற்காகக் கொடுத்தாள். முக்கோணக் காகிதத்தைக் கையில் வாங்கியதுமே ஜமீலாவின் முகம் குப்பெனச் சிவப்பேறியதை நான் கவனித்தேன். ஒரே ஆவலுடன், வரிகள் மீது மளமளவென்று கண்ணோட்டியவாறு, மனதுக்குள்ளாகவே கடிதத்தைப் படித்தாள். முடிவை நெருங்க நெருங்க அவள் தோள்கள் தொய்ந்து கொண்டே போயின. கன்னங்களில் சுடர்ந்த அனல் மெல்ல மெல்ல அவிந்து போயிற்று. பிடிவாதத்தைக் காட்டும் அவள் புருவங்கள் நெரிந்தன. கடைசி வரிகளைப் படிக்காமலே, ஏதோ வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுப்பது போன்ற, உணர்ச்சியற்ற அலட்சிய பாவத்துடன் அம்மாவிடம் கடிதத்தைக் கொடுத்து விட்டாள்.

மாற்றுப் பெண்ணும் தன்னைப்

போலவே ஏங்குகிருளாக்கும் என்று எண்ணிய அம்மா அவளைத் தேற்ற முயன்ருள்.

பெட்டியைப் பூட்டிக் கொண்டே, ''நீ என்ன அம்மா இது? சந்தோஷப்படுவதற்குப் பதிலாக ஒரேயடியாக இடியிடித்துப் போய் நிற்கிருயே! உன் புருஷன் மாத்திரந்தாஞ பட்டாளத்தில் சேர்ந்திருக்கிருன்? இது உனக்கு மட்டும் நேர்ந்த துன்பமல்ல. ஜனங்கள் எல்லாருமே துன்பப்படுகிருர்கள். அவர்களைப் போலவே நீயும் பொறுத்துக்கொள். தனிமையால் நோவாத, கணவன்மாருக்காக ஏங்காத பெண்கள் யாரேனும் இருக்கிருர்கள் என்று நினைக்கிருயா? எவ்வளவு ஏங்கினுலும் வெளிக்காட்டாதே, உள்ளுக்குள்ளேயே அடக்கிக் கொள்'' என்று உபதேசித்தாள்.

ஜமீலா வாய் திறந்து ஒன்றும் பேசவில்லை. ஆனுல் பிடிவாதமும் ஏக்கமும் ததும்பிய அவள் பார்வை, ''ஐயோ, அம்மா, நீங்கள் ஒன்றையுமே புரிந்து

கொள்ள வில்லை'' என்று சொல்வது போ லிருந்தது.

அன்று வீட்டில் தங்குவதென்று நிச் சயித்தேனே தவிரத் தங்கவில்லை. வழக்க மாக இரவில் நான் படுக்குமிடமான அடிகளத்துக்குப் போனேன். குதிரை களுக்குத் தளைபூட்டி, அவற்றைப் புல் மேய விட்டுவிட்டேன். கால்நடைகளைப் புல்வெளியில் மேய விடக் கூடாது என்று கூட்டுப்பண்ணைத் தலைவர் எங்களைத் தடை செய்திருந்தார். ஆயினும், என் குதிரைகள் மதமதவென்றிருக்க வேண் டும் என்பதற்காக நான் இந்த விதியை மீறிவந்தேன். சரிவிலிருந்த ஒரு தனித்த இடம் எனக்குத் தெரியும். தவிர இரா வேளையில் எவரும் எதையும் கவனிக்க மாட்டார்கள் என்ற துணிச்சலும் கூட. இந்தத் தடவை குதிரைகளை நுகத்தி லிருந்து அவிழ்த்துப் புல்வெளிக்கு ஓட் டிச் சென்றதும் எனக்கு முன்பே யாரோ நான்கு குதிரைகளை மேய விட்டிருப்

பதைக் கண்டேன். எனக்குப் பற்றிக் கொண்டு வந்தது. இரட்டைக் குதிரை வண்டிக்குச் சொந்தக்காரனல்லவா நான்? ஆகவே எரிச்சல்பட எனக்கு உரிமை இருந்தது. வெளியார் குதிரைகளை அடித்து விரட்டி, என் இடத்தில் அத்து மீறிப் புகுந்த பயலுக்குப் பாடம் கற்பிப்பது என்று முன்பின் யோசியாமல் முடிவு செய்தேன். இதற்குள் அவற்றில் இரண்டு குதிரைகள் தானியாருடையவை எனத் திடீரெனக் கண்டுகொண்டேன். அன்றைய தினம் குழுத் தலைவன் எவனைப் பற்றிப் பேசினுனே அவனே தான் இந்த தானியார். அடுத்த நாள் காலை முதல் நானும் அவனும் ஒன்ருக வேலை செய்வதா யிருந்த படியால், அவனுடைய குதிரைகளை ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டு அடிகளம் சென்றேன்.

தானியார் அங்கே இருந்தான். வண்டிச் சக்கரங்களுக்கு அப்போது தான் மசகு போட்டு முடித்துவிட்டு ஆரக்கால்களை இறுக்கிக் கொண்டிருந்தான்.

''தானியார் அண்ணே, பள்ளத்திலே மேய்கின்றனவே, அவை உன் குதிரைகளா?'' என்று கேட்டேன்.

தானியார் மெதுவாகத் தலையை என் பக்கம் திருப்பினுன்.

''இரண்டு என்னுடையவை.''

''இன்னெரு ஜோடி?''

''அவையா? யார் அவள், ஜமீலாவாமே, யாரோ, அவளுடையவை. அவள் உனக்கு என்ன வேண்டும், மதனியா?''

''ஆமாம்''.

''குழுத் தலைவனே அந்த ஜோடியை இங்கே மேய விட்டுவிட்டு, பார்த்துக் கொள்ளும்படி என்னிடம் சொன்னுன்....''

குதிரைகளை நான் அடித்து விரட்டாதது எவ்வளவு நல்லதாய்ப் போயிற்று!

இரவு வந்தது. மலையிலிருந்து வீசிய மாலை இளங்காற்று அடங்கியது. அடிகளத்திலும் சந்தடியே இல்லை. தானியார் ஒரு வைக்கோல் போருக்கு அடி

யில் என் அருகே படுத்தவன், சற்று நேரத்திற்கெல்லாம் எழுந்து ஆற்றை நோக்கி நடந்தான். நதிக் கரை விளிம்பில், கைகளைப் பின்புறம் வைத்தவாறு, ஒரு பக்கம் சற்றே சாய்ந்த தலையுடன், எனக்கு முதுகைக் காட்டிக் கொண்டு நிலைத்து நின்றான். அவனது நெட்டையான, வாய்ச்சியால் கரடுமுரடாகச் செதுக்கியது போன்ற கூர்த்த வடிவம், பால் நிலவில் தெற்றெனத் துருத்திக் கொண்டு நின்றது. திடர்மீது விரைந்தோடிய ஆற்றின் கலகல ஒலிகள் இரவில் தனித்தனியே துலக்கமாகக் கேட்டன. அவ்வொலிகளை ஆழ்ந்து செவி மடுப்பவன் போலக் காணப்பட்டான் அவன். என் காதுகளுக்கெட்டாத வேறு எவையேனும் இரவொலிகளும் சலசலப்பும் அவனுக்குக் கேட்டன போலும். ''மறுபடியும் நதிக் கரையில் இரவைக் கழிக்கத் தீர்மானித்துவிட்டானா பித்துக் கொள்ளி!'' என்று எண்ணமிட்டவாறு முறுவலித்தேன்.

தானியார் எங்கள் கிராமத்துக்கு வந்தது சமீபத்தில்தான். ஒரு நாள் நாங்கள் எல்லோரும் வயலில் தீனிப் புல் லறுத்துக் கொண்டிருந்த போது ஓடோடி வந்த ஒரு சிறுவன், காயமடைந்த போர் வீரன் ஒருவன் கிராமத்தில் வந்திருப்பதாகவும், அவன் யார், எந்த வீட்டான் என்பது தனக்குத் தெரியா தெனவும் சொன்னுன். உடனே ஏற்பட்ட பரபரப்பும் ஓட்டமும் பிடியும் வருணித்து மாளாது. எங்கள் கிராமத்து வழக்க மே அப்படி. யாராவது போர்முனையி லிருந்து திரும்பினுன் என்று கேள்விப்பட் டால் போதும், ஆண், பெண், குழந் தை அடங்கலும் ஒரு மொத்தமாக ஓடி, வந்தவனைப் பார்வையிடுவதும், அவன் கைகளைப் பற்றிக் குலுக்கி வாழ்த்துக் கூறுவதும், தங்கள் உறவினர் யாரை யாவது அவன் பார்த்தானு என்று உசாவு வதும், புதினங்கள் என்ன என்று வினவு வதுமாக அவனை மொய்த்துக் கொள் வார்கள். இம்முறையோ, கூச்சல் சொல்லி

முடியாது. ஒவ்வொருவரும், ''வந்திருப் பவன் ஒருவேளை நமது அண்ணன்— தம்பி, மச்சான், அத்தான் யாரேனு மோ?'' என்று ஊகம் செய்துகொண்டு, வந்தவனைப் பார்க்கும் பொருட்டுக் கிராமத்தை நோக்கி ஓடினார்கள்.

தானியாருக்குப் பூர்விகம் எங்கள் கிராமந்தானும். குழந்தையிலேயே அனு தையாகி விட்டானும். மூன்று வருஷம் போல ஒரு வீடு மாறி ஒரு வீடாக அல்லா டினானும். அப்புறம் சக்மாக்ஸ்க் ஸ்தெப் பியிலிருந்த கஸாஃக்குகளிடம் போய் வளர்ந்தானும். அவனுடைய தாய்வழி உறவினர்கள் கஸாஃக்குகளாம். அவனை எங்கள் கிராமத்திற்குத் திரும்ப அழைத் துக் கொள்ள நெருங்கிய உறவுகாரன் எவனுமில்லையாம். ஆகவே நாளடைவில் அவனைப் பற்றி எங்கள் ஊரார் மறந் தே போய் விட்டார்களாம். பிறந்த கிராமத்தை விட்டுச் சென்றபின் எப்படி வாழ்ந்தாய் என மக்கள் கேட்டதற்கு தானியார் ஒன்றுமே பிடி கொடுக்காமல்

பதில் அளித்தான். ஆயினும் அனுதை வாழ்க்கையில் அவன் படாத கஷ்டம் பாக்கியில்லை என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது. வாழ்க்கை அவனை அலைகடல் துரும்பாய் ஆட்டி வைத்து விட்டது. வெகுகாலம் வரை அவன் சக்மாக்ஸ்க் உவர் நிலத்தில் ஆடுகள் மேய்த்தான். வயது வந்தபின், பாலைவனத்தில் கால் வாய் வெட்டினுன், புதிய அரசாங்கப் பருத்திப் பண்ணைகளில் வேலை செய் தான், பின்பு தாஷ்கந்துக்கு அருகே யுள்ள அங்க்ரேன்ஸ்க் சுரங்கத்தில் உழைத்தான். அப்போதுதான் ராணுவ சேவைக்கு அழைக்கப்பட்டான்.

தானியார் சொந்தக் கிராமத்திற்குத் திரும்பி வந்ததை எல்லோரும் மனப் பூர்வமாக அங்கீகரித்தனர். ''அயலிடங் களில் எவ்வளவுதான் சுற்றி யலைந்தா லும் கடைசியில் திரும்பி வந்துவிட் டானே. எனவே சொந்த ஊர்த் தண் ணீர் குடிக்க வேண்டுமென்று அவன் தலையில் எழுதி யிருப்பதாகத் தானே

ஆகிறது! தாய் மொழியையும் அவன் மறக்கவில்லை. நடு நடுவே கஸாஃக் வார்த்தைகளைப் புகுத்தினாலும் மொத்தத்தில் தூய பாஷையே பேசுகிறான்'' என்றார்கள்.

''முப்பத்தொன்பது உலகங்களுக்கு அப்பாலிருந்தாலும் துல்ப்பார்* தன் இனத்தைத் தேடி வந்து விடாதோ! சொந்த நாடும் சொந்த மக்களும் யாருக்குத்தான் அருமை யில்லை! நீ திரும்பி வந்தாயே, அதுதான் நல்லது. சபாஷ்! எங்களுக்கு மகிழ்ச்சி, உன் முன்னோர்களின் ஆவிகளுக்கும் பிரீதி. இதோ ஜெர்மானியர்களை ஒழித்துக் கட்டி விடுவோம், அமைதியாக வாழ்வோம். மற்றவர்களைப் போலவே நீயும் குடியும் குடித்தனமுமாக வாழ்க்கை நடத்துவாய். உன் வீட்டு அடுப்பிலிருந்தும் புகை யெழும்!'' என ஆசி கூறினார்கள் முதிய அக்ஸாகால்கள்.

---

* துல்ப்பார் என்பது பழைய கதைகளில் வரும் குதிரை.

தானியாரின் மூதாதைகளைப் பற்றி நினைவு கூர்ந்து, அவன் எந்த வம்சத்தினன் என்பதை அவர்கள் துல்லியமாக உறுதிப்படுத்தினார்கள். இப்படியாக எங்கள் கிராமத்தில் ''புதிய உறவினன்'' தானியார் குடிபுகுந்தான்.

பின்பு குழுத் தலைவன் ஒரோஸ்மாத், போர்வீரன் தானியாரை வயலுக்குக் கூட்டிவந்தான். தானியார் நெட்டையன். அவன் தோள்கள் சற்றே கூனியிருந்தன. இடது காலை நொண்டினான். இராணுவ மேல் கோட்டைத் தோளில் போட்டுக் கொண்டு, ஒரோஸ்மாத்தின் மட்டக் குதிரைக்குப் பின் தங்கிவிடக் கூடாதென்பதற்காக விடு விடென்று நடந்தான். நெட்டையன் தானியாரின் அருகே, குட்டையனும் துறுதுறுப்பையுமான எங்கள் குழுத் தலைவன் ஆற்றோரத்தில் அங்குமிங்கும் தத்தித் திரியும் உள்ளான் குருவியைப் போலக் காணப்பட்டான். ஆட்கள் எல்லோரும்

இதைக் கண்டு களுக்கென்று சிரித்தார் கள்.

தானியாரின் காயம் இன்னும் ஆறவில்லை. முழங்காலை மடக்க அவனால் முடியவில்லை. புல்லறுக்கும் வேலை அவனுக்கு ஏலாது. ஆதலால் புல்லறுக்கும் இயந்திரங்களைச் சீராக வைத்துக்கொள்ளும் வேலைக்கு என் போன்ற பையன்களோடு அவனை அமர்த்தியிருந்தார்கள். உண்மையில் எங்களுக்கு அவனை ரொம்பப் பிடிக்கவில்லை. முதலாவதாக, அவன் கமுக்கமாயிருந்தது எங்களுக்குக் கட்டோடு ஏற்கவில்லை. தானியார் பேசுவதே கொஞ்சம். அப்படியே பேசினாலும் அவனுடைய மனம் பேச்சுக்குத் தொடர்பே இல்லாத ஏதோ வேறு விஷயத்தைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பது போல எங்களுக்குத் தோன்றும். அவனுக்கென்று தனியான நினைவுகள், தனியான எண்ணங்கள் இருப்பதாகப் படும். சிந்தனை நிறைந்த, கனவும் விழிகளால் அவன் நம்மை நேரிட நோக்கியபோதி

லும் நம்மைப் பார்த்தானு இல்லையா என்று ஒருகாலும் தெரிந்துகொள்ள முடியாது.

''போர்முனையிலிருந்தபின், பாவம், இன்னும் சுய நிலைக்கு வர முடியவில்லை போலும்!'' என்று அவனுக்காக இரங்குவார்கள் மற்றவர்கள்.

ஒரு விஷயம் மிக ஆச்சரியமாயிருந்தது. இப்படி ஓயாமல் ஏதோ எண்ணத்தில் ஆழ்ந்திருந்தபோதிலும் தானியார் மளமள வென்று, நறுக்குத் தறித்தாற் போல வேலை செய்வான். முதல் பார்வைக்குக் கலகலப்பாக, ஒளிவு மறைவற்றவனுகவே காணப்படுவான். அனுதையாக அவன் கழித்த துன்பகரமான குழந்தைப் பருவம், உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் மறைத்துக் கொள்ளவும், இவ்வளவு கமுக்கமாயிருக்கவும் அவனுக்குக் கற்பித்ததோ? இருக்கலாம்.

ஓரங்களில் அழுத்தமான வரைகளோடியிருந்த தானியாரின் உதடுகள் எப்போதும் கெட்டியாக மூடியே இருந்

தன. கண்களில் ஏக்கமும் சிந்தனையும் குடி கொண்டிருந்தன. எப்போதும் களைப்பைத் தோற்றுவித்த அவன் வற்றிய முகத்திற்கு ஜீவகளை யளித்தவை, சட்சட்டென மாறிய அவனது துடிப்புள்ள புருவங்கள் தாம். சில வேளைகளில், மற்றவர்கள் காதுகளுக் கெட்டாத எதையோ செவிமடுப்பவன் போல அவன் திடீரென ஊக்கமுறுவான். அப்போது அவன் புருவங்கள் சட்டென நிமிரும். அவன் கண்களில் இனந் தெரியாத பேரானந்தம் சுடர்விடும். அதன்பின் அவன் எதனாலோ நெடு நேரம் மகிழ்ச்சியுடன் முறுவலித்துக் கொண்டிருப்பான். இவை யெல்லாமே எங்களுக்கு விந்தையாயிருந்தன. இவை மட்டுமல்ல, வேறு விந்தையான பழக்கங்களும் அவனிடம் உண்டு. மாலை வேளைகளில் நாங்கள் குதிரைகளை நுகத்திலிருந்து அவிழ்த்து விட்டு விட்டு, கூடாரத்துக்கு வெளியே கூடி, சமையல்காரி எப்பொழுதடா உணவு தயாரிப்

பாள் எனக் காத்திருப்போம். தானியார் மட்டும் பார்வைக் குன்றின்* மேல் ஏறி, இருள் கவியும்வரை அங்கேயே தங்கிவிடுவான்.

''அங்கே என்ன செய்கிறுன் இவன்? பாரா கொடுக்கிறுனு?'' என்று நாங்கள் கேலியாகப் பேசிக்கொள்வோம்.

ஒரு தடவை ஆவலை அடக்க மாட்டாதவனுக நானும் தானியார் பின்னே குன்றின் மேல் ஏறினேன். அங்கே ஒன்றுமே விசேஷமாகக் காணப்படவில்லை. தொடுவானில் தெரிந்த மலைத் தொடர் வரை நீண்டு பரந்திருந்த ஸ்தெப்பி வெளி, மங்குலில் ஊதா நிறத்துடன் திகழ்ந்தது. கருண்ட, மங்கலான வயல்கள், சூழ்ந்திருந்த அமைதியில் மெல்ல மெல்லக் கரைபவை போலத் தோற்றமளித்தன.

---

* பார்வைக் குன்று — நாடோடிகளின் தாக்குதல்கள் நடந்த காலத்தில் வழங்கிவந்த இப்பெயர், கிர்கீஸியாவில் நிலைத்துவிட்டது.

தானியாரோ, நான் வந்ததைக் கவனிக்கத் தானும் இல்லை. ஆழ்ந்த சிந்தனையுடன், ஒளிவிடும் கண்களால் எங்கேயோ தொலைவில் நோக்கியவனாக முழங்கால்களைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தான். என் காதுகளுக்கு எட்டாத எவையோ ஒலிகளை அவன் உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருப்பது போல இம்முறையும் எனக்குப் புலப்பட்டது. இருந்தாற்போலிருந்து அவன் திடுக்கிடுவான். அப்போது அவன் அங்கங்கள் விறைத்துவிடும். கண்கள் அகல விரியும். அவன் நெஞ்சை ஏதோ அரித்துக் கொண்டிருந்தது. இதோ அவன் எழுந்து, தனது உள்ளத்தைத் திறந்து காட்டப் போகிறான்—என் முன் அல்ல (என்னைத்தான் அவன் கவனிக்கவே இல்லையே), மிக மாண்புடையதும், எல்லையற்றதும், என் அறிவுக்குப் புலப்படாததுமான ஒன்றின் முன்பு—என என் மனத்துக்குப் பட்டது. பின்னர் நான் அவனை ஏறிட்டு நோக்கினேனே, ஆளை அடை

யாளமே கண்டுகொள்ள முடியவில்லை. தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு, ஏக்கமே வடிவாய் அமர்ந்திருந்தான் தானியார், ஏதோ வேலை முடிந்தபின் களையாறுபவன் போல.

எங்கள் கூட்டுப்பண்ணையின் தீனிப் புல் வயல்கள், குர்க்குரேவு ஆற்றின் வெள்ளப் படுகை யோரமாகச் சிதறியிருந்தன. எங்கள் கிராமத்தின் அருகே ஆறு, பாறைச் செறிவைக் கடந்து வெளிப்பட்டுப் பிரசண்ட வேகத்துடன் உக்கிரமான வெள்ளமாகப் பள்ளத் தாக்கில் பாய்கிறது. தீனிப் புல் அறுவடைக் காலந்தான் மலையாற்றில் வெள்ளம் பெருகும் காலம். வண்டலும் நுரையுமாக வெள்ளம் மாலையில்தான் பெருகத் தொடங்கும். கூடாரத்தில் உறங்கும் நான், நள்ளிரவில் ஆற்றின் பேரதிர்ச்சியால் விழித்துக்கொள்வேன். அமைதி நிலவும் நீல இரவு தாரகைக் கண்களால் கூடாரத்தினுள் எட்டிப் பார்க்கும். நடுக்கும் குளிர்காற்று குப்

குப் பென்று வீசும். நிலமெல்லாம் துயி லும். குமுறும் ஆறு மட்டுமே அபாய கரமாக எங்களை நோக்கி முன்னேறி வருவது போலத் தோன்றும். எங்கள் கூடாரம் கரையோரமாக இல்லாவிடி னும் ராத்திரி வேளையில் நதி வெகு அண்மையிலிருப்பதாகப் புலப்படுமாத லால் எங்கே திடீரென வெள்ளம் பெருகி வந்து கூடாரத்தைப் பெயர்த்து அடித்துக் கொண்டு போய் விடுமோ என்ற அச்சம் என்னையுமறியாமல் மனத் தைப் பற்றிக் கொள்ளும். புல்லறுத்த களைப்பால் என் தோழர்கள் அடித்துப் போட்டாற்போல அயர்ந்து தூங்குவார் கள். எனக்கோ தூக்கமே பிடிக்காது. எழுந்து வெளியே செல்வேன்.

குர்க்குரேவு ஆற்றின் வெள்ளப் படுகையில் இரவு நேரம் எழிலும் பயங் கரமும் ஒருங்கே வாய்ந்து இலகும். தளை பூட்டிய குதிரைகள் புல்வெளியில் அங்கு மிங்குமாகக் கரு நிழலாட்டும். பனித்த புற்களை வயிறுர மேய்ந்தபின்

அவை சற்றைக்கொரு தரம் செருமிய வாறு, தூங்கி வழியும். அவற்றிற்கு அப்பால், நனைந்த செடிகளை அடித்தடித்து வளைத்துக்கொண்டு கரைபுரண்டு பாயும் குர்க்குரேவு ஆறு, கடகடவென்ற அதிரொலியுடன் கற்களை உருட்டிச் செல்லும். ஓயாது இரையும் ஆற்றின் உக்கிரமான குரூர முழக்கத்தால் இரவு கிடுகிடுக்கும். குலை பதறும். ஒரே பயங்கரம்.

இம்மாதிரி இரவுகளில் எனக்கு எப்போதும் தானியாரின் நினைவாகவே இருக்கும். ஆற்றின் கரையோரமாகப் புல் பற்றையின் மீது படுத்து உறங்குவது அவன் வழக்கம். அவனுக்கென்ன பயமாயில்லையா? ஆற்றின் பேரிரைச்சலில் அவன் காதுகள் செவிடாகாமல் எப்படித்தான் இருக்கின்றன? அவன் தூங்குகிறானா, இல்லை விழித்துக்கொண்டு கிடக்கிறானா? இரவு நேரத்தை அவன் ஆற்றங்கரை யோரமாகத் தனியே கழிப்பதன் மர்மமென்ன? இதிலே அவனுக்கு என்ன

தான் கிடைக்கிறதோ? விந்தையான மனிதன். இந்த உலகத்தவனே இல்லை. இப்போது எங்கே இருக்கிருனே? இவ்வாறு எண்ணமிட்டவனுக இங்கும் அங்கும் கண்களால் துழாவுவேன். எவனும் தென்பட மாட்டான். சரிந்து செல்லும் குன்றுகள் போன்று ஆற்றின் கரைகள் தொலைவில் பின்னே பின்னே செல்லும். அலையலையாகக் கொடு முடிகள் துலங்க இருளில் திகழும் மலைத் தொடர். அங்கே, மலைச் சிகரங்களின்மீது, ஒரே மோனமும் விண்மீன்களும்.

வந்து இத்தனை நாட்களுக்குள் தானியாருக்குக் கிராமத்தில் பல நண்பர்கள் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று தோன்றும். அவனே முன்போலவே தன்னந்தனியனுகவே வளையவந்தான். நட்பு, பகைமை, பரிவு, பொருமை எதுவுமே புரியாதது போல நடந்துகொண்டான் அவன். எங்கள் ஊரிலோ, தன் கட்சியையும் தன் நண்பர்கள் கட்சியையும் அழுத்தமாகச் சாதிப்பவர்கள், நன்மை

செய்யவும் சமயங்களில் தீமை செய்யவுங்கூடத் திறன் படைத்தவர்கள், கொண்டாட்ட விருந்தோ, இழவோ எதுவானுலும் அக்ஸாகால்களுக்குப் பின் தங்கிவிடாமல் முன்வந்து நிர்வகிக்கக் கூடியவர்கள் ஆகிய ஜிகித்களுக்குத் தான் மவுசு. பெண்களும் இத்தகையவர்களையே விருப்புடன் நோக்குவார்கள்.

அப்படியில்லாமல் ஒருவன் தானியாரைப் போல ஒதுங்கி வாழ்பவனுகவும், கிராமத்துத் தினசரி நடவடிக்கைகளில் கலந்துகொள்ளாதவனுகவும் இருந்தால், ஒரு சாரார் அவனை ஏறெடுத்தும் பார்க்க மாட்டார்கள். மற்றவர்களோ, ''இவனுல் யாருக்கும் கெடுதலுமில்லை, நலமுமில்லை. பிழைப்பை எப்படியோ நடத்திக்கொண்டு போகிருன், பாவம். கிடந்து கழியட்டும்'' என்று ஏதோ பெரிய மனது பண்ணுபவர்கள் போலச் சொல்லுவார்கள்.

இத்தகைய மனிதன் கேலிக்கும் இரக்கத்துக்கும் இலக்காவது சகஜந்தானே.

என் போன்ற சிறுவர்களுக்கோ, வய திற்கு மூத்த நடையுடை பாவனைகளில் எப்போதுமே விருப்பம். அசல் ஜிகித் களுக்கு ஒப்பாக விளங்க வேண்டுமென்ற ஆசை. எனவே நாங்கள் தானியா ரை அவன் முகத்துக்கெதிரே இல்லா விட்டாலும், தலைமறைவில் எங்களுக் குள் நையாண்டி செய்வோம். அவன் தனது ராணுவச் சட்டையைத் தானே ஆற்றில் கசக்கித் துவைப்பதைக்கூட நாங்கள் பரிகசிப்போம். அவனிடம் இருந்தது அந்த ஒரு சட்டைதான். ஆகை யால் அதைத் துவைத்துப் பிழிந்து ஈரம் உலருமுன்பே அப்படியே போட்டுக் கொண்டுவிடுவான்.

இதிலே விந்தையான விஷயம் என்ன வென்றால், தானியார் பார்ப்பதற்குப் பரம சாதுவாகவும், எதையும் மனத் தில் போட்டுக் கொள்ளாதவனாகவும் காணப்பட்ட போதிலும் அவனிடம் சகஜமாக அளவளாவ எங்களுக்குத் துணிச்சல் வருவதில்லை. அவன் எங்களை

விடப் பெரியவன் என்பதனுல் மட்டுமல்ல. மூன்று, நான்கு வயது வித்தியாசம் அப்படி என்ன பிரமாதம்? இந்த மாதிரிப் பெரியவர்களிடம் நாங்கள் உபசாரமாக நடந்துகொள்வதோ, 'நீ நான்' என்று அழைக்கத் தயங்குவதோ கிடையாது. அவன் கடுகடுப்பாகவோ, பெரிய மனிதத் தோரணையுடனே இருந்தானு என்றுல் அதுவுமில்லை. இப்படி இருப்பவர்களிடம் ஒரு வகையான மதிப்பு உண்டாகுமல்லவா? இதெல்லாம் ஒன்றுமில்லை. தானியார் வாயே திறவாமல், ஏக்கமாகச் சிந்தனையில் ஆழ்ந்திருந்த பாவனையில் அணுக முடியாத ஏதோ ஒன்று மறைந்திருந்தது. அது தான் எங்களைத் தடுத்தது. இல்லாவிட்டால் நாங்கள் தான் யாரையேனும் கோட்டா பண்ண வாய்ப்புக் கிடைக்காதா என்று தயாராய்க் காத்திருந்தோமே.

நாங்கள் தானியாருடன் நெருங்கிப் பழகாமல் ஒதுங்கியே இருந்ததற்கு ஒரு

நிகழ்ச்சி காரணமா யிருந்திருக்கலாம். சிறுவனான எனக்கு எதையும் துருவித் துருவித் தெரிந்து கொள்வதில் ஒரே ஆர்வம். ஆட்கள் சலித்துப் போகும் வரை கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டுத் துளைத்துவிடுவேன். போர்முனையிலிருந்து திரும்பிய வீரர்களிடம் யுத்தத்தைப் பற்றிக் கேள்வி கேட்பதில் எனக்கு மட்டிலா உற்சாகம். தானியார் எங்களோடு வேலை செய்யத் தொடங்கியபின், புதிதாகப் போர்முனையிலிருந்து திரும்பிய அவனிடம் ஏதாவது கேட்டுத் தெரிந்துகொள்ளத் தகுந்த தருணத்தை எதிர்நோக்கியிருந்தேன்.

ஒரு நாள் மாலை, வேலை முடிந்தபின் சாப்பிட்டு விட்டு, அப்பாடா என்று கணப்புத் தீயைச் சுற்றி அமர்ந்து களையாறிக் கொண்டிருந்தோம்.

''தானியார், உறங்கப் போகுமுன் யுத்தத்தைப் பற்றி ஏதாவது சொல்லேன்'' என்று கேட்டேன்.

முதலில் தானியார் மௌனமாயிருந்

தான். நான் கேட்டது அவனுக்குப் பிடிக்க வில்லை போலத் தோன்றியது. நெருப்பையே நெடுநேரம் உறுத்துப் பார்த்துக் கொண்டிருந்து விட்டுப் பின்பு தலையை நிமிர்த்தி எங்களை நோக்கினுன்.

''யுத்தத்தைப் பற்றியா கேட்கிருய்?'' என்று வினவியவன், தன் எண்ணங்களுக்கே விடை பகர்பவன் போல, ''வேண்டாம். போரைப் பற்றி ஒன்றுமே தெரிந்து கொள்ளாமலிருப்பது தான் உங்களுக்கு நல்லது!'' என்று வெடுக்கெனச் சொல்லி நிறுத்தி விட்டான்.

பின்பு மறுபுறம் திரும்பிக்கொண்டு, சருகுகளை ஒரு குத்து அள்ளி நெருப்பில் போட்டுவிட்டு, எங்கள் பக்கமே பார்க்காமல் கணப்பை ஊதத் தொடங்கினுன்.

தானியார் அதற்கு மேல் ஒன்றுமே சொல்லவில்லை. ஆயினும் யுத்தம் என்பது இப்படிச் சர்வ சாதாரணமாகச்

சர்ச்சை செய்வதற்கான விஷயமல்ல, தூக்கம் வரும்பொருட்டுக் கதைகள் சொல்வதற்கு அதில் ஒன்றும் கிடையாது என்பதை, அவன் சொன்ன சிறு வாக்கியத்திலிருந்தே நாங்கள் புரிந்துகொண்டோம். இந்த மனிதனது இதயத்தின் ஆழத்தில் யுத்தம் கட்டி தட்டிய இரத்தம் போல உறைந்து கிடக்கிறது. அதைப் பற்றிப் பேசுவது எளிதல்ல. இது மனதில் பட்டதும் எனக்கு என்மீதே ஒரே வெட்கமாய்ப் போய் விட்டது. அதற்குப்பின் நான் தானியாரிடம் யுத்தத்தைப் பற்றிய பேச்சையே எடுக்கவில்லை.

அவன் மீது எங்களுக்கு மதிப்பு விழுந்ததற்கு இது மட்டும் காரணமல்ல. தானியார் விஷயத்தில் கிராமத்தாரின் ஆர்வம் எப்படி விரைவிலேயே அகன்று விட்டதோ அப்படியே இந்த மாலை நிகழ்ச்சியும் எங்களுக்கு விரைவிலேயே மறந்து போயிற்று. அவன் கலகலப்பாகப் பழகாமல் மௌனியாய் வளைய

வந்தது ஜனங்களுக்கு அவன் மேல் அலட்சியத்தையோ அல்லது வெறுமே இரக்கத்தையோ தான் கிளப்பியது.

''பாவம், வீடா வாசலா கிடையாது. ஆக்கங் கெட்டவன். நல்ல காலம், கூட்டுப் பண்ணையில் சாப்பாட்டுக்காவது வகை கிடைத்ததோ பிழைத்தானே! இல்லாவிட்டால் இதற்குள் பைத்தியமே பிடித்திருக்கும் பயலுக்கு. அப்பாவி, ஒருவர் வழிக்கும் போவதில்லை. பசு என்றால் பசுதான்'' என்று கிராமத்தார் பேசிக்கொள்வார்கள்.

தானியாரின் விசித்திர சுபாவம் கிராமத்தாருக்கு நாளடைவில் பழகிப் போய் விட்டது. அப்புறம் அவர்கள் அவனைக் கவனிப்பதையே விட்டு விட்டார்கள். இது சகஜந்தானே. ஒருவன் தன்னிடம் ஏதேனும் சிறப்பு இருப்பதாகக் காட்டிக் கொள்ளா விட்டால் ஜனங்கள் அவனை விரைவில் மறந்து விடத்தானே செய்வார்கள்!

மறுநாள் காலை நானும் தானியாரும்

குதிரைகளைக் களத்துக்கு இட்டுவந்தோம். இதற்குள் ஜமீலாவும் வந்துவிட்டாள். தூரத்தில் வரும்போதே எங்களைக் கண்டுகொண்டு, ''ஏய், கிச்சினே பாலா! இந்தா, என் குதிரைகளை இப்படிக் கொண்டுவா! நுகவார்கள் எங்கே?'' என்று கூவினுள்.

களத்துக்கு வந்ததும் ஏதோ பிறந்த நாள் முதலே ஓட்டிப் பழகியவள் போல வண்டிகளை மேலுங்கீழுமாக நோட்டமிட்டாள். இருசுகள் சரியாகப் பொருத்தப்பட்டிருக்கின்றனவா என்று சக்கரங்களை உதைத்துப் பார்த்தாள்.

நாங்கள் அருகே நெருங்கியதும் எங்களது தோற்றம் அவளுக்கு வேடிக்கையாகப் பட்டது போலும். தானியாரின் நீள வரிச்சிக் கால்கள், 'ஆ'வென வாயைப் பிளந்துகொண்டு இதோ நழுவி விடுவோம் என்பன போலிருந்த செயற்கைத் தோல் ஜோடுகளுக்குள் தொளபளத்தன. நானே, காய்த்துப்போய்ப் படைபடையாய் அழுக்குப் படிந்த குதி

கால்களால் குதிரையின் விலாவில் உதைத்து அதை விரட்டிக் கொண்டு வந்தேன்.

''ஆகாகா, அற்புதமான ஜோடி தான் நீங்கள்!'' என்று களிப்புடன் கழுத்தை நொடித்தாள் ஜமீலா. மறு கணமே, ''ஊம், சட்டுப்புட்டென்று வண்டிகளைப் பூட்டுங்கள்! வெயில் ஏறுமுன் ஸ்தெப்பி வெளியைக் கடந்துவிட வேண்டுமே!'' என்று எங்களுக்குக் கட்டளையிட ஆரம்பித்தாள்.

கடிவாளங்களைக் கெட்டியாகப் பற்றிக் குதிரைகளை வண்டிவரை நடத்திச் சென்று வண்டியில் பூட்டத் தொடங்கினவள் மளமளவென்று பூட்டியும் விட்டாள். கடிவாளவாரை எப்படிப் போட வேண்டுமென்று மட்டும் காட்டும்படி ஒரே ஒரு தரம் என்னைக் கேட்டாள். அவ்வளவு தான். தானியாரையோ அவள் ஏறெடுத்தும் பார்க்க வில்லை. அவன் அருகே இல்லை போலவே நடந்து கொண்டாள்.

ஜமீலாவின் நிச்சயமும் தன்னம்பிக்கையும் தானியாரைப் பிரமிக்க வைத்துவிட்டன போலும். இகல்பவன் போன்று உதடுகளை இறுக்க மூடிக்கொண்டு அவன் அவளைப் பார்த்த பார்வையில் நட்பின்மையும் அதோடு கூட மறைமுகமான வியப்பும் தெரிந்தன. ஒரு தானிய மூட்டையை எடைத் தட்டின் மேலிருந்து தூக்கி, பேசாமல் வண்டிக்குக் கொண்டு போனான் தானியார்.

''இதென்ன அப்பா? அவரவர் வேலையை அவரவர் தனித் தனியே கவனித்துக் கொள்வதாக ஏற்பாடா? இல்லை, அப்பேன், அது நடவாது. எங்கே, இப்படிக் கொடு கையை! டேய், கிச்சினே பாலா, நீ என்னடா பேந்தப் பேந்த விழிக்கிறாய்? ஏறு வண்டியிலே, அடுக்கு மூட்டைகளை!'' என்று அதட்டினாள் ஜமீலா.

வாய்ப் பேச்சோடு நிற்காமல் தானே தானியாரின் கையைப் பற்றிக் கொண்டாள். இருவரும் ஒருவர் கையை

மற்றவர் இறுகப் பற்றிக் கொண்டு ஒரு மூட்டையைத் தூக்கியதுமே பாவம், தானியார் முகம் கூச்சத்தினுல் குப்பென்று சிவந்து போயிற்று. அப்புறம் ஒவ்வொரு தடவையும், மணிக்கட்டுகளைப் பரஸ்பரம் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, தலையோடு தலை உராய அவர்கள் மூட்டையைச் சுமந்து செல்கையில் தானியார் தவித்த தவிப்பையும், அவன் பதற்றத்துடன் உதடுகளைக் கடித்துக்கொண்டதையும், ஜமீலாவின் முகத்தை நேரிட்டுப் பார்க்காமலிருக்க அவன் முயன்றதையும் நான் கவனித்தேன். ஜமீலாவுக்கோ, ஒன்றுமே நேரவில்லை. தன் கூட்டாளியை அவள் கவனித்ததாகவே புலப்படவில்லை. அவள் பாட்டில் எடை போட்டுக் கொண்டிருந்த பெண்ணுடன் வேடிக்கையும் விளையாட்டுமாகப் பேசிக் கொண்டிருந்தாள். வண்டிகளில் பாரம் ஏற்றி முடிந்து, நாங்கள் கடிவாளவார்களைக் கையில் பிடித்ததும் ஜமீலா

சாதுரியமாகக் கண்ணைச் சிமிட்டி, ''ஏனப்பா, உன்னைத்தானே! உன் பெயர் என்ன? தானியாரா? பார்க்கிறதற்கு ஆண்பிள்ளை போலிருக்கிறாய். விடு வண்டியை முன்னே!'' எனச் சிரித்துக்கொண்டே கூறினாள்.

தானியார் அப்பொழுதும் வாயே திறவாமல் கடிவாளவாரைச் சுண்டி இழுக்கவே, குதிரைகள் பிய்த்துக்கொண்டு கிளம்பின. ''அட ஆக்கங் கெட்டவனே! என்ன ஆளடா நீ! இருக்கிறதெல்லாம் போதாதென்று சங்கோசம் வேறா? வாழ்ந்தாய் போ!'' என்று நான் எண்ணமிட்டேன்.

நாங்கள் நெடுந்தொலை செல்ல வேண்டியிருந்தது. ஸ்தெப்பி வெளியில் இருபது கிலோமீட்டர்கள், பின்பு பாறைச் செறிவைக் கடந்து ரயில் நிலையம் சேர வேண்டும். ஒரே ஒரு நல்ல விஷயம் என்னவென்றால் பாதை வரவரச் சரிந்து கொண்டே போயிற்றாகையால் குதிரைகளுக்குப் பாரவண்டிகளை இழுத்துச் செல்வது எளிதாயிருந்தது.

பெரு மலைத் தொடரின் சரிவில், ஆற்றோரமாக அமைந்திருந்த குர்க்கு ரேவு என்ற எங்கள் கிராமம், கருமலைத் தொடர்வரை நீண்டிருந்தது. பாறைச் செறிவைக் கடக்கும்வரை, கிராமமும் அதில் அடர்ந்த மரங்களின் கருமுடிகளும் தென்படும்.

நாளுக்கு ஒரு நடை தான் நாங்கள் தானியமேற்றிச் செல்வது வழக்கம். அதிகாலையில் புறப்பட்டோமானல் பிற்பகலில் ரயில் நிலையம் போய்ச் சேருவோம்.

வெயில் இரக்கமின்றிக் கொளுத்திக் கொண்டிருந்தது. ரயில் நிலையத்தருகே, மொலு மொலுவென்று நெரிந்த கூட்டத்தில் வழி விலக்கிக்கொண்டு முன் செல்வதே அரும் பாடாயிருந்தது. பள்ளத்தாக்கின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் மலைமலையாகத் தானிய மூட்டைகளை அடுக்கிக்கொண்டு வந்திருந்த சிறு வண்டிகளும் பெரிய சக்கடா வண்டிகளும் ஒருபுறம்; தொலைவில்

மலை மேலிருந்த கூட்டுப் பண்ணைகளி லிருந்து சுமையேற்றி வந்த பொதி மாடு களும் கோவேறு கழுதைகளும் ஒரு புறம். அவற்றை ஓட்டி வந்த சிறுவர் களும் போர்வீரர்களின் மனைவியரும், வெயிலில் முகமெல்லாம் கறுத்து, சாயம் வெளுத்த ஆடைகளும், கல்தரையில் நடந்ததால் காய்த்துப் போன வெறுங் கால்களும், வெப்பத்தாலும் தூசியாலும் வறண்டு வெடித்துப் போய் ரத்தம் கசிந்து கொண்டிருந்த உதடுகளுமாக அலங்கோலத் தோற்றமளித்தார்கள்.

தானியக் கிடங்கின் வாயில் மீது, ''ஒவ்வொரு தானியக் கதிரும் போர் முனைக்கு!'' என்று கொட்டை எழுத்துக் களில் பொறித்த பாவட்டா தொங்கி யது. முகப்பு வளைவில் வண்டிக்காரர் களின் அமளியும், இடிபாடும், ஆரவார மும் சொல்லிமாளாது. அருகாமையில், கைப்பிடிச் சுவருக்கு மறுபுறம், குறித்த பாதையில் சேரும் பொருட்டு முன் னும் பின்னுமாகச் சாரி வந்த எஞ்சின்

ஒன்று, கொதிக்கும் ஆவியை இறுகிய மொத்தைகளாகக் குப்குப் பென்று உமிழ்ந்தது. எரிந்த கரிச் சாம்பல் நாற்றம் அதிலிருந்து வீசியது. ரயில் வண்டிகள் பூமியதிரக் கடகடத்து ஓடின. தரையிலிருந்து எழுந்திருக்க மனமற்ற ஒட்டகங்கள், உமிழ்நீர் நிறைந்து ததும்பும் வாய்களை அகலத் திறந்து, சீற்றமும் புகலின்மையும் ஒருங்கே தொனிக்கக் கடுங்குரல் எழுப்பின.

ஏற்பு நிலையத்தில், மழுவாய்க் கொதித்த இரும்புத் தகடு வேய்ந்த விசாலமான கொட்டாரத்தில் தானிய அம்பாரங்கள் கும்பல் கும்பலாய்க் குவிந்திருந்தன. மேற்கொண்டு தானியத்தைக் கொட்டுவதற்கு, சரிவான சாரப் பல கைகள் மேலாக நடந்து, முகட்டின் அடிவரை செல்ல வேண்டி யிருந்தது. தானிய நெடியால் ஒரே புழுக்கமும் வேக்காடும். புழுதிப் படலத்தில் மூச்சு திணறியது.

கீழே நின்று கொண்டிருந்த அதி காரி, தூக்கமின்மையால் செவ்வளேயம் விழுந்த கண்களும் தானுமாகக் காட்டுக் கூப்பாடு போட்டுக் கொண்டிருந்தான். ''இந்தாப்பா, தம்பீ, இங்கே பாரு! மே லே கொண்டு போய்க் கொட்டு! அம்பா ரத்திற்கு மேலே!'' என்று இரைவதும், குத்துவது போல முட்டியை ஆட்டுவ தும், வசைமாரி பொழிவது மாயிருந் தான் அவன்.

எதற்காகத் தான் இப்படித் திட்டி நொறுக்கிஞனே? தானியத்தை எங்கே கொட்ட வேண்டுமென்று எங்களுக்குத் தெரிந்துதான் இருந்தது, கொட்டவும் செய்தோம். பார்க்கப் போனல் நேரே வயலிலிருந்து கொட்டாரம் வரை தா னிய மூட்டைகளேத் தோள்மீது சுமந்து வருபவர்கள் யார்? நாங்கள் தாமே? பெண்களும், கிழவர்களும், குழந்தை களும் தம் கைகளால் விதைத்து, தாமே அறுவடை செய்த தானியமாயிற்றே இது! கதிர் அறுப்பு மும்முரமாக நடந்து

கொண்டிருந்த இந்தச் சமயம் பார்த்து, அறுவடை இயந்திரம் பழுதாகி விட்டது. அதுவோ, லொட லொடத்த, என்றைக்கோ உபயோகம் தீர்ந்து போன, பாடாவதி இயந்திரம். அதை இயக்கியவன் எப்படியாவது அதைச் செப்பனிட்டு விட வேண்டுமென்று அதனுடன் மல்லுக் கட்டிக் கொண்டிருந்தான். அதற்காக அறுவடை நிற்குமா? கொதிப்பேறிய அறுப்பரிவாள்களும் கைகளுமாக எங்கள் பெண்கள் குனிந்த முதுகு நிமிராமல் பாடுபட்டார்கள். சிதறி விழுந்த தானியக் கதிர்களை ஒன்று விடாமல் பொறுக்கிச் சேர்த்த வண்ணமாயிருந்தன, பச்சிளம் பாலர்களின் சின்னஞ் சிறு கைகள். இந்தத் தானியத்தின் அருமை எங்களுக்குத் தெரியாதா?

நான் தோள்கள்மேல் சுமந்து சென்ற மூட்டைகள் எவ்வளவு கனமாயிருந்தன என்பது இன்னும் எனக்கு நினைவிருக்கிறது. வலிய ஆண்மகன் செய்ய

வேண்டிய வேலை அது. மூட்டை நழுவி விடாமல் தடுப்பதற்காக அதன் ஒரு மூலையைப் பற்களால் இறுகக் கவ்விக் கொண்டு, கிறீச்சிட்டுச் சவுங்கிக் கொடுக்கும் பலகைகள் மேல் சமனிலை தவறி விடாதபடி உடம்பை நெளித்தவாறு நான் தத்தக்க பித்தக்க வென்று மேலே ஏறிச் செல்வேன். சுணைத் துகள் புகுந்து தொண்டை யெல்லாம் நமைச்சலெடுக்கும். சுமையின் அழுத்தலால் விலாவெல்லாம் வலிக்கும். கண்களுக்கு முன்னே பொறி வளையங்கள் பறக்கும். எத்தனையோ முறை நடு வழியிலேயே தலை கிறுகிறுத்துப் போய் விடும். மூட்டை முதுகிலிருந்து நழுவுவதைத் தவிர்க்க முடியாது போலத் தோன்றும். அதைக் கடாசிவிட்டு அதோடு அதாகத் தடாலென்று கீழே விழ மாட்டோமா என்று மனம் அடித்துக் கொள்ளும். ஆனால் என் பின்னே மற்றவர்கள் வருவார்கள். அவர்கள் முதுகுகளிலுந்தான் மூட்டைகள் இருக்கும். என் வயதினரான

பையன்களோ அல்லது என் போன்ற புதல்வர்களை யுடைய போர்வீரர் மனைவிகளோ தாம் அவர்கள். போர் மட்டும் மூளாவிட்டால் இத்தகைய சுமைகளை அவர்கள் தூக்கும்படி யார் விடுவார்கள்? நான் செய்வது போன்ற வேலையைப் பெண்களே செய்யும் பொழுது நான் மட்டும் பின்னிடையலா மா? கூடாது. எனக்கு அதற்கு உரிமை கிடையாது. எனக்கு முன்னே போவாள் ஜமீலா. பாவாடையை முழங்கால்க ளுக்கு மேல் தூக்கிச் செருகியிருப்பாள். அவளது அழகிய பழுப்புக் கால்களிலே தசைநார்கள் விறைத்து நிற்பதை நான் காண்பேன். மூட்டையின் கனம் தாங்க மாட்டாமல் துவளும் கொடியுடலை நேராக நிறுத்திவைத்துக் கொள்வதற்கு அவள் என்ன பாடுபடுகிருள் என்பதை யும் கண்டுகொள்வேன். அடிக்கு அடி நான் தளர்வடைவதை எப்படியோ தெரிந்துகொண்டு நொடிப்போது நிற் பாள்.

''ஊக்கத்தைக் கைவிடாதே, கிச்சினே பாலா, இன்னும் கொஞ்ச தூரந் தான் பாக்கி!'' என்று என்னை உற்சாகப் படுத்துவாள்.

ஆனால் அவள் குரல் கணீரென ஒலிக்காது, மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கும்.

மூட்டைகளை அவிழ்த்துக் கொட்டி விட்டு வெற்றுச் சாக்குகளுடன் இறங்கி வருகையில் தானியார் மேலேறி வருவதைக் காண்போம். எப்போதும் போலவே தனியனாய், மௌனியாய், பலகைகள் மீது வலிவுடன் ஒரு சீராக அடியெடுத்து வைத்துச் சற்று நொண்டி நொண்டி நடப்பான் அவன். எதிரெதிரே வந்ததும் தானியார் ஜமீலாவை அழலெழ முறைத்து நோக்குவான். அவளோ, வலியெடுத்த முதுகை நிமிர்த்திக் கொண்டு, கசங்கிய ஆடையை இழுத்து விட்டுக் கொள்வாள். ஒவ்வொரு முறையும் அவன் அவளை அப்பொழுது தான் முதல் தடவையாகப் பார்ப்பது போல வெறித்து நோக்கு

வான். அவள் அவனைக் கண்ணெடுத்தும் பார்க்க மாட்டாள்.

இப்பொழுதெல்லாம் ஜமீலா தானியாரை ஒன்று எள்ளி நகையாடுவதும் இல்லாவிட்டால் அடியோடு புறக்கணிப்பதும் வழக்கமாகப் போய் விட்டன. இது அவளுடைய அவ்வப் போதைய மனநிலையைப் பொறுத்தது. வண்டிகளை ஓட்டியவாறு வழியோடு போய்க்கொண்டே இருப்போம். திடீரென அவளுக்கு ஏதோ மனதில் உதிக்கும். ''வாடா போகலாம்!'' என்று என்னைப் பார்த்துக் கூவி விட்டு ''அஹஹாய்!'' என இரைந்து கொண்டே சாட்டையைத் தலைக்கு மேலே சுழற்றியவாறு குதிரைகளை நாற்கால் பாய்ச்சலில் விரட்டுவாள். நானும் அவளைத் தொடர்வேன். நாங்கள் பெரும் புழுதிப் படலத்தைக் கிளப்பி அதில் தானியாரைத் திக்குமுக்காட வைத்துவிட்டுச் சரேலென முந்தி விடுவோம். அந்தப் புழுதி அடங்க வெகு நேரமாகும். எல்லாம் வேடிக்

கைக்குத்தான் என்றாலும் இந்த மாதிரி வம்பை மற்ற எவனும் பொறுக்க மாட்டான். தானியாரோ மனதில் போட்டுக் கொள்ளவே இல்லை போலக் காணப்படுவான். எங்கள் வண்டிகள் கடகட வென அவன் வண்டியைக் கடந்து செல்லும். கலகல வென நகைத்த வாறு வண்டியில் நின்று கொண்டிருக்கும் ஜமீலாவை அவன் ஏக்கமும் வியப்பும் தோன்ற நோக்குவான். நான் திரும்பிப் பார்ப்பேன். அப்போதும் தானியார் புழுதிப் படலத்தினூடே அவளையே பார்த்துக் கொண்டிருப்பதைக் காண்பேன். அவன் பார்வையில் பெருந்தன்மையும் எல்லாவற்றையும் மன்னித்து விடும் இயல்பும் ததும்பும். அதே சமயம், என்றும் நீங்கா ஏக்கமும் அதில் மறைந்திருப்பது புலப்படும்.

ஜமீலாவின் பரிகாசமோ, புறக்கணிப்போ எதுவுமே தானியாருக்கு ஒரு தரமாவது கோப மூட்டவில்லை. எல்லாவற்றையும் பொறுமையோடு சகித்துக்

கொள்வதாகச் சபதம் ஏற்றவன் போல நடந்து கொண்டான். ஆரம்பத்தில் எனக்கு அவன்மேல் இரக்கமுண்டாயிற்று. ‘‘பாவம், அவன் பரம சாது. அவனை ஏன் நையாண்டி செய்து வதைக்கிருய், ஜேனே?’’ என்று பல முறை ஜமீலாவைக் கடிந்துகொண்டேன்.

‘‘இவனையா?’’ என்று சிரித்துக் கொண்டே தானியார் பக்கம் கையால் ஜாடை காட்டி, ‘‘நானென்ன, சும்மா, விளையாட்டுக்குத்தானே! இந்த அழுமூஞ்சிக்கு ஒன்றும் நேர்ந்துவிடாது, கவலைப்படாதே!’’ என்ருள் ஜமீலா.

பின்பு நானும் ஜமீலாவுக்குச் சளைக்காமல் தானியாரைக் கேலியும் நையாண்டியும் செய்யலானேன். அவனது விந்தையான, உறுத்த பார்வைதான் என் மனத்தைச் சஞ்சலப்படுத்தியது. ஜமீலா முதுகில் தானிய மூட்டையைச் சுமந்து செல்கையில் தான் அவன் எப்படி அவளையே வெறித்து நோக்குவான்! ஒன்றுமட்டும் உண்மை. ஏற்பு

நிலையத்தின் பேரிரைச்சல், இடிபாடு, சந்தை அமளி, கத்திக் கத்தித் தொண்டை கட்டிப் போன ஜனங்கள் அங்குமிங்கும் ஓடிச் சாடுவது, இவை யெல்லாவற்றிற்கும் நடுவில், ஜமீலாவின் நிதானமான, கணக்கான அங்க அசைவுகளும், மென்னடையும் கண்ணைக் கவரத்தான் செய்தன. இந்த அமளி குமளி யெல்லாம் வேறு எங்கோ நிகழ்வது போலிருந்தது அவள் ஒயில்.

அவளைக் கண்ணுரப் பார்க்காமலிருப்பது கடினம்தான். வண்டி விளிம்பிலிருந்து மூட்டையை எடுப்பதற்காக ஜமீலா முதுகை நிமிர்த்தி, இப்புறமும் அப்புறமும் திரும்பி, தோள்களை முன்னே துருத்தித் தலையைப் பின்னே சாய்ப்பாள். அப்போது அவளது எழில் திகழும் கழுத்து அடிவரை வெளித் தெரியும். வெயில் பட்டுச் சிவந்த தலைப் பின்னல்கள் அநேகமாகத் தரையைத் தொடும். தானியார் இளைப்பாறும் பாவனையில் நிலைத்து நிற்பான். பின்பு,

அவள் கொட்டார வாயிலுக்குள் புகும் வரை அவளேயே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண் டிருப்பான். தன்னே ஒருவரும் கவனிக்க வில்லே என்பது அவன் எண்ணம். நா ஞே ஒன்று விடாமல் கண்காணித்துக் கொண்டிருந்தேன். எனக்கு இது கட் டோடு பிடிக்கவில்லே, அவமானமாகக் கூட இருந்தது. தானியார் ஜமீலா வுக்கேற்ற ஜோடி என்று எவ்விதத்தி லும் என்ஞல் எண்ண முடியவில்லேயே.

''இவனே வெறித்து வெறித்துப் பார்க்கிருன் என்ருல் மற்றவர்களேப் பற்றிச் சொல்வதற்கு என்ன இருக்கி றது?'' என்று எண்ணியபோதே என் உடலும் உள்ளமும் அனலாய்க் காந்தின. இன்னும் என்னே விட்டு அகலாத குழந் தைத்தனமான அகங்காரம், பொருமை யின் வடிவில் தழலாய் மூண்டெரிந்தது. தாங்கள் அன்பு செலுத்துபவர்கள் மற் றவர்களிடம் கனிவு காட்டிஞல் குழந் தைகளுக்குப் பொருமை மண்டுமல்ல

வா? ஆகவே, தானியார் மீது எனக்கிருந்த இரக்கமெல்லாம் எங்கேயோ போய் விட்டது. அதற்குப் பதில், எனக்கு உண்டான வெறுப்பில் அவனை யாராவது கேலி செய்தால் எனக்கு மகிழ்ச்சியாயிருந்தது.

ஆயினும் தானியாரை நாங்கள் நையாண்டி செய்வதெல்லாம் ஒரு முறை விபரீதமாக முடிந்து விட்டது. நடந்தது இதுதான். நாங்கள் தானியம் நிரப்பி வந்த சாக்குகளில் ஒன்று மிகப் பெரியது. பதனிடாத முரட்டுக் கம்பளிச் சாக்கு அது. இருநூற்று எண்பது பவுண்டு தானியம் கொள்ளும். இந்த மூட்டையை மட்டும் தனியாகத் தூக்குவது கஷ்டமாகையால் நாங்கள் இருவரும் சேர்ந்து மேலே தூக்கிச் செல்வது வழக்கம். ஒரு நாள் அடிகளத்தில் மூட்டைகளை ஏற்றிக் கொண்டிருந்தபோது, தானியாரைப் பரிகாசம் செய்யத் தீர்மானித்தோம். இந்தப் பிரம்மாண்டமான மூட்டையை அவன் வண்டியில்

ஏற்றி, அதன் மேல் மற்ற மூட்டைகளை அடுக்கிவிட்டோம். வழியிலே ஜமீலாவும் நானும் ஒரு ருஷ்யக் கிராமத்தில் வண்டிகளை நிறுத்திவிட்டு யாருடைய தோட்டத்திலோ புகுந்து சில ஆப்பிள் பழங்களைப் பறித்துக்கொண்டோம். வழி நெடுக எங்களுக்கு ஒரே சிரிப்புதான். ஜமீலாவோ தானியார் மேல் ஆப்பிள்களை விட்டெறிந்தாள். அப்புறம், வழக்கம் போலப் புழுதிப் படலத்தைக் கிளப்பிக் கொண்டு அவனைக் கடந்து சென்றோம். பாறைச் செறிவுக்கு அப்பால் ரயில் பாதைக் கடவை மூடப்பட்டிருந்ததால் அவன் எங்களுடன் சேர்ந்து கொண்டான். அங்கிருந்து ஒன்றாகவே ரயில் நிலையம் சென்றோம். இதற்கிடையே பெரிய மூட்டையைப் பற்றி மறந்தே போனோம். மூட்டைகளை யெல்லாம் சுமந்து சென்று கொட்டி முடித்தபின்பு தான் அதைப் பற்றிய ஸ்மரணை வந்தது. ஜமீலா குறும்புத் தனமாக என்னை முழங்கையால் இடித்துத் தலையசைப்

பால் தானியாரைச் சுட்டிக் காட்டினுள். அவன் வண்டியில் நின்று, பெரிய மூட்டையைச் சற்றுக் கவலேயோடு நோக்கிக் கொண்டிருந்தான். அதை என்ன செய்வது என்று தீர்மானிக்க முயன்முன் போலும். பின்பு எங்கள் பக்கம் பார்வையைத் திருப்பினுன். ஜமீலா சிரிப்பை அடக்குவது அவன் கண்ணில் பட்டு விடவே, விஷயம் என்ன என்று கண்டு கொண்டான். அவன் முகம் குப்பெனச் சிவந்தது.

''காற்சட்டையைத் தூக்கி விட்டுக் கொள். இல்லாவிட்டால் நடுவழியில் நெகிழ்ந்து விழுந்துவிடப் போகிறது!'' என்று கூவினுள் ஜமீலா.

தானியார் எங்களேச் சினந்து நோக்கினுன். பின்பு, என்ன செய்கிருன் என்று நாங்கள் நிதானிப்பதற்குள், வண்டியில் தரதர வென்று மூட்டையை இழுத்து, விளிம்பில் வாக்காக நிறுத்தி, கீழே குதித்து, மூட்டையை ஒரு கையால் சரிப்படுத்திய வாறே

அதை முதுகில் சாய்த்துத் தூக்கிக் கொண்டு நடந்து விட்டான். முதலில் நாங்கள் இதில் விசேஷமாக ஒன்றுமில்லை என்பது போலப் பாசாங்கு செய்தோம். மற்றவர்களுக்கோ, உண்மையிலேயே ஒன்றும் விசேஷமாகப் படவில்லை. ''மூட்டையும் முதுகுமாக ஒருவன் நடக்கிருனுக்கும்; அப்படியே தானே மற்ற எல்லோரும் செய்கிருர்கள்'' என அவர்கள் நினைத்திருப்பார்கள். சாரப் பலகை மேல் தானியார் ஏறத் தொடங்கியதுந் தான் ஜமீலா ஓடிச் சென்று அவனை நெருங்கினுள்.

''மூட்டையைக் கீழே போடு. நான் வேடிக்கை தானே செய்தேன்!'' என்ருள்.

''போ அப்பாலே!'' என்று வெடுக்கெனச் சீறிவிட்டு சாரத்தின் மேல் ஏறினுன் தானியார்.

''சுமந்து போகிறதைப் பாருங்களேன்!'' என்று தன் செயலைச் சரி என்று நிரூபிப்பவள் போல உரக்கக் கூறினுள்

ஜமீலா. இப்போதும் அவள் மெல்லெனச் சிரித்துக் கொண்டு தான் இருந்தாள். ஆனால் அது இயல்பான சிரிப்பல்ல, வலிய வருவித்துக்கொண்டது போலக் காணப்பட்டது.

தானியார் முன்னிலும் பலமாக நொண்டுவது எங்கள் கண்களில் பட்டது. ஐயோ, இது ஏன்தான் எங்கள் நினைவுக்கு வராமலே போய்விட்டது? அந்த மட்டிக் குறும்பு செய்த குற்றத்திற்கு இன்றளவும் என்னால் என்னையே மன்னிக்க முடியவில்லை. அடிமடையனை நான் தூண்டிவிட்டது தான் இந்தக் குறும்பு!

''திரும்பிவிடு!'' என்று வறட்டுச் சிரிப்புடன் கத்தினாள் ஜமீலா. தானியார் திரும்புவ தெப்படி? அவனுக்குப் பின்னே தான் மற்றவர்கள் சென்று கொண்டிருந்தார்களே!

அப்புறம் என்ன நடந்தது என்பதை விவரமாக நினைவுபடுத்திக் கொள்ள என்னால் முடியவில்லை. பெரிய மூட்டை

யின் பாரம் தாங்க மாட்டாமல் குப் புறக் குனிந்து, தொங்கிய தலையும், வெடுக்கெனக் கடித்த உதடுமாக நடந்த தானியாரைக் கண்டேன். காயம்பட்ட காலை ஜாக்கிரதையாகப் பெயர்த்து வைத்தவாறு பையப்பைய ஏறிச் சென் றான் அவன். ஒவ்வோரடி எடுத்து வைக் கும் போதும் விண்ணென்று தெறித்த வலியினால் அவன் தலை சடக்கென்று பின்னுக்குப் போகும். கண நேரம் நின்று நிதானிப்பான். மேலே ஏற ஏற அவனது தள்ளாட்டம் அதிகமாயிற்று. மூட்டையின் கனத்தால் அவன் இப்புற மும் அப்புறமுமாக அசைந்தாடினான். எனக்கா, குலை நடுக்கத்தாலும் வெட் கத்தாலும் நா வறண்டு போயிற்று. திகிலால் மேல் காலெல்லாம் மரத்துப் போய்ப் புல்லரித்தது. என் உடலின் ஒவ்வோர் அணுவும் தானியார் முது கின் மேலிருந்த சுமையின் கனத்தால் நசுங்கி, அவனது காயம்பட்ட காலின் பொறுக்க முடியாத வலியால் துடிதுடித்

தது. மற்ருெரு முறை அவன் நொடித்தான். அவன் தலை சடக்கென்று பின்னுக்குப் போயிற்று. என் கண் முன்னே எல்லாமே ஊசலாடின. இருட்டிக்கொண்டு வந்தது. காலடியில் இருந்து தரை பெயர்ந்துவிட்டது போல மருட்சி உண்டாயிற்று.

எலும்புகள் நொறுங்கிவிடும் போன்ற வலிவுடன் யாரோ என் கையை இரும்புப் பிடியாகப் பற்றிக்கொள்ளவுந்தான் திடுக்குற்றுச் சுயநினைவடைந்தேன். அது ஜமீலா என்பதை நான் உடனே கண்டு கொள்ளவில்லை. அவள் முகம் ஒரேயடியாக வெளிறிப் போயிருந்தது. விரியத் திறந்த விழிகளில் கண்மணிகள் விசாலமாய் அகன்றிருந்தன. சற்றுமுன் தான் சிரித்த அவள் உதடுகள் நெளிந்திருந்தன. இதற்குள் ஏற்பு அதிகாரி உள்பட எல்லோருமே சாரப் பலகையின் அடியில் பாய்ந்து வந்து குழுமிவிட்டார்கள். தானியார் இன்னும் இரண்டடி எடுத்து வைத்தான். மூட்டையைச் சரி செய்து

கொள்ள முயன்றவன் திடீரென ஒரு முழங்காலை மடித்தவாறு துவண்டான். ஜமீலா கைகளால் முகத்தை மூடிக் கொண்டாள்.

''போட்டுவிடு, மூட்டையைக் கீழே போட்டுவிடு!'' என்று கிறீச்சிட்டாள்.

தானியார் விரும்பினால், பின்னே வருபவர்களை மல்லாக்காகத் தள்ளி விடாமல், பக்கவாட்டில் மூட்டையை நழுவ விட்டிருக்கலாம். ஆயினும் எதனாலோ தெரியவில்லை, அவன் அதைக் கீழே போட வில்லை. ஜமீலாவின் குரலைக் கேட்டதுமே சடக்கென முன்னே சாய்ந்தான், காலை விறைப்பாக நிமிர்த்திக் கொண்டான், இன்னேரடி எடுத்து வைத்தான், மீண்டும் தள்ளாடத் தொடங்கினான்.

''அட கீழே போட்டுத் தொலையேன்டா நாய் மகனே!'' என்று உறுமினான் அதிகாரி.

''போட்டுவிடப்பா!'' என எல்லோரும் கத்தினார்கள்.

இம்முறையும் தானியார் சுதாரித்துக் கொண்டு அசையாமல் நின்ருன்.

''ஊஹூம். போட மாட்டான்!'' என்று தணிந்த குரலில் தீர்மானமாகச் சொன்னுன் ஒருவன்.

மூட்டையும் தானுமாகப் புரண்டு விழுந்தாலொழிய அவன் தாளுக அதை நழுவ விட மாட்டான் என்பதை எல்லோருமே — சாரத்தில் அவன் பின்னே நடந்தவர்கள், கீழே நின்றவர்கள் எல்லோருமே — புரிந்து கொண்டார்கள். இடுகாடு போல எங்கும் ஒரே மௌனம். சுவருக்கு மறுபுறம் எஞ்சின் கீச்சொலியில் சங்கூதியது.

பிரமை பிடித்தவன் போல ஆடி அசைந்து கொண்டு, சவுங்கும் சாரப் பலகைமேல் அடியெடுத்து வைத்து, மழு வாய்க் கொதிக்கும் இரும்பு முகட்டை நோக்கிப் பையப்பைய மேலே நகர்ந்தான் தானியார். இரண்டடிக்கொரு தரம் நின்று நிதானித்துச் சமநிலைக்கு வருவான். பலத்தை யெல்லாம் திரட்

டிக்கொண்டு இன்னும் மேலே செல்வான். பின்னல் வந்தவர்கள் அவன் அடிவைப் பதற்கிசைய நடப்பதும் அவன் நிற்கும் போதெல்லாம் நிற்பதுமாக மேலேறி ஞர்கள். இப்படி நின்று நின்று மேல் நடப்பது அவர்களுக்குக் களைப்பூட்டி யது, அவர்களது திராணியைக் கடைசிச் சொட்டுவரை பிழிந்தெடுத்துவிட்டது. என்ருலும் ஒருவரும் சீறி விழவில்லை, திட்டவில்லை. ஏதோ மாயக் கயிற்ருல் பிணைப்புண்டவர்கள் போலவும், அபாய கரமான வழுக்குப் பாதையில் நடப் பவர்கள் போலவும், அதிலே ஒவ்வொரு வன் உயிரும் மற்றவன் உயிரைச் சார்ந் திருப்பது போலவும், சுமையும் முதுகு மாக மெல்ல மெல்ல முன்னே சென்ருர் கள். அவர்களது மௌனத்திலும், சலிப் பூட்டும் தள்ளாட்டத்திலும் ஒரே மாதிரி யான துயரந்தோய்ந்த லயம் திகழ்ந் தது. தானியாரின் பின்னே ஓரடி, மற் ருேரடி, பின்னுமோரடி. அவனை அடுத் தாற்போலச் சென்ற போர்வீரன் மனைவி,

கண்ணீரை அடக்கும்பொருட்டுப் பற்களை இறுகக் கடித்துக்கொண்டு, எத்தகைய அனுதாபத்துடனும் பிரார்த்தனையுடனும் அவனை உளங்கனிந்து நோக்கினுள்! அவள் கால்கள் தொய்ந்து துவண்டு பின்னிக்கொண்டன. எனினும் அவள் அவன் பொருட்டுப் பிரார்த்தனை செய்தாள்!

ஆயிற்று. இன்னும் கொஞ்சந்தான் பாக்கியிருந்தது. அதற்குள் தானியார் பின்னுமொரு முறை தள்ளாடினுன். அவனது காயமடைந்த கால் அவனுக்கு இணங்கிவர மறுத்துவிட்டது. மூட்டையை மட்டும் அவன் நழுவ விட்டிருக்காவிட்டால் அதே நொடியில் சரிந்து விழுந்திருப்பான்.

''ஓடு! பின்னுலிருந்து பிடித்துக் கொள்!'' என்று என்னைக் கூவி விரட்டினுள் ஜமீலா. பின்பு தானும் கைகளை அகல விரித்துக்கொண்டு நின்ருள். இப்படிச் செய்வது தானியாருக்கு உதவியாயிருக்கும் என எண்ணினுள் போலும்.

நான் தடதட வென்று சாரத்தின் மேல் பாய்ந்தோடினேன். ஜனங்களையும் மூட்டைகளையும் முழங்கைகளால்இடித்து விலக்கிக் கொண்டு ஓடி, ஒரு வகையாக தானியாரை நெருங்கிவிட்டேன். அவன் கையிடுக்கு வழியாக என்னைப் பார்த்தான். சொட்டச் சொட்ட வியர்த்திருந்த அவனது கருண்ட நெற்றியில் உதிர நாளங்கள் விம்மிப் புடைத்திருந்தன. இரத்தச் சிவப்பேறிய கண்களால் என்னைக் குடைபவன் போல நெருப்பெழ வெறித்து நோக்கினான். சாரத்தில் விழுந்திருந்த மூட்டையைச் சரியாமல் பிடித்துக் கொள்ளப் போனேன்.

''போடா!'' எனக் குரூரமாகச் சீறிவிட்டு அப்பால் நகர்ந்தான்.

கடைசியில் அவன், மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க, கைகள் தொய்ந்து தொங்க, நொண்டி நொண்டி நடந்து ஒரு விதமாகக் கீழே வந்து சேர்ந்தான். கூடியிருந்தவர்கள் அவனுக்கு வழிவிட்டு

இரு புறமும் விலகிக்கொண்டார்கள். அதிகாரிக்கு மாத்திரம் பொறுக்க முடிய வில்லே.

''ஏனப்பா தம்பீ, உனக் கென்ன மூளைக் கோளாரு? நானென்ன, மனிதனில் லேயா? ஒரு மூட்டைத் தானியத்தைக் கீழேயே அவிழ்த்துக் கொட்டிஞல் வேண்டாமென்று சொல்லுவேன்? ஊம்? இவ்வளவு பெரிய மூட்டைகளே ஏன் சுமந்து செல்கிருய்?'' என்று இரைந் தான்.

''அது என் பாடு'' என்று நிதானமான குரலில் விடை யளித்தான் தானி யார்.

ஒரு பக்கமாகத் துப்பி விட்டு வண்டியை நோக்கி நடந்தான். நாங்கள் பார்வையை நிமிர்த்தவே இல்லே. எங்க ளுக்கு ஒரே வெட்கம், எங்கள் அசட்டு விளேயாட்டை விணேயாக எடுத்துக் கொண்டதற்காக தானியார் மேல் ஒரே கோபம்.

இரவு முழுவதும் வாயே திறக்காமல்

வண்டிகளை ஓட்டிக் கொண்டு சென்றோம். வாய்மூடித்தனம் தானியாரின் இயல்பான குணம் ஆகையால் அவன் எங்கள் மேல் இன்னும் கோபமாயிருக்கிருஞ அல்லது நடந்த சம்பவத்தை அடியோடு மறந்து விட்டாஞ என்று புரியவில்லை. எங்களுக்கு மட்டும் ஒரே ஏக்கமாயிருந்தது. மனச்சாட்சி உறுத்தியது.

மறு நாள் காலை களத்தில் தானியம் ஏற்றிக் கொண்டிருந்தபோது ஜமீலா அந்த ஆக்கங்கெட்ட சாக்கை ஒரு கையால் பற்றி அதன் ஓரத்தை அழுத்தி மிதித்துக்கொண்டு டர்ரென்று கிழித்து விட்டாள்.

எடை போடுபவள் காலடியில் கிழிந்த சாக்கைக் கடாசி, "இந்தா, உன் சாக்கு! நீயே வைத்துக்கொள்! இனிமேல் இந்த மாதிரிச் சனியன்களை எங்கள் தலையில் கட்ட வேண்டாம் என்று குழுத்தலைவனிடம் சொல்லு!" எனக் கத்திஞள்.

''அட நீ என்னம்மா? என்ன நடந்தது?''

''ஒன்றுமில்லை!''

மறு நாள் முழுவதும் தானியார் தனக்கு மனத்தாங்கல் இருப்பதாகவே காட்டிக் கொள்ளாமல், எப்போதும் போலவே நிதானமும் மௌனமுமாக இருந்தான். நொண்டல் மாத்திரம் வழக்கத்தை விட அதிகமாகக் காணப் பட்டது, அதிலும் மூட்டை தூக்கும் போது விசேஷமாக. முந்தின நாள் மாலை அவன் காயம் மறுபடியும் பச் சைப்புண்ணாகிவிட்டது போலும். இது அவனுக்கு நாங்கள் இழைத்த குற்றத் தை ஓயாது நினைவுபடுத்திக் கொண் டிருந்தது. அவன் மட்டும் சிரித்தோ கேலி செய்தோ இருந்தானானால் எங்கள் மனச் சுமை லேசாகியிருக்கும். எங்கள் பிணக் கும் அத்துடன் தீர்ந்து போயிருக்கும்.

ஜமீலவும் ஒன்றும் விசேஷமாக நடந்து விடவில்லை என்று காட்டிக்கொள்

ளவே முயன்றாள். ரோசக்காரியானபடி யால் எப்போதும் போலவே சிரித்தாள். ஆயினும் அவளது மனக்குழப்பம் துலக்கமாகத் தெரிந்தது.

ரயில் நிலையத்திலிருந்து நாங்கள் வீடு திரும்பும்போது நேரமாகிவிட்டது. தானியாரின் வண்டி முன்னே சென்றது. இரவு அற்புதமாகக் காட்சியளித்தது. மிகத் தொலைவிலும், அதே சமயம் மிக அருகிலும் தென்படும் தாரகைகள் அசாதாரணமாகச் சுடர் வீசும் இந்த ஆகஸ்டு மாத இரவுகளை அறியாதார் யார்? ஒவ்வொரு விண்மீனும் தனித் தனியாகத் தெரிந்தது. அதோ ஒரு நட்சத்திரம்! அதன் விளிம்புகள் உறைபனிச் சிதல்கள் படிந்து கெட்டியாகி விட்டவை போல ஒளிர்ந்தன. உறைந்த பனித் துணுக்கு போன்று பளிச் பளிச் சென்று ஒளிக் கதிர்கள் மினுமினுக்க, குழந்தை போன்ற எளிமையுடன் கருவானிலிருந்து தரையை வியந்து நோக்கியது அது. பாறைச்

செறிவுக்கிடையே வண்டியில் போய்க் கொண்டே அந்த விண்மீனைப் பதித்த கண் எடுக்காமல் பார்த்தேன். வீடு திரும்பும் உற்சாகத்தில் குதிரைகள் விரைவாகப் பாய்ந்தோடின. வண்டிச் சக்கரங்களுக்கு அடியில் கல்தரை கர கரவென்று நெறு நெறுத்தது. ஸ்தெப்பி வெளியிலிருந்து வீசிய காற்று, காஞ் சிரைப் பூக்களின் கசந்த நெடியையும் பனி படிந்த முற்றிய கோதுமையின் நறுமணத்தையும் அள்ளி வந்தது. இந்த வாசங்களும், பாதையின் தார் வாடை யும், குதிரைகளின் வியர்வை நாற்றமும் எல்லாம் சேர்ந்து எங்களுக்குப் போதை யேற்றின.

முட்புதர் அடர்ந்த பாறைகள் ஒரு புறம் சாலைமீது கவிந்திருந்தன. மற் றொரு புறம், கீழே வெகு தொலைவில், ரோஸ் வில்லோக்களும் பாப்லார் மரங் களும் மண்டியிருந்த செறிவினிடையே, அலையடித்துப் பாய்ந்தது ஓய்வறியாக் குர்க்குரேவு ஆறு. இருந்தாற் போ

லிருந்து ஏதாவது ரயில் வண்டி, தொலை வில் தெரிந்த பாலத்தின் மீது கிடு கிடாய்த்துச் செல்லும். அது நெடுந்தூரம் சென்று மறைந்த பின்னும் வெகுநேரம் வரை அதன் சக்கரங்களின் கடகடப்பு அதன் பின்னே அதிர்ந்து கொண்டிருக் கும்.

அந்தக் குளிர்ந்த நேரத்தில் வண்டி யில் செல்வதும், விம்மி விம்மித் தணி யும் குதிரை முதுகுகளைப் பார்ப்பதும், ஆகஸ்டு இரவின் ஒலிகளைச் செவிமடுப் பதும், அதன் மணங்களை முகர்வதும் இன்பமா யிருந்தன. ஜமீலா எனக்கு முன்னே வண்டியில் சென்ருள். கடி வாளவார்களைத் தொய்ய விட்டுவிட்டு, மெல்லிய குரலில் பாடியவாறே இரு புறமும் பார்வையைச் செலுத்தினுள். எங்கள் மௌனம் அவள் நெஞ்சைச் சுமைபோல் அழுத்திக் கொண்டிருந்தது என்பதைப் புரிந்துகொண்டேன். இத் தகைய இரவில் வாய் திறவாமலிருப்பது

முடியவே முடியாது. பாடுவதற்கென்றே இயைந்தது அல்லவா இந்த இரவு!

ஜமீலா பாடத் தொடங்கினுள். தானியாருடன் முன்போலவே கலகலப் பாயிருக்க இப்படியாவது ஏதேனும் வழி கிடைக்கிறதா பார்ப்போம் என்று நினைத் தாளோ, அல்லது அவனுக்குக் குற்ற மிழைத்த தனது நெஞ்சக் குறுகுறுப்பை அகற்ற முயன்ருளோ, தெரியாது. குறும் புத்தனம் தொனிக்கும் கணீரென்ற குரல் அவளுக்கு. ''நீ செல்லும்போதினிலே, கைக்குட்டையை ஆட்டிடுவேன்'' என் றும் ''ஆசை மச்சான் ஏகிவிட்டான் அளவில்லாத தூரம்'' என்றும் வருவன போன்ற, வழக்கமாகப் பாடும் கிராமியப் பாட்டுக்களையே பாடினுள். அவளுக்கு எத்தனையோ பாட்டுக்கள் தெரியும். எளிமையாக, உணர்ச்சி ததும்ப அவள் அவற்றைப் பாடும் விதம், கேட்க இனி மையா யிருக்கும். பாடிக் கொண்டே போனவள் சட்டென்று நிறுத்தி, தானி யாரை விளித்தாள்.

''உன்னைத்தானே, ஏய், தானியார்! உனக்கு ஏதாவது பாட வருமா? நீ ஜிகித்தா, இல்லை வேறு யாரேனுமா?'' என்று உரக்கக் கூவினாள்.

அவன் இதைக் கேட்டுக் குழப்ப மடைந்து, கடிவாளத்தை இழுத்துப் பிடித்தவாறே திரும்பி, ''நீயே பாடு, ஜமீலா. நான் கேட்டுக் கொண்டிருக்கி றேன். நன்றாகக் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்'' என்று பதிலளித்தான்.

''எங்களுக்கென்ன, கொடுப்பதற்குக் காதுகள் இல்லை யென்று நினைத்தாயோ? ஆளைப் பாரப்பா ஆளை! இஷ்டமில்லை யானால் பாட வேண்டாமே! என்ன, கட்டாயமா?'' என்று கிண்டலும் குத் தலுமாக மொழிந்த ஜமீலா, மீண்டும் பாடத் தொடங்கினாள்.

அவனைப் பாடும்படி அவள் ஏன் கேட்டாளோ, யார் கண்டது? சும்மா தான் கேட்டாளோ, இல்லை, அவனுடன் எப்படியாவது பேச்சுக் கொடுக்க வேண்

டும் என்பதற்காகவோ! பேச்சுக் கொடுப்பதற்காகத்தான் இருக்கும். ஏனெனில் கொஞ்ச தூரம் போனதும் அவள் மீண்டும் அவனைப் பேச்சுக் கிழுத்தாள்.

''ஏனப்பா, தானியார்! யார் மேலாவது நீ ஆசை கொண்ட துண்டா? ஊம்?'' என்று வினவியவள், கலகலவென நகைத்தாள். அவன் பதிலே பேசவில்லை. ஜமீலாவும் மௌனத்தில் ஆழ்ந்தாள்.

''போயும் போயும் பாடச் சொல்வதற்குப் பிடித்தாளே ஆளை!'' என்று நான் நினைத்துக்கொண்டேன்.

ஆறு சாலைக்குக் குறுக்காகச் செல்லுமிடத்தில் குதிரைகளின் வேகம் குறைந்தது. கடவை மீது பரப்பிய, நனைந்த கற்கள் வெள்ளிபோல ஒளிர்ந்தன. குளம்புகள் அவற்றில் பட்டு டக் டக் கென ஒலித்தன. கடவையைத் தாண்டி மீண்டும் சாலை யேறியதும் தானியார் குதிரைகளைச் சொடேரென அடித்து விரட்டித் திடீரென்று தயங்கிய

குரலில் பாடத் தொடங்கினன். நொடிகளில் வண்டி தூக்கித் தூக்கிப் போட்ட போதெல்லாம் அவன் குரல் விட்டுவிட்டு ஒலித்தது.

''எந்தன் மலைகாள் — என் வெண்
நீல மலைகாள்,
தந்தையர் நாடே — அவர்
முந்தையர் நாடே!''

இந்த வரிகளைப் பாடி முடிப்பதற்குள் அவன் குரல் கம்மிவிட்டது. கமறித் தொண்டையைச்சரிப்படுத்திக்கொண்டு, நெஞ்சிலிருந்து எழுந்த, ஆழ்ந்த, சற்றுக் கரகரத்த் குரலில் அடுத்த இரண்டு அடிகளைப் பாடினன்.

''எந்தன் மலைகாள் — என் வெண்
நீல மலைகாள்,
சந்தத் தொட்டிலே — என் வாழ்வு....''

இங்கே அவன், எதனலோ அரண்டு விட்டவன் போல, மறுபடியும் சடக்

கெனப் பாட்டை நிறுத்தி விட்டு, மௌனத்தில் ஆழ்ந்தான்.

அவன் பட்ட கூச்சத்தை நான் நன்ருகக் கண்டு கொண்டேன். ஆயினும் தயக்கமும் அச்சமும் தொனிக்க அவன் பாடிய விதம் உள்ளத்தை உருக்கு வதாக இருந்தது. அவனுக்கு நல்ல குரல்தான் போலும். பாடியபோது அவன் தான் தானியார் என்று அடையாளங் கண்டுகொள்ளவே முடியவில்லை.

''ஆகாகா, எவ்வளவு நன்ருய்ப் பாடுகிருன் பாரேன்!'' என்றேன் நான், வியப்பை அடக்க மாட்டாமல்.

''இவ்வளவு காலமாக எங்கே அப்பா ஒளிந்து கொண்டிருந்தாய்? ஊம், பாடு. ரொம்ப நன்ருய்ப் பாடுகிருய், பாடு'' என்று ஜமீலாவும் மகிழ்ச்சி பொங்கக் கூறினுள்.

பாறைச் செறிவைக் கடந்துவிட்டோ மாதலால் முன்னே வெட்ட வெளி தொடங்கியது. பள்ளத்தாக்கிலிருந்து மெல்லிளங் காற்று வீசியது. தானியார்

மீண்டும் பாடலுற்றான். முன் போலவே நடுக்கமும் தயக்கமுமாகவே தொடங்கினான் எனினும், வர வர அவன் குரல் கணீரென ஒலித்து மலைச் செறிவை நிறைத்து, தொலையிலிருந்த நெட்டுப் பாறைகளில் பட்டு எதிரொலித்தது.

பாட்டின் இசையிலிருந்த அனல் பறக்கும் உணர்ச்சி வேகந்தான் எனக்கு எல்லாவற்றையும் விடப் பெருவியப் பூட்டியது. அதை எப்படி விவரிப்பதென்றே எனக்கு அப்பொழுது தெரியவில்லை, இப்பொழுதும் தெரியாது. அது குரல் மட்டுந்தானா அல்லது அதனிலும் மகத்தான, உள்ளத்தின் அடித் தளத்தினின்றும் பொங்கி வந்த, கேட்போர் இதயத்திலும் அதே போன்ற உணர்ச்சித் துடிப்பை ஏற்படுத்தக்கூடிய, கேட்போரது மனத்தின் அடியாழத்தில் புதைந்திருக்கும் எண்ணங்களுக்கு ஜீவன் ஊட்டும் திறன் வாய்ந்த ஏதேனுமா என்பதை என்னால் திட்டமாகக் கூற முடியாது.

தானியாரின் பாட்டை ஏதாவது ஒரு வகையில் மீண்டும் படைக்க மட்டும் என்னல் கூடுமானல்! அதிலே சொற்கள் அநேகமாக இல்லை. எனினும் ஆழ்ந்த மானிட உள்ளத்தை அது திறந்து காட்டியது. அதற்கு முன்போ பின்போ அம் மாதிரிப்பாட்டை நான் ஒருபோதும் கேட்டதில்லை. பாட்டின் இசையமைப்பு கிர்கீஸும் இல்லை, கஸாஃகும் இல்லை. ஆயினும் இருவகை இசைகளின் அம்சங்களும் அதில் பொருந்தியிருந்தன. ஒருவருக்கொருவர் தொடர்புள்ள இரண்டு இனங்களைச் சேர்ந்த மக்களின் இசைகளிலிருந்து மிகச் சிறந்த அம்சங்களைப் பொறுக்கி, அவற்றைத் தன் சுயகற்பனையால் ஒன்றியைத்து நிகரற்ற பாட்டாக ஆக்கியிருந்தான் தானியார். மலைகளுக்கும் ஸ்தெப்பி வெளிகளுக்கும் உரிய பாட்டு அது. சில சமயம் கிர்கீஸ் மலைத் தொடர் போல வானுற ஓங்கியெழும்; மறு சமயம் கஸாஃக் ஸ்தெப்பி வெளிகள் போல அகன்று பரந்து விரியும்.

பாட்டைக் கேட்கக் கேட்க எனக்கு ஆச்சரியமான ஆச்சரியமில்லை. ''அடேடே, இப்படிப்பட்டவனு இந்த தானியார்! யார்தான் எண்ணியிருக்க முடியும்?'' என்று வியந்தேன்.

வண்டித் தடம் பதிந்த மெத்தென்ற பாதை வழியே நாங்கள் ஸ்தெப்பி வெளியைக் கடந்து கொண்டிருந்தோம். தானியாரின் குரல் மேலும் மேலும் ஓங்கி ஒலித்துப் புதிது புதிதான இசைகளைப் பொழிந்தது. அவை ஒன்றன்பின் ஒன்ருகத் தொடர்ந்து வந்த இழைவு உண்டே, அற்புதம். ''இவனிடம் இவ்வளவு இசைச் செல்வமா குவிந்து கிடக்கிறது? என்ன அதிசயம் நிகழ்ந்து விட்டது இவனுக்குள்ளே? ஏதோ இந்த நாளை, இந்த நேரத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தவன் போலல்லவா வெள்ளமாய் இசையைப் பெருக்குகிருன்!'' என்று நான் வியப்பே வடிவாய் எண்ணமிட்டேன்.

ஜனங்கள் அவனைப் புரிந்துகொள்ள

முடியாமல் கேலி செய்யக் காரணமா யிருந்த அவனது விசித்திர சுபாவம்— கனவுவதும், தனிமையை நாடுவதும், பேசாதிருப்பதும் — எத்தகையது என் பது எனக்கு அந்தக் கணமே விளங்கி விட்டது. மாலை வேளைகளைப் 'பார் வைக் குன்'றின் மேலும், இரவு முழு வதையும் ஆற்றின் கரையிலும் அவன் தன்னந்தனியனாய்க் கழித்தது ஏன் என் பதும், மற்றவர்களுக்குக் கேட்காத ஒலிகளை அவன் எப்போதும் காதாரப் பருகுவது எப்படி என்பதும், திடீரென அவன் கண்கள் சுடர்விடுவதும் சாதாரண மாக நேராயிருக்கும் அவன் புருவங் கள் நெரிவதும் ஏன் என்பதும் எல்லாம் எனக்குத் தெளிவாகி விட்டன. காத லில் ஆழ்ந்து திளைப்பவன் இவன். அதுவும் மற்றொருவன் மீது கொண்ட காதல் அல்ல, அதனின்றும் வேறானது, பெருமாண்பு வாய்ந்தது — வாழ்வின் மீது, உலகின் மீது அவன் கொண் டிருந்த காதல் அது — என்று எனக்குப்

பட்டது. இந்தக் காதலை அவன் தனக்குள்ளேயே, தன் இசையிலே மறைவாக வைத்துப் பேணினான். அதன் பொருட்டே வாழ்ந்தான். இத்தகைய ஈடுபாடு இல்லாதவன் என்னதான் பிரமாதமான குரல் வாய்க்கப் பெற்றிருந்தாலும் இவனைப் போலப் பாடியிருக்கவே முடியாது.

சரி, பாட்டு முடிந்துவிட்டது போலும் எனத் தோன்றியபோதே, உளம் சிலிர்க்க வைக்கும் புதிய இசையலையொன்று எழுந்து பரவி, உறங்கிக் கிடந்த ஸ்தெப்பி வெளியைத் துயிலுணர்த்தியது. கொஞ்சலாக வருடுவது போன்று இன்பக் கிளுகிளுப்பூட்டிய பாடகனின் அருமை நாட்டு இசையை நன்றியுடன் செவிமடுத்தது ஸ்தெப்பி வெளி. அறுவடைக்குக் காத்திருந்த சாம்பல் நிறமான முற்றிய கோதுமைக் கதிர்கள், ஏரியின் நீர்மட்டம் போன்று அலையெழும்பின. புலர்போதின் மங்கிய ஒளி வயலின் ஒரு கோடியிலிருந்து மறு கோடிவரை தத்திப் பாய்ந்தது. அரை

வை இயந்திரத்தின் அருகே பெருஞ்செறி வாக மண்டியிருந்த வயதான வில்லோச் செடிக் கூட்டம் இலைகளைச் சிலுப்பியது. ஆற்றின் அக்கரையில் வயல் வேலை செய்வோர் மூட்டியிருந்த நெகிடிகள் அணையும் தறுவாயிலிருந்தன. ஆற்றின் கரையோரமாகக் குதிரை சவாரி செய்து கொண்டு கிராமத்தை நோக்கி ஓசைப்படாமல் வெகு விரைவாய்ச் சென்றது ஒரு நிழலுருவம். பழத்தோட்டங்களுக்குப் பின்னே மறைவதும், மீண்டும் வெளிப்படுவதுமாக அது முன்னேறியது. ஆப்பிள்களின் நறுமணம், பூத்த மக்காச் சோளத்தின் இதமான, பால்போன்ற வாசனை, உலரும் வறட்டிகளின் வாடை எல்லாம் ஒருங்கே காற்றில் நிறைந்து கமழ்ந்தன.

தானியார், நெடு நேரம் தன்னை மறந்து பாடினான். ஆகஸ்டு இரவு ஒரேயடியாக மோகித்துப் போய், மௌனமாக அவ்விசையைப் பருகிற்று. இந்த அற்புத மோகனம் எங்கே சிதைந்து

போய் விடுமோ என அஞ்சுபவை போன்று குதிரைகள் கூட நெடு நேர மாகவே மெதுநடை போட்டன.

உச்ச ஸ்தாயியில் கார்வை கொடுத்து இசைத்துக் கொண்டிருந்த போதே தானியார் நட்ட நடுவில் பாட்டை நிறுத்திவிட்டுக் குதிரைகளை டுர்ர்யோ வென உசுப்பிச் சாட்டையால் விளாறி ஞன். அவை சிட்டாய்ப் பறந்தன. ஜமீ லாவும் அவன் பின்னே நாற்கால் பாய்ச் சலில் குதிரைகளை விரட்டுவாளாக்கும் என்று நினைத்து அவளைத் தொடர்ந்து செல்ல ஆயத்தமானேன். அவளோ, அசையவே யில்லை. காற்றில் எங்கோ மிதந்து கொண்டிருந்த துடிப்புள்ள இசை யொலிகளை இன்னும் உற்றுக் கேட்பவள்போன்று தோள்மேல் சாய்த்த தலையுடன் அப்படியே உட்கார்ந்திருந் தாள். தானியார் போய் விட்டான். கிராமம் போய்ச் சேரும்வரை நாங்கள் இருவரும் ஒரு வார்த்தைகூடப் பேச வில்லை. பேசுவதற்குத் தேவை தான்

என்ன இருந்தது? சொற்களால் எப்போதும், எல்லாவற்றையும் வெளியிட முடிகிறதா என்ன?...

அந்த நாள் முதல் எங்கள் வாழ்க்கையிலே ஏதோ மாறுதல் ஏற்பட்டுவிட்டது போலத் தென்பட்டது. மிக அருமையான, மிக உவப்பான நிகழ்ச்சியொன்றை இப்போதெல்லாம் நான் இடைவிடாது எதிர்பார்க்கலானேன். காலையில் அடிகளத்தில் வண்டிகளில் சுமை யேற்றிக் கொள்வோம், வண்டிகளை ஓட்டிக் கொண்டு ரயில் நிலையம் செல்வோம், பின்பு, திரும்புகாலில் தானியார் பாடுவதைக் கேட்கும் ஆவலுடன், மள மள வென்று வேலையை முடித்துவிட்டுப் புறப்பட்டுவிடுவோம். அவனது குரல் என்னுள் குடிகொண்டது. ஒவ்வோர் அடியிலும் அது என்னைத் தொடர்ந்தது. தளைபூட்டிய குதிரைகளை அவிழ்த்து வரும்பொருட்டுக் காலையில் பனித்த புல்தரை மீது நான் ஓடியபோதும், இளஞாயிறு மலை

களுக்குப் பின்னிருந்து எழுந்து இன்னகையுடன் எனக்கு முகமன் தெரிவித்த போதும், தானியாரின் குரல் என்னுள்ளேயே இசைத்தது. தானியம் தூற்றும் முதியவர்கள் காற்றில் விசிறி யிரைத்த கோதுமை மணிகள் பொன் மழை போலப் பொழியுங்கால் உண்டாகும் மெல்லிய சலசலப்பிலும், ஸ்தெப்பி வெளிக்கு மேலே, மிக மிக உயரே, தன்னந்தனியாக வட்டமிடும் பருந்தின் ஒய்யாரமான பறப்பிலும், நான் அந்தக் குரலைச் செவிமடுத்தேன். நான் பார்த்தவை, கேட்டவை, யாவற்றிலுமே தானியாரின் இசை ஒலிப்பது போல எனக்குப் பிரமை யுண்டாயிற்று.

ஒவ்வொரு மாலையும், பாறைச் செறிவின் இடை வழியாகத் திரும்புகையில், ஏதோ வேறு உலகத்திற்கு வந்துவிட்டது போல எனக்குத் தோன்றும். கண்களைப் பாதி மூடியபடியே தானியாரின் பாட்டைக் கேட்கும்போது, குழந்தை முதல் எனக்குப் பழக்கமான, விந்தை

விந்தையான காட்சிகள் என் முன் எழும். ஒரு சமயம், இளவேனிற் காலத்தில் புடை பெயரும் மென்மையான புகை நீல மேகங்கள் கூடாரங்களுக்கு மேல் வெகு உயரத்தில் விரைந்து செல்லும்; மறு சமயம், குதிரைக் கூட்டங்கள், கோடைகால மேய்ச்சல் நிலங்களை நோக்கித் தரை அதிரப் பாய்ந்தோடும்; நீண்ட சுட்டி மயிரும், விழிகளில் கருந் தழலுமாக விளங்கும் ஆண் குதிரைக் குட்டிகள், பெண் குதிரைகளை மிடுக் காக முந்தும்; வேறொரு சமயம், எரி மலை வாயிலிருந்து பொங்கி வழியும் அனற்குழம்பு போல, செம்மறி மந் தைகள் குன்றுகள் மீது மெல்லென இழிந்து பரவும்; பின்னொரு சமயம், வெள்ளென நுரைத்த நீர் கண்ணைப் பறிக்க, மலைமீதிருந்து அருவி பாய்ந்து விழும்; பிறிதொரு சமயம், ஆற்றின் அக்கரையில் அடர்ந்து மண்டிய ஈர்க்கம் புல் புதர்களுக்குப் பின்னே ஞாயிறு பை யத் தாழ்ந்து மறையும்; தொடுவானின்

தழலும் விளிம்போரமாகத் தன்னந்தனியே குதிரை மீது செல்பவன் அதைத் துரத்திப் பிடிப்பவன் போலக் காணப் படுவான்; அவன் கையை நீட்ட வேண்டியது தான், பரிதியைத் தொட்டுவிட முடியும் எனத் தோன்றும்; பின்னர் அவனும் புதருக்குப் பின் மங்குலில் மறைந்து போவான்.

ஆற்றின் மறுகரையில் நெடிது பரந்திருக்கிறது கஸாஃக் ஸ்தெப்பி. எங்கள் மலைகளை இரு மருங்கிலும் தூர விலக்கி இடம் செய்துகொண்டு, கடுகடுப்புடன், வெறுமையாகப் படுத்திருக்கிறது அது.

போர் மூண்டபின்பு வந்த மறக்க முடியாத கோடை காலத்திலே ஸ்தெப்பி வெளி எங்கும் தீப்பட்டெரிந்தது; போர்க் குதிரைக் கூட்டங்கள் எழுப்பிய வெம்புழுதிப் படலம் மூடுபனி போன்று படர்ந்து அதன் மீது கவிந்தது. எல்லாத் திசைகளிலும் குதிரைகளை

நாற்கால் பாய்ச்சலில் விரட்டிச் சென்றனர் வீரர்கள். சிட்டாய்ப் பறந்த குதிரைமீது ஏறி வந்த கஸாஃக் ஒருவன் எதிர்க்கரையிலிருந்து இடையர்கள் போல அடித்தொண்டையிலிருந்து குரலெழுப்பிக் கூவியது எனக்கு நினைவிருக்கிறது.

''கிர்கீஸியர்களே! ஏறுங்கள் குதிரைகள் மேல்! எதிரி வந்துவிட்டான்!'' எனக் கத்திவிட்டு, புழுதிப் படலத்தைக் கிளப்பிக்கொண்டு பாய்ந்து மறைந்தான் அவன். அவன் சென்ற திசையிலிருந்து அனல்காற்று அலையடித்து வந்தது.

இந்த அறைகூவலை ஏற்க எல்லோரும் விரைந்தனர். எங்களது முதல் குதிரைப் படைகள் மலைகள் மேலிருந்து இறங்கிப் பள்ளத்தாக்குகளைக் கடந்து செல்கையில் ஆழ்ந்த அதிரொலி எழுந்தது. ஆயிரக் கணக்கான அங்கவடிகள் சடசடத்தன. ஆயிரக் கணக்கான ஜிகித்கள் குதிரைகள் மீது ஏறிப் போர்க்களம் சென்றனர். அவர்களுக்கு முன்னே,

கோல்களில் வீசிப் பறந்தன செங்கொடிகள். பின்னே, குதிரைக் குளம்புகளினின்றெழுந்த தூசிக்கு இப்பால், அவர்களது தாயர், மனைவியரின் துயர் பொங்கும் பேரழுகை தரை யதிர ஒலித்தது. ''ஸ்தெப்பி வெளி உங்களைக் காப்பதாக! நமது வீரன் மநாஸின்* ஆவி உங்களைக் காப்பதாக!'' என்று அரற்றினர் அம்மாதர்.

போருக்குப் போனவர்கள் விட்டுச் சென்றவை, துன்புறுத்தும் குளம்புத் தடங்கள் மட்டுமே.

நிலவுலக எழிலும் கவலையும் ஆர்ந்த இம்மாபெரும் ஞாலத்தைத் தன் பாட்டுக்கள் வாயிலாக என்முன் திறந்து காட்டினுன் தானியார். இவற்றை அவன் எங்கே கற்றுக்கொண்டான்? யாரிடம் கேட்டுப் பயின்றுன்? தாய் நாட்டை நினைந்து பல ஆண்டுகளாக ஏங்கித் தவித்

---

* மநாஸ் — கிர்கீஸிய இதிகாசத்தில் வரும் பெருவீரன்.

தவன், தாய் நாட்டின் மீது கொண்ட அன்பு காரணமாகத் துன்புற்றவன் மட்டுமே அதை இவ்வாறு காதலிக்க முடியும் என நான் புரிந்துகொண்டேன். அவன் பாடும்போது, சின்னஞ் சிறுவனாய், ஸ்தெப்பிப் பாதைகளில் அலைந்து திரிந்த அவனது உருவம் என் மனக் கண் முன் தெரிந்தது. தாய் நாட்டைப் பற்றிய இப்பாட்டுக்கள் அப்போதுதான் அவன் உள்ளத்தில் உதித்தன போலும்! அல்லது, ஒருகால் கனல் பறக்கும் போர்ப் பாதை வழியே அவன் சென்றபோது உதித்தனவோ இவை?

தானியாரின் பாட்டுக்களைக் கேட்கையில், தரையில் மார்புற நெடுஞ் சாண்கிடையாய் விழுந்து, மகன் தாயைத் தழுவுவது போல நிலமகளை இறுகப் புல்ல வேண்டும்—அவளை இவ்வாறு ஒருவன் அன்பு செய்ய முடிகிறதே என்பதற்காக — என்ற ஆசை என் மனத்தில் எழும். எனக்குள் ஏதோ

புதுமையானது, இன்னதென்று என்னல் விவரிக்க முடியாதது, அடக்க முடியாதது ஒன்று அப்போது தான் விழித்தெழுந்தது. அது தான் என்னையே வெளிக்காட்ட வேண்டும் என்ற தவிர்க்க முடியாத நிர்ப்பந்தம். ஆம், வெளிக்காட்ட வேண்டும்; உலகை நானே காண்பதும் உணர்வதும் மட்டுமின்றி, நான் காணும் காட்சிகளையும், எனது எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் பிறரும் கண்டு உணருமாறு செய்ய வேண்டும், நமது உலகின் வனப்புக்களை எல்லாம் தானியார் விளக்குவது போன்றே மற்றவர்களைத் தூண்டும் வகையில் மாண்புற விளக்க வேண்டும் என்ற பெருவேட்கை அது. இனந் தெரியாத இந்த வேட்கை காரணமாக நீக்க முடியாத அச்சமும் உவகையும் ஒருங்கே உள்ளத்திலெழ, எனக்கு மூச்சு திணறும். நான் தூரிகையும் கையுமாக ஓவியன் ஆக வேண்டும் என்பது தான் அப்போது எனக்குத் தெரியாதே.

குழந்தை முதலே எனக்குப் படம் வரைவதில் ஆசை. பாடப் புத்தகங் களில் உள்ள விளக்கப் படங்களைப் பார்த்து வரைவேன். அவை 'அதே அச்சாக' இருக்கின்றன என்று பையன் கள் எல்லோரும் சொல்லுவார்கள். சுவர்ச் செய்தித்தாள்களுக்காக நான் போட்ட சித்திரங்களை எனது ஆசிரியர் கள் புகழ்வார்கள். அதற்குள் சண்டை தொடங்கி, என் அண்ணன்மார் இருவ ரும் போர்க்களம் சென்றுவிடவே, நான் என் வயதுப் பையன்கள் எல்லோரை யும் போலவே பள்ளிப் படிப்பை நடு வில் விட்டுவிட்டுக் கூட்டுப்பண் ணயில் வேலை செய்யப் போய்விட்டேன். வண் ணங்களும் தூரிகைகளும் எனக்கு மறந்தே போயின. அவற்றை மறுபடி நினைவுகூர் வேன் என்ற எண்ணமே எனக்கு உண் டாகவில்லை. தானியாரின் பாட்டுக்களே என் உள்ளத்தைத் தட்டி யெழுப்பின. ஏதோ உறக்க மயக்கத்தில் நடப்பவன் போல உலகை மருண்டு மருண்டு நோக்

கினேன். எல்லாவற்றையும் அப்போது தான் முதல் தடவையாகப் பார்ப்பது போல் இருந்தது எனக்கு.

திடீரென்று ஜமீலாவின் இயல்பில் நேர்ந்த மாறுதல் உண்டே, அதை என்ன வென்பேன்! ஒரே துடிதுடிப்பும், கொடு நாக்கும், கலகல வென்ற சிரிப்புமாக வளையவந்த பெண்ணொருத்தி இருந்தாளா என்னும்படி ஆகிவிட்டது. இளவேனில் போன்று ஒளிர்ந்த ஏக்கமொன்று அவளது பசந்த கண்களில் நிழலாடியது. ரயில் நிலையம் வரை நீண்ட பயணம் சென்று வரும்போது, வழி நெடுக ஏதோ சிந்தனையில் தன்னை மறந்து லயித்திருப்பாள். கனவுவது போன்ற மென்னகை அவள் இதழ்களில் தவழும். எதையோ நினைந்து உள்ளூற மகிழ்வாள். அது என்ன என்பது அவள் ஒருத்திக்கே தெரியும். எத்தனையோ முறை, கனத்த மூட்டையைத் தோள்களில் சுமந்து செல்லும் போதே, ஏதோ பாய்ந்தோடும் நீர்ப்

பெருக்கின் கரையில் நின்று, அதைக் கடப்பதா வேண்டாமா என்று தெரியாமல் திகைப்பவள் போன்று, இனந்தெரியாத அச்சம் கவ்விக்கொள்ள, அசையாது நின்றுவிடுவாள். தானியார் பக்கமே அவள் நெருங்குவதில்லை. அவனை நேரிட்டுப் பார்ப்பதையே விட்டுவிட்டாள்.

ஒரு தரம், அடிகளத்திலிருந்த சமயத்தில், புகலற்ற, துன்பத்தினுல் உண்டான சள்ளையுடன் ஜமீலா தானியாரிடம், ''எங்கே, உன் சட்டையை இப்படிக் கழற்றிக் கொடு, சொல்கிறேன். தோய்த்துத் தருகிறேன்!'' என்ருள்.

அதை ஆற்றில் துவைத்துக் காயப் போட்ட பின், அதன் அருகே உட்கார்ந்து, சுருக்கங்களைக் கவனமாகப் பிரித்துச் சீர்படுத்தினுள். அதை வெயிலுக்கு நேரே உயர்த்திப் பிடித்து, தோள் பக்கங்கள் நைந்து போயிருந்ததைக் கண்டு தலையை அசைத்தவள், மறுபடியும் சோகத்துடன் மெதுவாக அதைத்

தேய்த்துச் சுருக்கங்களைப் பிரித்துவிட்டாள்.

இந்த நிகழ்ச்சிகளுக்குப்பிறகு ஒரே ஒரு முறைதான் ஜமீலா முன்போலவே, கண்களில் ஒளி பளிச்சிட, பார்த்தவர்கள் உவகை கொள்ளும்படி கலகலவென வாய்விட்டுச் சிரித்தாள். அன்றைய தினம், தீனிப் புல்லைப் போர் போட்டுவிட்டு வீடு திரும்பிய மணமான யுவதிகளும், இளங்கன்னிகளும், போர்முனை சென்று வந்த ஜிகித்களும், ஒரே கூச்சலும் கும்மாளமுமாக அடிகளத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

''இந்தாருங்கள், சொகுசுக்காரர்களா! கோதுமை ரொட்டி சாப்பிட உங்களுக்கு மாத்திரந்தான் ஆசையா? எங்களுக்கும் கொடுங்கள், இல்லையோ, ஆற்றிலே தூக்கிக் கடாசிவிடுவோம்!'' என்று கூச்சலிட்ட ஜிகித்கள், கவர்க்கோல்களைப் பாய்ச்சுவது போல வேடிக்கையாக நடித்தார்கள்.

''அந்தக் கவர்க்கோல்களுக் கெல்

லாம் இங்கே யாரும் பயந்து கிடக்க வில்லை! என் தோழிகளுக்கு மட்டும் ஏதாவது தின்னக் கொடுக்கிறேன். உங்கள் பாட்டை நீங்களே பார்த்துக் கொள்ள வேண்டியதுதான்'' என்று பட்டென்று பதில் சொன்னாள் ஜமீலா.

''அப்படியானல் எல்லோருமே விழுங்கள் ஆற்றிலே!''

அவ்வளவுதான். இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் மற்போர் தொடங்கி விட்டது. கூச்சல் போடுவதும், கிறீச்சிடுவதும், சிரிப்பதுமாக ஒருவரை யொருவர் ஆற்றில் பிடித்துத் தள்ள முயன்றார்கள்.

ஜமீலா பிடிக்க வருபவர்களுக்குச் சாமர்த்தியமாகத் தப்பி யோடியபடி, சிரித்துக் கொண்டே, ''பிடி அவன்களை! நெட்டித் தள்ளு!'' என்று எல்லோரையும் விட உரக்க ஆரவாரித்தாள்.

இதிலே வேடிக்கை என்னவென்றால், ஜிகித்கள் எல்லோருக்கும் ஜமீலா ஒருத்தியின் மீதே கண் என்பதுதான். ஒவ்

வொருவனும் அவளையே பிடிக்கவும் இறுக அணைத்துக் கொள்ளவும் பார்த்தான். கடைசியில் மூன்று வாலிபர்கள் சடக்கென அவளைப் பிடித்து ஆற்றின் கரைக்குத் தூக்கிச் சென்றார்கள்.

''முத்தங்கொடு, இல்லையோ, கடாசி விடுவோம்!'' என்றார்கள்.

''வாருங்களடா, வீசி யாட்டுவோம்!'' என்று தூண்டினான் ஒருவன்.

ஜமீலா உடலை நெளித்துத் திமிறினாள், வாய்விட்டுச் சிரித்தாள், தலையை அப்புறமும் இப்புறமுமாகத் திருப்பினாள், சிரித்துக்கொண்டே தோழிகளை உதவிக்கு அழைத்தாள். அவர்களோ, வெறி கொண்டவர்கள் போலக் கரையோரமாக ஓடி, ஆற்றில் விழுந்திருந்த தலைக்குட்டைகளைத் தேடி எடுப்பதில் முனைந்திருந்தார்கள். ஜிகித்களின் குதூகலமான சிரிப்பிற்கிடையே ஜமீலா சிவ்வெனப் பறந்து ஆற்றில் போய் விழுந்தாள். கூந்தலிலிருந்து தண்ணீர் அருவியாய்க் கொட்ட, முன்னிலும் அதிக

அழகு பொலியக் கரையேறினுள். நனைந்த சீட்டித் துணி உடம்போடு ஒட்டிக்கொண்டு, அவளது வனப்பும் வலிவும் வாய்ந்த திரண்ட தொடைகளையும், முற்று மார்பகத்தையும் துலக்கமாக எடுத்துக் காட்டியது. அவளோ ஒன்றையும் கவனிக்கவில்லை. முன்னும் பின்னுமாக அசைந்தாடிக் கொண்டே கலகலவென நகைத்தாள். அவளது சிவப்பேறிய முகத்தில் தாரை தாரையாகத் தண்ணீர் வழிந்தோடியது.

''முத்தங்கொடு!'' என்று விடாப் பிடியாக வற்புறுத்தினர் ஜிகித்கள்.

ஜமீலா அவர்களுக்கு முத்தங் கொடுத்தாள். ஆயினும் அவர்கள் அவளை இன்னெரு தரம் ஆற்றில் தள்ளிவிட்டார்கள். மறுபடியும் அவள் நனைந்து கனத்த கூந்தல் கற்றைகளை முகத்திலிருந்து அப்புறப்படுத்தியவாறே நகைத்தாள்.

இளைஞர்களின் இக்கொட்டத்தைக் கண்டு களத்திலிருந்தவர்கள் எல்லோ

ரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். கோதுமை தூற்றும் கிழவர்கள், சுளகுப் பாரைகளைப் போட்டுவிட்டு, கண்களில் ததும்பிய நீரைத் துடைத்துக் கொண் டார்கள். அவர்களது பழுப்பு முகங் களிலிருந்த சுருக்கங்கள், ஆனந்தத் தினலும், கணப்போது திரும்பிய இள மைக் கிளர்ச்சியாலும் சுடர்ந்தன. நான் கூட, ஜமீலாவை ஜிகித்களிடமிருந்து காப்பாற்றும் புனிதக் கடமையை இம் முறை மறந்துவிட்டு, மனப்பூர்வமாகச் சிரித்தேன்.

தானியார் ஒருவன் மட்டுமே மௌன மாயிருந்தான். சட்டென்று என் பார் வை அவன்மேல் படவே, நானும் சிரிப் பதை நிறுத்திவிட்டேன். அடிகளத்தின் ஓரத்தில், கால்களை அகற்றி வைத்து, தன்னந்தனியாக நின்று கொண்டிருந் தான் அவன். இதோ பாய்ந்து, ஜிகித் களிடமிருந்து ஜமீலாவைப் பிடித்து அப்புறப்படுத்தப் போகிறுன் என்று எனக்குத் தோன்றியது. அவன் அவளை

உறுத்து நோக்கினுன். துயரமும் பாராட்டும் ததும்பிய பார்வை அது. மகிழ்ச்சியும் வேதனையும் அதில் ஒருங்கே காணப்பட்டன. ஆம். ஜமீலாவின் வனப்பு அவனது சந்தோஷத்துக்கும் துக்கத்துக்கும் ஏககாலத்தில் காரணமாயிருந்தது. ஜிகித்கள் அவளை உடலுற அணைத்து, ஒவ்வொருவராக முத்தங் கொடுக்கும் படி கட்டாயப் படுத்திய போது தானியார் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு அப்பால் போய்விடுவதுபோலப் பாவனை செய்தானே தவிர, இடத்தைவிட்டு அசையவில்லை.

இதற்குள் ஜமீலாவும் அவனைப் பார்த்து விட்டாள். அந்தக் கணமே சிரிப்பை நிறுத்திவிட்டுத் தலை கவிழ்ந்தாள்.

''கொட்டமடித்ததெல்லாம் போதும்!'' என்று எதிர்பாராதபடி கூவி, ஜிகித்களின் கொம்மாளத்தை அடக்கினுள்.

அவர்களில் ஒருவன் அவளைத் தழுவிக் கொள்ளப் பார்த்தான்.

''போடா!'' என்று அவனை நெட்டித் தள்ளினாள் ஜமீலா. குற்றம் புரிந்து விட்டவள் போலக் கீழ் நோக்காக தானியாரை ஒரு பார்வை பார்த்துவிட்டுத் துணிகளைப் பிழிந்து உடுத்தும்பொருட்டுப் புதர்களுக்குப்பின் ஓடி மறைந்தாள்.

அவர்களிடையே நிலவிய உறவில் எனக்கு விளங்காதது எவ்வளவோ இருந்தது. உண்மையில் அதைப்பற்றி நினைக்கவே அஞ்சினேன். ஆயினும் தானியாரை விட்டுத் தானே விலகி விலகிப் போவதைக் குறித்து ஜமீலா ஏங்கியதைக் கண்டு எனக்கு மனத்தை என்னவோ செய்தது. அவள் முன்போலவே சிரித்து அவனைப் பரிகசித்தால் நன்றாயிருக்குமே என எண்ணினேன். அதே சமயம், தானியார் பாடுவதைக் கேட்டுக்கொண்டே இரவில் நாங்கள் ஊர் திரும்பும் போது என் உள்ளத்தில் அவர்களைக் குறித்து இனந்தெரியாத மகிழ்ச்சி பொங்கியது.

பாறைச் செறிவின் இடை வழியே

வருகையில் ஜமீலா வண்டியில் அமர்ந் திருப்பாள். ஸ்தெப்பி வெளி வந்ததும் இறங்கி வண்டி அருகே நடப்பாள். நடந்துகொண்டே பாட்டைக் கேட்பது அதிக இன்பமாயிருந்தபடியால் நானும் அவ்வாறே செய்வேன். முதலில் நாங் கள் அவரவர் வண்டி அருகாக நடப் போம். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் ஏதோ ஒரு சக்தி நாங்கள் அறியாமலே எங்களை தானியாரின் சமீபமாக இழுக் கும். அவன் முகம், கண்கள், இவற் றில் தோன்றும் பாவத்தைக் காண விரும்பினோம். முகத்தை உர்ரென்று வைத்துக்கொண்டு, யாருடனும் கலகல வென்று பழகாமல் ஒதுங்கும் தானி யாரா உண்மையாகவே பாடுகிறான்?

ஒவ்வொரு தடவையும் அவனைப் பார்த்ததும் ஜமீலாவின் முகத்தில் பிரமிப்பும் உருக்கமும் தோன்றியதைக் கண்டேன். அவன் பக்கமாக மெள்ளக் கையை நீட்டுவாள். அவனோ அதைப் பார்க்கவே மாட்டான். கைகளைத்

தலைக்குப்பின் கோத்துக்கொண்டு, இட மும் வலமுமாக அசைந்தாடியவாறே, எதிரே எங்கோ தொலைவில் நாட்டத் தைச் செலுத்தியிருப்பான். ஜமீலாவின் கை தொய்ந்து போய் வண்டி விளிம்பில் விழும். அவள் திடுக்கிட்டுச் சடக்கென அதை இழுத்துக்கொண்டு அப்படியே நின்று விடுவாள். ஏங்கி இடிஇடித்துப் போய், மருள் கொண்டவள் போல நடுச் சாலையில் நின்றுகொண்டு நீண்ட நேரம் தானியாரையே விடாது நோக்குவாள். பின்பு மறுபடியும் நடப்பாள்.

ஜமீலாவும் நானும் ஒரே வகையான, ஆழங்காண முடியாத உணர்ச்சியால் உலப்புறுகிறோமோ என்று சில சமயம் எனக்குத் தோன்றும். எங்கள் உள்ளங் களில் இவ்வுணர்ச்சி நெடுங்காலமாகப் புதைந்து செயலற்றிருந்தது போலும்! இப்போது அது உயிர்த்தெழும் வேளை வந்துவிட்டது போலும்!

இப்போதும் ஜமீலா வேலை நேரத் தில் தன்னை மறந்து விடுவாள். ஆனால்

அடிகளத்தில் நாங்கள் காத்திருக்கும் போது அபூர்வமாகக் கிடைக்கும் ஓய்வு நேரத்தில் இருப்புக் கொள்ளாமல் தவிப் பாள். கோதுமை தூற்றுபவர்களுடன் அவளும் சேர்ந்து கொள்வாள். சிலவேளை களில், சுளகுப் பாரையில் தானியத் தை அள்ளி அள்ளி, லாகவமாக, ஒயிலோடு பலமுறை மேலே விசிறிய பின் திடீரென்று பாரையை எறிந்து விட்டு வைக்கோல் போர்களின் பக்கம் சென்றுவிடுவாள். அங்கே குளிர் நிழலில் உட்கார்ந்து, தனியாயிருக்க அஞ்சியவள் போல என்னைக் கூவியழைப்பாள்.

''வா, கிச்சினே பாலா! சற்றே இங்கு உட்காருவோம்'' என்பாள்.

ஒவ்வொரு தரமும் அவள் அழைக் கும்போது, என்னிடம் ஏதோ முக்கிய மான விஷயம் சொல்லப் போகிறுள் போலும், தன் மனத்தை அரிப்பது என்ன என்று விளக்கப் போகிறுள் போ லும் என நினைப்பேன். அவளோ, ஒன் றும் சொல்ல மாட்டாள். என் தலை

யைத் தன் மடிமீது கிடத்திக்கொண்டு, எங்கோ தொலைவில் பார்வையைச் செலுத்திய வண்ணம், குத்திட்டு நிற்கும் என் தலைமயிரைக் கோதுவாள்; கொதிக் கும், நடுங்கும் கைகளால் என் முகத்தை மெதுவாக வருடுவாள். நான் அவள் வதனத்தை நிமிர்ந்து பார்ப்பேன். இனந்தெரியாத கவலையும் விழைவும் நிறைந்த அம்முகத்தில் என்னையே காண்பேன். ஏதோ அவளைத் துன்புறுத் தியது. ஏதோ அவள் உள்ளத்திலே திரண்டு, முதிர்ந்து, வெளிக்கிளம்பப் போக்கு தேடியது. அவள் அதை அஞ் சினுள். தனக்குக் காதல் பிறந்துவிட்ட தாகத் தன் நெஞ்சறிய ஒப்புக்கொள்ள வேண்டுமென்று துடியாய்த் துடித்தாள், ஒப்புக்கொள்ளக் கூடாதென்றும் துடி யாய்த் துடித்தாள். அதே போல நா னும் அவள் தானியாரைக் காதலிக்க வேண்டுமென்று விரும்பவும் விரும்பி னேன், விரும்பாமலுமிருந்தேன். என்ன வானுலும் அவள் எங்கள் குடும்பத்து

மாற்றுப் பெண், எனது மதனி ஆயிற்றே.

ஆனுல் இத்தகைய எண்ணங்கள் கணப்போது தோன்றி மறைந்துவிடும். நான் அவற்றை மனத்திலிருந்து விரட்டி விடுவேன். குழந்தையினது போன்று சற்றே விரிந்த அவளது மெல்லிதழ்களை யும், கண்ணீர் மல்கிய விழிகளையும் காண்பதே எனக்கு உண்மையான பேரானந்தம். அவள் தான் எவ்வளவு நன்ருக, எவ்வளவு அழகாக இருந்தாள்! எத்தகைய கிளர்ச்சியூட்டும் ஒளியும், உணர்ச்சித் துடிதுடிப்புமாக மிளிர்ந்தது அவள் வதனம்! அப்போது இதை யெல்லாம் கண்ணுல் மட்டுமே கண்டேனே தவிர, எல்லாவற்றையும் புரிந்துகொள்ளவில்லை. கலைஞனுக்கும் கவிஞனுக்கும் ஏற்படுவது போன்ற உள்ளக் கிளர்ச்சியை ஒருகால் காதலும் தூண்டிவிடுமோ? —இந்தக் கேள்வியை இப்போதும் நான் என்னிடமே அடிக்கடி கேட்டுக்கொள்கிறேன். ஜமீலாவைப் பார்க்கும்போதெல்

லாம், உடனே ஓடி, ஸ்தெப்பி வெளியின் நடுவே நின்றுகொண்டு, ''நான் என்ன செய்வது? இந்த விளங்காக் கவலையையும், இந்த விளங்காப் பெருங்களிப்பையும் நான் வெற்றி கொள்வது எப்படி?'' என மண்ணையும் விண்ணையும் நோக்கி உரத்த குரலில் வினவ வேண்டும் போல எனக்குத் தோன்றும். ஒரு முறை இந்தக் கேள்விக்கு விடை கிடைத்துவிட்டது என்று நினைக்கிறேன்.

வழக்கம் போல நாங்கள் ரயில் நிலையத்திலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்தோம். இரவாகி விட்டது. தாரகைகள் தேனீக் கூட்டங்கள் போல வானில் மொய்த்திருந்தன. ஸ்தெப்பி வெளி கண்ணயரும்பொருட்டு முடங்கி விட்டது. தானியாரின் பாட்டு மட்டுமே சூழ்ந்திருந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு ஒலித்து, தொலைவில் மெல்லிருளில் சென்று ஒடுங்கியது. ஜமீலாவும் நானும் அவன் பின்னே சென்றோம்.

அன்று தானியாருக்கு என்னதான் நேர்ந்து விட்டதோ, அவன் குரலில் தொனித்த ஆழ்ந்த, கனிந்த துயரமும், தனிமையும் எங்கள் உள்ளங்களை உருக்கிவிட்டன. அவன்மீது ஏற்பட்ட பரிவால் கண்ணீர் பொங்கித் தொண்டையை அடைத்தது.

வண்டியின் பக்க விளிம்பை இறுகப் பற்றியவாறு, தலையை ஒரு புறம் சாய்த்துக்கொண்டு நடந்தாள் ஜமீலா. தானியாரின் குரல் மீண்டும் உச்சஸ்தாயியில் சஞ்சாரம் செய்யவே அவள் தலையை வெட்டி அசைத்தாள், வண்டிக்குள் தாவி ஏறினாள், அவன் அருகே உட்கார்ந்துகொண்டாள். கைகளை மார்பின் மீது இணைத்து, கல்லாய்ச் சமைந்து வீற்றிருந்தாள். பக்கத்தில் நடந்த நான், அவர்கள் இருவரையும் நன்றாகப் பார்க்கும்பொருட்டு, விரைந்து சற்று முன்னே சென்றேன். தானியார், ஜமீலாவைக் கவனிக்காமலே தொடர்ந்து பாடிக் கொண்டிருந்தான். ஜமீலாவின்

இணைத்த கரங்கள் துவண்டு மடிமீது விழுந்தன. அவள் தானியாரின் புறமாகச் சாய்ந்து அவன் தோள் மேல் மெல்லெனத் தலையை வைத்துக்கொண்டாள். சவுக்கின் ஸ்பரிசத்தை உணர்ந்த ஒட்டகக் குதிரை நடையை மாற்றிக்கொள்வது போல, தானியாரின் குரல் கணப்போது தடுமாறியது. பின்பு அது முன்னிலும் அதிக வன்மையுடன் கணீரென ஆர்த்தது. அவன் காதல் பாட்டு இசைத்தான்.

நான் விம்மிதமடைந்தேன். ஸ்தெப்பி வெளி மலர்ந்து, உயிர்த்து, இருளை ஒட்டி ஒளிர்வது போல் திகழ்ந்தது. அதன் அகன்ற பரப்பில் இரு காதலர்களை நான் கண்டேன். அவர்கள் என்னைக் கவனிக்கவே யில்லை. நான் அருகிலிருந்த நினைவே அவர்களுக்கு இல்லை போலும். உலகம் முழுவதையுமே மறந்தவர்களாய், பாட்டின் லயத்துக்கு ஏற்ப இணைந்து அசைந்தாடிய அவர்களை, நான் அருகாக நடந்துகொண்டே வியந்து நோக்கினேன். நைந்து கசங்கி,

கழுத்துக்குக் கீழ் விரியத் திறந்த இரா ணுவச் சட்டையும் தானுமாக இலகிய அதே தானியார் தான் இவன். அவன் கண்கள் மட்டும் இருளில் தீக்கங்குகள் போலச் சுடர்ந்தன. அவனோடு ஒட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தவள் என் ஜமீலாவே தான். ஒரேயடியாக அடங்கி ஒடுங்கி, இமைகளில் கண்ணீர்த் துளி கள் மினுமினுக்க அமர்ந்திருந்தாள். இருவரும் இப்போது புதுப் பிறப்பு எய்தியவர்கள். அவர்களது களிப்பு முன் கண்டறியாதது. ஆம், இது களிப்பல்லவா? தாய் நாட்டின் மீது தான் கொண்ட பேரன்பை, உள்ளத் தைத் தூண்டும் இந்த இசையைத் தோற்றுவித்த உயர் காதல் முழுவதை யும், தானியார் ஜமீலாவுக்கே அர்ப் பணித்துவிடவில்லையா? அவன் அவளுக் காகத் தானே பாடினான், அவளைப் பற்றி யே தானே பாடினான்!

தானியாரின் இசையைக் கேட்கும் போதெல்லாம் ஏற்படும் இனந் தெரி

யாத உள்ளக் கிளர்ச்சி பின்னுமொரு முறை என்னை ஆட்கொண்டது. நான் விரும்புவது என்ன என்பது பளிச்சென எனக்கு விளங்கி விட்டது. இவர்களை ஓவியத்தில் தீட்ட வேண்டும் என்பதே நான் விரும்புவது.

எனது எண்ணமே என்னை அச்சுறுத்தியது. ஆயினும் என் ஆவல் அச்சத்திலும் வலிதாயிருந்தது. அவர்கள் எப்படி இருக்கிறார்களோ அப்படியே—களிப்பில் மெய் மறந்த நிலையில்—அவர்களைப் படம் எழுதுவேன். ஆம், இப்போது அவர்கள் இருக்கும் இதே மாதிரியில்! என்றால் அப்படிப் படமெழுத முடியுமா? அச்சமும் உவகையும் என்னைத் திக்குமுக்காட வைத்தன. இன்ப போதையில் தன்னை மறந்தவனாய் நடந்தேன். நானுந்தான் இன்பக் களிப்பில் ஆழ்ந்திருந்தேன். முரட்டுத் துணிச்சலில் எழுந்த இந்த ஆசை வருங்காலத்தில் எனக்கு எவ்வளவு இடர் விளைக்கும் என்பது அப்போது எனக்குத் தெரியா

தே. தானியார் உலகைப் பார்ப்பது போன்றே நாமும் பார்க்க வேண்டும், தானியாரின் பாட்டையே வண்ணங் களில் இசைக்க வேண்டும் என நான் உறுதி பூண்டேன். மலைகளும், ஸ்தெப்பி வெளியும், மக்களும், புல்லும், மேகங் களும், ஆறுகளும் தானியாரின் பாட் டுக்களில் போலவே எனது ஓவியங்களி லும் காட்சி தரும். இப்படி எண்ண மிடுகையில் சட்டென ஒரு கேள்வி எழுந் தது: ''வண்ணங்களுக்கு எங்கே போவது? பள்ளிக் கூடத்திலேயோ கொடுக்க மாட்டார்கள். அவர்களுக்கே வேண்டுமே?'' என்பது அக்கேள்வி. ஏதோ பிரச் சினை எல்லாம் இதிலேதான் அடங்கி யிருப்பது போல உழம்பினேன்.

தானியாரின் பாட்டு எதிர்பாராத படி திடுமென நின்றுவிட்டது. ஜமீலா அவனை ஆர்வத்துடன் கட்டித் தழுவிய வள், சடக்கெனப் பின்வாங்கினாள். கணநேரம் பனியாய் உறைந்து போனாள். பின்பு அப்பால் நகர்ந்து வண்டியிலிருந்து

தரையில் குதித்தாள். தானியார் தயக் கத்துடன் கடிவாள வாரை இழுத் துப் பிடித்தான். குதிரைகள் நின்றன. ஜமீலா அவனுக்கு முதுகைக் காட்டிக் கொண்டு சாலையில் நின்ருள். பின்பு தலையை ஒரு வெட்டு வெட்டித் திருப்பி அவனைக் கடைக்கணித்தாள்.

பொங்கிய கண்ணீரை அடக்கிக் கொண்டு, ''என்னத்தை உறுத்துப் பார்க்கிருய்?'' என்று கேட்டு விட்டுக் கணநேரம் பேசாதிருந்தாள். அப்புறம், ''என்னையே வெறித்துப் பார்க்க வேண் டாம். வழியைப் பார்த்துக் கொண்டு போ!'' என்று சீறினுள். தன் வண் டியின் பக்கம் போய், ''நீ என்ன கல் லாய்ச் சமைந்து நிற்கிருய்? ஊம், ஏறு வண்டியில்! வாரைக் கையில் பிடி!'' என்று என்னை அதட்டிவிட்டு, ''ஐயை யே, உங்களால் எனக்கு ஒரே துன்பந் தான்!'' என்று நொந்துகொண்டாள்.

''திடீரென்று இவளுக்கு என்ன வந்து விட்டது?'' என்று குதிரைகளை

விரட்டிக்கொண்டே எண்ணமிட்டேன். என்ன வென்பதை அனுமானிப்பதொன்றும் கஷ்டமாயில்லை. அவள் மணமானவள். அவளது கணவன் உயிரோடிருந்தான். சராதவ் ஆஸ்பத்திரியில் கிடந்தான். இதுதான் அவளைப் பெருந்துன்பத்திற்கு ஆளாக்கிய விஷயம். இதையெல்லாம் ஊகிக்க முடிந்தபோதிலும் இதைப்பற்றி அலசி ஆராய்ந்து முடிவு கட்ட எனக்கு விருப்பமில்லை. அவள் மீதும் என்மீதுமே எனக்குக் கோபம் கோபமாய் வந்தது. தானியார் மீண்டும் பாட மாட்டான், அவன் குரலை இனி ஒரு போதும் நான் கேட்கப் போவதில்லை என்று மட்டும் தெரிந்திருந்தால் அவளை அடியோடு வெறுத்திருப்பேன்.

என் உடம்பெல்லாம் ஒரே அயர்வும் வலியும். எப்பொழுதடா இடம் போய்ச் சேர்ந்து புல் விரிப்பில் அப்பாடா என்று உடலைக் கிடத்துவோம் என்று ஆகிவிட்டது. கெச்சை நடை போட்ட குதிரைகளின் முதுகுகள் இருளில் எழுந்

தெழுந்து தணிந்தன. வண்டியின் கட கடப்பு தலை வேதனையாயிருந்தது. கடி வாள வார்கள் கையிலிருந்து நழுவி நழுவி விழுந்தன.

அடிகளம் போய்ச் சேர்ந்ததும் நுகவாரைக் கழற்றி வண்டிக்கடியில் போடுவதற்குள் எனக்குக் கண்ணை இருட்டிக் கொண்டு வந்தது. புல் விரிப்பை நெருங்கியதுமே பொத்தென விழுந்து உறங்கிப் போனேன். தானியார் தான் குதிரைகளை மேய்ச்சல் நிலத்துக்கு ஓட்டிச் சென்றான்.

மறு நாள் காலை கண் விழித்தபோது என் உள்ளம் களி துள்ளியது. ஜமீலா வையும் தானியாரையும் ஓவியத்தில் உருவாக்குவதென்று தீர்மானித்தேன். கண்களை மூடிக்கொண்டு, எப்படி அவர் களைச் சித்திரிப்பது என்று எண்ணிப் பார்த்தேன். வண்ணமும் தூரிகைகளும் கிடைக்கவேண்டியதுதான், படமெழுதத் தொடங்கி விடலாம் என்று தோன்றியது.

ஆற்றுக்கு ஓடிச் சென்று குளித்து

விட்டுக் குதிரைகளைத் தளையவிழ்த்து ஓட்டிவரப் போனேன். பனித்து நனைந்திருந்த புல் எனது வெறுங்கால்களில் சளப் சளப் பென்று அடித்து, உள்ளங்கால் வெடிப்புகளில் சுரீரென உறுத்தியது. ஆயினும் எனக்கு ஒரே குதூகலம். ஓடுகிற ஓட்டத்திலேயே அக்கம் பக்கத்துக் காட்சிகளையும் நிகழ்ச்சிகளையும் கவனித்துக்கொண்டே போனேன். மலைகளுக்குப் பின்னிருந்து எழுந்தது ஞாயிறு. பாசனக் கால்வாய்க் கரையில் எப்படியோ வேரூன்றித் தழைத்த சூரியகாந்தி ஒன்று கதிரவனை நோக்கி நிமிர்ந்தது. சுற்றிலும் பேராசையுடன் நெரிந்த வெள்ளிலைக் களைகளுக்கு இடம் கொடாமல் உறுதியாக நின்று, வெயிலொளியை ஏந்தித் தன்னகத்தே நிறைத்தது அச்சூரியகாந்தி. களைகள்மீது வெயில் படாமல் தனது மஞ்சள் நாக்குகளால் லாவிப் பிடித்து, கனத்த தலைக் கிண்ணத்தில் இறுக நிறைந்த விதைகளுக்கு ஊட்டம் அளித்தது. பாசன

வாய்க்காலின் குறுக்கே வண்டிச் சக்கரங்கள் மண்ணை மேல் கீழாகப் புரட்டிச் சென்றிருந்த இடத்தில் பதிந்த தடங்கள் வழியே தண்ணீர் கசிந்தது. இடுப்புயரம் மண்டிக் கிடந்த துளசிச் செடிகளின் இன்மணம் கமழ்ந்த பைந்நீலத் தீவொன்று கண்ணைக் கவர்ந்தது. தாய் நாட்டு மண்மீது ஓடிக் கொண்டிருந்த என் தலைக்கு உயரே தூக்கணங்குருவிகள் சிவ்வெனப் பறந்தன. ஆகா! இந்தக் காலைக் கதிரவனையும், வெண்ணீல மலைகளையும், பனித்துளி படிந்த புற்களையும், வாய்க்கால் கரையில் தன்னந்தனியாய் வளர்ந்து நிற்கும் சூரியகாந்தியையும் ஓவியத்தில் தீட்டுவதற்கேற்ற வண்ணங்கள் மட்டும் கிடைக்குமானால்!

அடிகளம் திரும்பியதுமே என் உளமகிழ்வில் கறை படிந்துவிட்டது. நான் ஜமீலாவைக் கண்டேன். அவள் முகம் சப்பிப் போயிருந்தது. கண்களின் அடியில் கரு வளையங்கள் தெரிந்தன. இரவு முழுவதும் உறங்காது கழித்தாள் போ

லும். அவள் என்னைக் கண்டு முறுவலிக்கவோ என்னுடன் பேசவோ இல்லை. குழுத் தலைவன் ஒரோஸ்மாத் வந்ததும் நேரே அவனிடம் போனாள்.

''இந்தாருங்களய்யா உங்கள் வண்டி! என்னை எங்கு வேண்டுமானாலும் அனுப்புங்கள். ரயில்வே நிலையத்துக்கு மட்டும் வண்டி கட்டிக்கொண்டு போகவே மாட்டேன்!'' என்று வெடுக்கெனச் சொன்னாள்.

''ஏன் குழந்தே, என்ன நீ இப்படி? ஏதேனும் மாட்டு ஈ கடித்து விட்டதா என்ன?'' என்று வியப்பும் பரிவும் தோன்ற வினவினான் ஒரோஸ்மாத்.

''மாட்டு ஈ யெல்லாம் கன்றுக்குட்டி கொம்புக்கு அடியிலே அல்லவா கடிக்கும்? சும்மா துருவிக் கேட்காதீர்கள்! பிடிக்கவில்லை என்கிறேனே. அப்புறம் பேச்சென்ன?'' என்று எடுத்தெறிந்து பேசினாள்.

ஒரோஸ்மாத் முகத்திலிருந்த புன்னகை சட்டென மறைந்தது.

''இந்தா, பிடிக்கிறதோ பிடிக்கவில்லேயோ, வண்டி கட்டிக்கொண்டு போய் வரத்தான் வேண்டும் நீ!'' என்று பெருங் குரலில் அதட்டி, கவைக் கோலால் தரையில் இடித்தான். ''எவனுவது உன்னேச் சீண்டி யிருந்தால் சொல்லு, இந்தக் கவைக்கோலாலேயே அவன் மண்டையைப் பிளந்து விடுகிறேன்! அப்படி யொன்றும் இல்லே யாஞல் மடத் தனமாக உளருதே. தானியம் போர் வீரர்களுக்காக்கும் ஏற்றிப் போகிருய். உன் வீட்டுக்காரனுந்தான் சண்டைக்குப் போயிருக்கிருன், ஆமாம்!'' என்று சொல்லிவிட்டுச் சடக்கெனத் திரும்பிக் கெந்திக் கெந்தி அப்பால் போய்விட் டான்.

ஜமீலாவுக்கு ஒரே கூச்சம். முக மெல்லாம் குப்பெனச் சிவந்துவிட்டது. பின்பு அவள் தானியாரைப் பார்த்து மெல்லெனப் பெருமூச் செறிந்தாள். அவன் ஒரு பக்கமாக அவளுக்கு முது கைக் காட்டிய வண்ணம் நின்று வண்டி

யில் பூட்டிய குதிரையின் கழுத்துப் பட்டைப் பொருத்துவாரை வெட்டி வெட்டி இழுத்து இறுக்கிக் கொண்டிருந் தான். நடந்த உரையாடல் அவன் காதி லும் தான் விழுந்தது. ஜமீலா சிறிது நேரம் நின்ற இடத்திலேயே சாட் டையை நெருடியவாறு நின்று கொண் டிருந்தாள். பின்பு என்ன வந்தா லும் வரட்டும் என்ற பாவனையில் தோள்களைக் குலுக்கிவிட்டுப் பரபர வென்று தன் வண்டியை நோக்கி நடந்தாள்.

அன்று நாங்கள் வழக்கத்தைவிட முன்னதாகவே ரயில் நிலையத்திலிருந்து திரும்பி விட்டோம். தானியார் வழி நெடுகக் குதிரைகளைப் படு விரட்டு விரட்டினன். ஜமீலா வாய் திறவாமல் உம்மென்று உட்கார்ந்திருந்தாள். எனக் கோ ஸ்தெப்பி வெளி யெல்லாம் பொசுங்கிக் கரிந்து போனது போல் காணப்பட்டது. என் கண்களையே என் ஞல் நம்ப முடியவில்லை. அட நேற்றுக்

கூட இது முற்றிலும் வேறு விதமாகக் காட்சி தந்ததே. ஏதோ கற்பனைக் கதைகளில் அதன் வர்ணனையைக் கேட்டது போலிருந்ததே. எனது உள்ளுணர்வுக்கு விழிப்பூட்டிய அந்த இன்ப ஓவியம் என் மனத் திரையிலிருந்து கணப் போதும் அகல மறுத்துவிட்டது. வாழ்க்கையின் யாவற்றிலும் ஒளிமிக்க பகுதியொன்றை நான் பற்றிக்கொண்டுவிட்டது போலத் தோன்றியது. அதை ஓர் அம்சம் விடாமல் மனதிற்குள் மீண்டும் மீண்டும் உருவாக்கி யிருந்தேன் நான். இப்போதோ, எனது சிந்தனையை யெல்லாம் அந்தக் கற்பனையே ஆட்கொண்டு விட்டது. மறு நாள் காலை எடை போடுபவளின் அருகிருந்து தடித்த வெள்ளைக் காகிதத்தைத் திருடும்வரை என் மனம் ஒரு நிலையில் இல்லை. அதை எடுத்துக் கொண்டு ஓடி, தீனிப் புல் போர் ஒன்றின் பின்னே படபடக்கும் நெஞ்சுடன் மறைந்துகொண்டேன். வழியிலே கண்டெடுத்த சுளகுப் பாரை யொன்றின் மழு

மழுப்பான அலகைக் குப்புறவைத்து அதன் மேல் காகிதத்தைப் பரப்பினேன்.

என்னை முதன் முறையாகக் குதிரை மேல் உட்கார்த்தியபோது என் தகப்ப ஞர் வேண்டுதல் செய்துகொண்டது போலவே ''ஆசி நல்குவாய்'' என்று வாய்க்குள் முனகிக்கொண்டேன். பின்பு எழுதுகோலால் காகிதத்தின் மேல் கோடிழுத்தேன். பயிற்சி பெருத காலத்தில் நான் முதன் முறை வரைந்த படம் இதுவே. தானியாரின் வடிவம் காகிதத்தில் உருப் பெற்றதுமே மற்ற எல்லாவற்றையும் மறந்து விட்டேன். ஆகஸ்டு மாத இரவில் ஸ்தெப்பி வெளியின் காட்சியை நினைவு கூர்ந்தேன். தானியார் தலையைப் பின்சாய நிமிர்த்தி, திறந்த கழுத்துடன் பாடுவதைக் காண்பதாகவும், அவன் பாட்டைக் கேட்பதாகவும் கற்பனை செய்துகொண்டேன். ஜமீலா அவன் தோள் மேல் சாய்ந்திருப்பதைக் கண்டேன். சுமை வண்டி, அதன்மேல் அவர்கள் இருவர், வண்டியின் முன்னே

போட்டிருந்த கடிவாளவார்கள், இருளில் எழுந்தடங்கும் குதிரை முதுகுகள், அப்பால் ஸ்தெப்பி வெளியும் நெடுந்தொலையில் மினுமினுத்தவிண்மீன்களும்.

படம் வரைவதில் தன்னை மறந்து ஈடுபட்டிருந்த எனக்கு ஒன்றுமே காதில் படவில்லை. திடீரெனத் தலைக்கு மேலே குரல் கேட்டுத் திடுக்கிட்டேன்.

''காதென்ன, செவிடாகிவிட்டதா உனக்கு?''

கேட்டவள் ஜமீலா. எனக்கு ஒரே கூச்சமாகப் போய், முகமெல்லாம் சிவந்துவிட்டது. படத்தைச் சட்டென மறைக்கத்தான் முடியவில்லை.

''வண்டிகளில் சுமை யேற்றியாகி விட்டது. ஒரு மணி நேரமாக நாங்களும் உன்னைக் கூவிக் கூவி அழைக்கிறோம், ஆளைக் காணோம். இங்கே என்ன செய்கிறாய்? இது என்ன?'' என்று வினவியவள் படத்தைக் கையிலெடுத்துப் பார்த்தாள். ''ஹூம்!'' என்று கோபமாகத் தோள்களைக் குலுக்கினாள்.

எனக்கோ, தரை பிளந்து என்னை விழுங்கிவிடாதா என்று ஆகிவிட்டது. ஜமீலா நீண்ட நேரம் ஒரே நோக்காகப் படத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். முடிவில் ஏங்கிய, பனித்த விழிகளால் என்னை நோக்கினுள்.

''இதை எனக்குக் கொடு, கிச்சினே பாலா! நினைவுச் சின்னமாக வைத்துக் கொள்கிறேன்'' என்று தணிந்த குரலில் சொன்னுள். காகிதத்தை மடித்து ப்ளவுஸுக்குள் செருகிக்கொண்டாள்.

வண்டிகளை ஓட்டிக்கொண்டு நாங்கள் சாலைக்கு வந்த பின்னுங்கூட என்னுல் நனவுலகிற்கு வர முடியவில்லை. எல்லாம் கனவு போலிருந்தது. பார்த்த ஒன்றை அப்படியே படமாக வரைந்து விட்டேன் என்பதை என்னுல் நம்பவே கூடவில்லை. ஆயினும் உள்ளத்தின் அடியாழத்தில் எங்கோ, குழந்தைத்தனமான வெற்றி யுணர்வும் கர்வமும் கூடத் துளிர்த்தன. ஒன்றைவிட ஒன்று அதிகத் துணிகரமான, ஒன்றை

விட ஒன்று கவர்ச்சிகரமான கனவுகள் என் தலையைக் கிறுகிறுக்க வைத்தன. இன்னும் பல படங்கள் எழுத விரும்பி னேன். எழுதுகோலால் போட்ட வெ றும் வரைப்படங்கள் அல்ல, வண்ண ஓவியங்கள். குதிரைகள் நாற்கால் பாய்ச் சலில் சென்றதை நான் கவனிக்கத் தானும் இல்லை. தானியார் தான் குதி ரைகளைப் பந்தய விரட்டு விரட்டினான். ஜமீலா பின்தங்காமல் உடன் சென் ருள். இரு புறமும் மாறி மாறிப் பார்த் தாள். சில சமயங்களில் எதையோ நினைந்து, உருக்கமும் குற்ற உணர்ச்சி யும் தோன்றக் குறுநகை புரிந்தாள். நானும் முறுவல் செய்தேன். என்மீதும் தானியார் மீதும் அவளுக்குக் கோப மில்லை என்று அவள் புன்னகை காட்டிய தல்லவா? அவள் பாடும்படி கேட்டால் தானியார் தட்டாமல் பாடுவானே. இது தான் என் புன்சிரிப்புக்குக் காரணம்.

ஓடிய ஓட்டத்தில் குதிரைகளின் வாய் நுரை அவற்றின் உடம்புகளிலெல்

லாம் படிந்திருந்த தெனினும் அன்று வழக்கத்தைவிட வெகு முன்னதாகவே ரயில் நிலையம் சேர்ந்து விட்டோம். வண்டிகளை நிறுத்தியதும் நிறுத்தாதது மாக தானியார் மூட்டைகளை இறக்கத் தொடங்கினன். அவனுக்கு என்ன தான் நேர்ந்ததோ, எங்கே போகிற அவசர மோ, அவனே அறிவான். ரயில் வண்டி கள் கடகடத்து விரைந்தபோதெல்லாம் நிலைத்து நின்று, ஏதோ சிந்தனையுடன் அவற்றையே விடாது நெடு நேரம் பார்த்துக் கொண்டிருப்பான். ஜமீலா வும் அவன் பார்த்த திக்கிலேயே பார் வையைச் செலுத்தி அவன் மனத்தில் உள்ளதைப் புரிந்துகொள்ள முயன்றாள்.

''இந்தா, சற்றே இங்கே வாயேன். இந்த லாடம் ஆட்டங் கண்டுவிட்டது. பிடுங்கிவிடேன்'' என்று தானியாரை அழைத்தாள் ஜமீலா.

குதிரைக் குளம்பை முழங்கால்களுக் கிடையே இறுக அழுத்திக் கொண்டு லாடத்தைத் தென்னிப் பிடுங்கியபின்

தானியார் எழுந்து நின்றதும் ஜமீலா அவனை விழியோடு விழி பொருந்தப் பார்த்து, ''நீ என்ன? ஒன்றும் புரியவில்லையோ? இல்லாவிட்டால் உலகத்திலே பெண் நான் ஒருத்திதானே?'' என்று தணிந்த குரலில் கேட்டாள்.

தானியார் வாய் பேசாது மறு புறம் தலையைத் திருப்பிக்கொண்டான்.

''எனக்கு மட்டும் ரொம்ப லேசா யிருக்கிறது என்று நினைக்கிறாயா?'' என்று பெருமூச்செறிந்தாள் ஜமீலா.

தானியாரின் புருவங்கள் நெரிந்தன. துயரமும் காதலும் ததும்ப அவளை உற்று நோக்கி, என் காதில் படாதபடி அவ்வளவு தணிந்த குரலில் ஏதோ சொன்னான். பின்பு மகிழ் தோன்றும் முகத்துடன் விடு விடென்று தன் வண்டியைப் பார்க்க நடந்தான். வழியில் குதிரை லாடத்தை வருடிக்கொண்டே போனான்.

''ஜமீலாவின் சொற்களில் இவனுக்கு என்ன ஆறுதல் தான் கிடைத்ததோ?

'எனக்கு மட்டும் ரொம்ப லேசாயிருக்கிறதென்று நினைக்கிறாயா?' என ஒருத்தி பெருமூச்செறிந்தால், அதில் என்ன பிரமாத ஆறுதல் கிடைக்க முடியும் ஒருவனுக்கு?''—தானியாரைப் பார்த்தவாறே நான் இப்படி எண்ணமிட்டேன்.

மூட்டைகளை அவிழ்த்துக் கொட்டிவிட்டு நாங்கள் ஊர் திரும்பத் தயாரான சமயத்தில், காயமடைந்த, ஒடிசலான போர்வீரன் ஒருவன் கசங்கிய மேல் கோட்டும் தோளிலே தொங்கு பையுமாகக் கொட்டார வாயிலில் வந்து சேர்ந்தான். அதற்குச் சில நிமிடங்கள் முன்புதான் ஒரு ரயில் வந்து போயிற்று.

போர்வீரன் இங்குமங்கும் கண்ணோட்டி, ''குர்க்குரேவு கிராமத்து ஆட்கள் யாராவது இருக்கிறார்களா?'' என்று கூவினான்.

''இதோ நான் இருக்கிறேன்'' என்று பதிலளித்துவிட்டு, இவன் யாராயிருக்கலாம் என யோசனை செய்தேன்.

''நீ யார் வீட்டுப் பையனப்பா,

தம்பீ?'' என்று கேட்டவாறே என் பக்கம் அடியெடுத்து வைத்த போர் வீரன், அருகே நின்ற ஜமீலாவைக் கண்டதும் வியப்பும் மகிழ்ச்சியும் தோன்ற முறுவலித்தான்.

''யார் அது? கரீமா?'' என்று ஆச்சரியம் பொங்கக் கூவினுள் ஜமீலா.

''தங்கைச்சீ, ஜமீலா!'' என்று போர்வீரன் அவளருகே பாய்ந்துவந்து அவள் கையை இரு கரங்களாலும் இறுகப் பற்றிக் குலுக்கினுன்.

அவன் ஜமீலாவின் ஊர்க்காரன்.

''அடேயப்பா என்ன அதிர்ஷ்டம்! எப்படியோ புத்தியில் பட்டு இங்கே வந்தேன் பாரேன்!'' என்று ஒரே பரபரப்போடு கூறிவிட்டு, ''இப்பொழுது தான் ஸாதிக்கிடம் சொல்லிக்கொண்டு வந்தேன். இரண்டு பெயரும் ஒரே ஆஸ்பத்திரியில் தான் இருந்தோம். எல்லாம் நன்ருயிருந்தால் இன்னும் ஒன்றிரண்டு மாதங்களில் குணமடைந்து வீடு திரும்பி விடுவான். நான் புறப்படத்

தயாரானதும், 'வீட்டுக்காரிக்குக் கடுதாசி எழுதிக் கொடப்பா, சேர்த்துவிடுகிறேன்' என்று சொன்னேன். இந்தா, ஒப்பம் வைத்து, மூடி ஒட்டிக் கொடுத்திருக்கிருன்'' என்று கூறி, முக்கோண வடிவான மடிப்புத் தாளை நீட்டினுன் போர்வீரன்.

ஜமீலா சட்டென்று கடிதத்தை வாங்கிக் கொண்டாள். அவள் முகம் சிவந்தது, பின்பு வெளிறிப் போயிற்று. தானியாரை ஜாக்கிரதையாகக் கடைக்கண்ணுல் நோக்கினுள். வண்டி யருகே நின்று கொண்டிருந்தான் அவன். முன்னொரு நாள் அடிகளத்தில் நின்றது போலவே இப்போதும் தன்னந்தனியனுய், புகலின்மை ததும்பும் விழியனுய், அவளையே வெறித்து நோக்கியவனுய் நின்ருன்.

இதற்குள் நாலா புறங்களிலிருந்தும் ஜனங்கள் வந்து நெரிந்தார்கள். போர்வீரன் அவர்களிடையே தன் நண்பர்களையும் உறவினர்களையும் கண்டு பிடித்து அவர்களோடு அளவளாவத்

தொடங்கினுன். அவர்களோ, கேள்வி மேல்கேள்வியாகப்பொழிந்தார்கள். ஜமீலா எப்படியோ அவன் அருகே சென்று நன்றி தெரிவிப்பதற்குள் தானியாரின் வண்டி கடகடவென உருண்டோடி, ஒரே பாய்ச்சலில் வாயிலுக்கு வெளியே போய், படலம் படலமாய்ப் புழுதி கிளப்பிக் கொண்டு, நொடிவிழுந்த சாலையில் கடக்குப் புடக்கென்று தூக்கிப் போட்டவாறு விரைந்து சென்றுவிட்டது.

''யாரப்பா இந்த ஆள்? மூளை கீளை பிசகிவிட்டதோ?'' என்று மற்றவர்கள் பின்ஞலிருந்து கத்திஞர்கள்.

கூட்டம் போர்வீரனை வேறு பக்கம் இட்டுச் சென்றுவிட்டது. ஜமீலாவும் நானும் மட்டுமே வாயில் வளைவு நடுவே நின்று, விரைவாய் மறைந்து கொண்டிருந்த புழுதிப் படலத்தை நோக்கினேம்.

''போவோம் வா, ஜேனே'' என்று ஜமீலாவை அழைத்தேன்.

''நீ போ முன்னே. என்னைத் தனி

யாய் இருக்க விடு!'' என்று கடுப்பாகப் பதிலளித்தாள்.

ஆக, நாங்கள் ஒவ்வொருவரும் முதல் முறையாகத் தனித் தனியே ஊர் திரும்பினோம். மூச்சு திணறும் வெக்கையில் என் காய்ந்த உதடுகள் கருகிப் போய்க் காந்தின. பகல் வெயிலில் வெண்மை படர்ந்திருந்த, வெடிப்புக் கண்ட வறண்ட நிலம் இப்போதுதான் குளிரத் தொடங்கியிருந்தது. அதன் மீது சாம்பல் நிற உவர்ச் சிதல்கள் படியலாயின. நிலையும் வடிவுமற்ற அஸ்தமன சூரியன், மங்கிய மூட்டத்தில் விட்டுவிட்டு ஒளிர்ந்தது. அடிவானத்துக்கு மேல், ஆரஞ்சும் சிவப்புமான புயல் மேகங்கள் திரண்டு கொண்டிருந்தன. வறண்ட காற்று குப்குப்பென வீசி, குதிரைகளின் முகத்தில் வெண் புழுதி அப்பியது. அவற்றின் பிடரிகளைக் கலைத்துப் பின்னே தள்ளிவிட்டு அப்பால் சென்ற காற்று, குன்றுகள் மேல் செறிந்திருந்த காஞ்சிரைப் புதர்களில் அலையெழுப்பியது.

''மழை வரப் போகிறதோ?'' என்று எண்ணமிட்டேன்.

யாருமற்ற அகதியாகி விட்டது போன்ற உணர்வால் என் மனந்தான் என்ன பாடுபட்டது! எத்தகைய கவலை என்னைக் கவ்விக்கொண்டது! வேகத்தைத் தளர்த்தி மெது நடைக்கு வந்த வண்ண மாயிருந்த குதிரைகளைச் சவுக்கால் அடித்து முடுக்கினேன். ஒட்டிய உடலும், நீண்ட கால்களுமான குருகுகள் விர்ட்டெனப் பாய்ந்தோடிப் பாறை யிடை வெளிகளுள் சென்று மறைந்தன. புர்டாக் இலைச் சருகுகள் சாலை நெடுகிலும் சிதறிக் கிடந்தன. கிர்கீஸிய நிலங்களில் புர்டாக் வளர்வதில்லை. இவை கஸாஃக் பகுதியிலிருந்து காற்றில் அடித்து வரப் பட்ட இலைகள். கதிரவன் மறைந்தான். சுற்றிலும் ஒரு பூதரைக் காணோம். பகல் முழுதும் வெயிலில் காய்ந்து கருகிய வெறும் ஸ்தெப்பி வெளிமட்டுமே.

நான் அடிகளம் போய்ச் சேர்ந்த போது இருட்டிவிட்டது. எங்கும் ஒரே

அமைதி. காற்றில் அசைவே இல்லை. நான் தானியாரைக் கூவியழைத்தேன்.

''அவன் ஆற்றுக்குப் போய் விட்டான்'' என்று பதிலளித்த காவலாளி, ''காற்றே கம்மென்று அடங்கிப் போயிற்று, எல்லாரும் வீட்டுக்குப் போய் விட்டார்கள். காற்று வீசவில்லையானால் களத்திலே வேலை ஏது?'' என்று விளக்கினான்.

குதிரைகளை மேய்ச்சல் நிலத்தில் கொண்டுவிட்டபின் ஆற்றுக்குப் போகத் தீர்மானித்தேன். நெட்டுப் பாறை யருகே தானியார் வழக்கமாகப் போகும் இடம் எனக்குத் தெரியும்.

அங்கே தானியார் ஒரேயடியாகக் குனிந்து, தலையை முழங்கால்கள் மேல் வைத்தவாறு உட்கார்ந்து, கீழே பாய்ந்த ஆற்றின் கலகலப்பைக் கேட்டுக் கொண்டிருந்தான். அவன் அருகே போய், அவனுடைய கழுத்தைக் கட்டிக் கொண்டு, தேறுதலாக ஏதேனும் சொல்வோம் என்று ஆசை எனக்கு. என்ன சொல்வ

தென்று தான் புரியவில்லை. ஒரு புற மாக நின்று கொண்டிருந்து விட்டுக் கடைசியில் களம் திரும்பினேன். அப் புறம் வைக்கோல் விரிப்பில் படுத்து, கரு முகில் சூழ்ந்த வானையே பார்த்தவாறு, வாழ்க்கை ஏன்தான் இவ்வளவு சிக்கல் நிறைந்ததாக, புரிந்துகொள்ளக் கடின மாக இருக்கிறதோ என நெடுநேரம் சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

ஜமீலா இன்னும் திரும்பவில்லை. எங்கே சுற்றிக் கொண்டிருந்தாளோ? ஒரே அயர்வும் களைப்புமாயிருந்தபோதி லும் எனக்கு உறக்கம் பிடிக்கவில்லை. மலைத் தொடருக்கு வெகு உயரத்தில் முகில் விளிம்பில் மின்னல் வெட்டியது.

தானியார் களம் திரும்பியபோதும் நான் விழித்திருந்தேன். அவன் இங்கு மங்குமாக உலாவினான், சாலையையே கூர்ந்து கவனித்தான். பின்பு என் பக்கத் தில் வைக்கோல் மீது பொத்தென விழுந்து முடங்கினான். அவன் போய்விடு வான், இந்த ஊரில் தங்க மாட்டான்

என்று எனக்கு நிச்சயமாய்ப் பட்டது. ஆனால் அவனுக்குப் போக்கிடம் ஏது? வீடா, வாசலா, உற்றாரா, உறவினரா, எதுவும் யாரும் அற்ற அகதி அவன். எங்கே போவான்? நான் உறங்க ஆரம்பித்த வேளையில், அருகே நெருங்கும் வண்டியின் கடகடப்பு கேட்டது. ஜமீலா திரும்பி வந்துவிட்டாள் போலும்.

எவ்வளவு நேரம் தூங்கினேனோ தெரியாது, காதருகே வைக்கோல் சலசலத்தது. யாரோ பக்கத்தில் நடந்து சென்றார்கள். நனைந்த சிறகு தோளில் உராய்வது போல உணர்ந்தேன். கண்களைத் திறந்தேன். வந்தவள் ஜமீலா. ஆற்றிலிருந்து வந்திருக்கிறாள் என்பது அவள் உடைகள் சில்லென்று ஈரித்திருந்ததிலிருந்தே தெரிந்தது. அவள் நின்று, கவலையோடு இங்குமங்கும் பார்த்துவிட்டு, தானியார் அருகே உட்கார்ந்தாள்.

''தானியார், நான் வந்துவிட்டேன். நானாகவே வந்து விட்டேன்!'' என்று மெல்லென மொழிந்தாள்.

சந்தடியே இல்லை. மின்னல் ஒன்று, சத்தமின்றித் தரையை நோக்கிச் சரிந்து வந்தது.

''உனக்குக் கோபமா? ரொம்பக் கோபமா என் மேல்? ஊம்?''

மீண்டும் நிசப்தம். பின்பு மண்கட்டி ஒன்று பெயர்ந்து ஆற்றில் விழுந்த தொளப் பென்ற ஓசை.

''என்மேல் குற்றம் ஏதேனும் உண்டா? உன் மேலுந்தான் குற்றமில்லை....''

தொலைவில் மலைகள் மீது நீண்ட நேரம் இடி அதிர்ந்தது. மின்னல் வெளிச்சத்தில் ஜமீலாவின் பக்கத் தோற்றம் பளிச்சிட்டது. அவள் தானியாரை ஆரத் தழுவி அவனோடு ஒன்றி யிருந்தாள். அவளது தோள்கள் தானியாரின் அணைப்பில் விம்மி விம்மித் தணிந்தன. பின்பு அவள் வைக்கோலில் கால்களை நீட்டி தானியாரின் அருகே படுத்தாள்.

ஸ்தெப்பி வெளியிலிருந்து குப் பென்று வீசியது உஷ்ணக் காற்று. அது வைக்கோலைச் சுழற்றிச் சிதறியது,

களத்தோரத்திலிருந்த அற்றலைந்த குடிசையின்மீது தாக்கியது. பின்பு வெறித்தாடும் பம்பரம் போலக் கரகரவெனச் சுழன்று கொண்டே சாலை வழியே போய்விட்டது. இடியின் வெற்றொலி மீண்டும் தடதடத்தது. நீல ஒளிக் கீற்றுகள் மேகங்களைக் கிழித்து வெட்டின. எல்லாம் பயங்கரமாகவும் அதேசமயம் கிளர்ச்சி யூட்டுவனவாகவும் இருந்தன. ஆம், புயல் — கோடைகாலத்துக் கடைசிப் புயல் — வருவதற்கான குறிகள் இவை.

''உன்னை விட அவனைப் பெரிதாக மதிப்பேன் என்று நினைத்தாயா? இல்லவே இல்லை. ஒருகாலுமில்லை! அவனுக்கு என்மேல் ஒரு போதுமே ஆசை கிடையாது. நலம் விசாரிப்பதோடு சரி, அதுவும் கடுதாசியின் கடைசியிலே, பின் குறிப்பாக. இத்தனை காலத்துக்குப்பிறகு இப்போது ஆசை பிறந்துவிட்டதாக்கும். எனக்கு அவனும் வேண்டாம் — அவனுடைய ஆசையும் வேண்டாம். யார்

என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளட்டும்! என் கண்ணாளா, ஆரு மற்றவனே, உன்னை வேறு எவளும் கைப்பிடிக்க விட மாட்டேன்! எனக்கு வெகு காலமாக உன்மேல் ஆசை. உன் னைத் தெரியாதபோதே கூட உன்மேல் ஆசை வைத்துக் காத்திருந்தேன். நான் காத்திருப்பதை அறிந்தவன் போல நீயும் வந்துவிட்டாய்!'' என்று அன்பும் ஆவேசமுமாகக் குசுகுசுத்தாள் ஜமீலா.

இளநீல மின்னல்கள் நெளிந்து நெளிந்து பாய்ந்து, நெட்டுப் பாறையின் அருகே ஆற்றில் விழுந்தன. உறை பனி போல் குளிர்ந்த மழைத் துளிகள் சாய் வாக வந்து வைக்கோல் மேல் சடசடத் தன.

ஜமீலாவின் பெயரைக் கிர்கீஸிய மொழியிலும் கஸாஃகிய மொழியிலும் மிக மிகக் கொஞ்சலும் கனிவுமாக எத்தனை வகைகளில் அழைக்க முடியு மோ, அத்தனை வகைகளிலும் அழைத் தான் தானியார். பின்பு, ''ஜமீலா, என்

கண்ணே, அருமை ஜமீலா! நானும் உன்னை நெடுங்காலமாகக் காதலிக்கிறேன். போர்க்களத்தில் காப்பகழ்களில் இருந்தபோதும் உன்னைப்பற்றியே கனவு கண்டேன். என் காதலி, நான் பிறந்த ஊரில் இருக்கிருள் என்பது எனக்குத் தெரியும். அந்தக் காதலி நீ தான், என் ஜமீலா!'' என அவள் காதோடு மொழிந்தான்.

''எங்கே, இப்படித் திரும்பு, உன்னைக் கண்ணேடு கண் பொருந்தப் பார்க்கிறேன்!''

புயல் வந்துவிட்டது.

கூடாரத்தை மூடியிருந்த நமுதாத் துணி அலக்காகப் பிய்ந்து, காயமடைந்த பறவை சிறகடிப்பது போலப் படபடத்தது. தரை யருகே காற்ருல் உந்தித் தள்ளப்பட்ட மழை தாரைதாரையாகக் கொட்டியது, நிலத்தை முத்தமிடுவது போலிருந்தது. மலைமேலிருந்து பெரிய பாறைகள் பெயர்ந்து சரிவதுபோல இடி முழக்கம் வானில் குமுறி அதிர்ந்தது.

வெட்டி வெட்டி யடித்த மின்னொளியில் மலைத் தொடர் பளிச்செனத் துலங்கியது. பாறைகளுக்கிடையே உறுமிச் சீறியது காற்று.

மழை கொட்டியது. வைக்கோலுக் கடியில் மறைந்து படுத்திருந்த எனக்கு இதயம் படபட வென அடித்துக் கொள் வது புலனாயிற்று. ஒரே மகிழ்ச்சி எனக்கு. நெடுநாள் நோய்ப்பட்டிருந்தபின் வெளியே வந்து வெயிலொளியில் திளைப்பவன் போல இன்பத்தில் திளைத்தேன். வைக்கோல் போர்வைக்குள்ளும் மழையும் மின்னலும் என்னைத் தாக்கத்தான் செய் தன. எனினும் நான் மனநிறைவுடனிருந் தேன். காதில் படுவது ஓய்ந்து வரும் மழையா அல்லது தானியாரும் ஜமீலாவும் பேசிக்கொள்ளும் இரகசியமா என்று தீர்மானிக்க முடியாதவனாய்ப் புன்னகையுடன் கண்ணயர்ந்தேன்.

மழைக்காலம் நெருங்கிக் கொண்டிருந்தது. விரைவிலேயே இலையுதிர் காலம் வந்துவிடும். இலையுதிர்காலத்தில்

காஞ்சிரை, நனைந்த வைக்கோல், இவற்றிலிருந்து எழும் ஈரவாடை வீசுமே, அது போன்ற நெடி இப்பொழுதே அடித்தது. இலையுதிர் காலத்தில் எங்கள் வாழ்வில் என்ன நிகழும்? ஏனோ தெரியாது, அப்போது நான் அதைப்பற்றி நினைக்கவே இல்லை.

அந்த இலையுதிர் காலத்தில்தான் இரண்டாண்டு இடைமுறிவுக்குப் பின் நான் மறுபடியும் பள்ளிக்கூடம் போனேன். பாடம் முடிந்தபிறகு செங்குத்தான நதிக்கரைக்கு அடிக்கடி போவேன். இப்பொழுது களையிழந்து வெறிச்சோடிக் கிடந்த களத்து மேட்டின் அருகே உட்கார்ந்து கொள்வேன். நான் முதலாவது படங்களை வரைந்த இடம் இதுவே. எனது சித்திரங்கள் எல்லாமே எனக்கு அப்பொழுது கூடத் திருப்தி அளிக்கவில்லை என்பது நினைவிருக்கிறது.

''இந்த வண்ணங்கள் எல்லாம் ஒன்றுக்கும் உதவாதவை! அசலான வர்

ணங்கள் மாத்திரம் இருந்தால்!'' என்று மனதுக்குள் சொல்லிக் கொள்வேன். ''அசலான'' வண்ணங்கள் எப்படியிருக்குமென்றே எனக்குத் தெரியாது என்பது வேறு விஷயம்.

வெகு நாட்களுக்குப்பின்னே, உண்மையான எண்ணெய் வண்ணங்கள் சின்னச் சின்னக் குழாய்களில் கிடைப்பதைத் தெரிந்துகொள்ள வாய்ப்பு கிடைத்தது.

வண்ணங்கள் விஷயம் எப்படியானாலும், ''இவனுக்குப் படம் வரையக் கற்பிக்க வேண்டும்'' என்று என் ஆசிரியர்கள் சொன்னது சரிதான் போலும். கற்றுக்கொள்வதோ இன்னும் கனவாகவே இருந்தது. என் அண்ணன்மாரிடமிருந்து ஒரு தகவலுமில்லை. வீட்டிலிருந்த ஒரே மகனான என்னை, இரண்டு குடும்பங்களுக்குச் சம்பாதித்துப் போடும் ஜிகித்தான என்னை வெளியே அனுப்ப அம்மா சம்மதிக்கவே மாட்டாள். போவதைப் பற்றிப் பேச்செடுக்கவே எனக்குத் துணிவில்லை. இது போதாதென்று

அவ்வருடம் இலையுதிர் காலம் வேறு படம் வரை, வரை என்பது போல அவ்வளவு அழகு பொலிந்தது.

சில்லிட்ட குர்க்குரேவு ஆற்றில் நீர் வற்றி ஆழம் குறைந்து விட்டது. திடர்களில் கிடந்த கற்கள் மேல் கரும் பச்சையும் ஆரஞ்சுமான பாசி படிந்திருந்தது. முதல் குளிருக்கே இலைகளை உதிர்த்துவிட்டு மொட்டையாய் நின்ற ரோஸ் வில்லோக்களின் இளந்தண்டுகள் செக்கச் செவேரென இலகின. சின்னப் பாப்லர் மரங்களில் மட்டும் உறுதியான சிறு மஞ்சள் பழுப்புக்கள் இன்னும் அடர்ந்திருந்தன.

வெள்ளப் படுகையில் அறுப்புக்குப் பின் துளிர்த்த இளஞ்சிவப்புப் புல்லில் மேய்ப்பர்களின் புகைபிடித்த, மழையில் அடிபட்ட கூடாரங்கள் கரும் புள்ளிகள் போலக் காட்சி தந்தன. கூடாரங்களின் புகைப்போக்கிகள் வழியே சுள்ளென நெடி யடிக்கும் நீலப் புகை சுருள் சுருளாய் எழுந்தது. மெலிந்த ஆண்குதிரை

கள் உரக்கக் கனைத்தன, பெண் குதிரை களோ, விலகி விலகி ஓடின. இனி இள வேனில் காலம் வரை அவற்றை மந் தைகளில் ஒன்ருக வைத்திருப்பது கஷ்டந்தான். மலைகள் மேலிருந்து இறங்கி வந்த மந்தைகள் அறுப்பறுத்த நிலங் களில் தாள்களை மேய்ந்து திரிந்தன. கரு மை பாய்ந்த வறண்ட ஸ்தெப்பி வெளி யில் ஒற்றையடிப் பாதைகள் குறுக்கும் நெடுக்குமாக வலை பின்னியிருந்தன.

விரைவிலேயே ஸ்தெப்பிக் காற்று வீசத் தொடங்கியது. வானம் இருண்டு கறுத்தது. வெண்பனி பெய்வதற்கு முன் னடையாளமான குளிர்மழை பொழிந் தது. இடையில் ஒரு நாள் சற்று வெளி வாங்கியபோது நான் ஆற்றங்கரை சென்றேன். அங்கே இறங்கு துறையோர மாக வளர்ந்திருந்த தழல் நிற மலைய சோகுச் செறிவு என்னைக் கவர்ந்திழுத் தது. கடவைக்கு அருகிலேயே ரோஸ் வில்லோக்களுக்கிடையே உட்கார்ந்து கொண்டேன். அந்தி மயங்கும் நேரம்.

திடீரென இரண்டு பெயரைக் கண்டேன். அவர்கள் கடவையிலிறங்கி ஆற்றைக் கடந்து வந்தார்கள் போலும். தானி யாரும் ஜமீலாவுமே அவர்கள். முகங் களில் கவலை சூழ்ந்திருந்தது, அதே சமயம் உறுதியும் திகழ்ந்தது. அந்த முகங்களில் பதிந்த பார்வையை என் ஞல் அகற்றவே முடியவில்லை. தானி யாரின் தோளில் தொங்குபை மாட்டி யிருந்தது. அவன் விரைவாக நடந்தான். பொத்தான் போடாத அவனது மேல் கோட்டு முனைகள், அவன் அணிந்திருந்த தேய்ந்த செயற்கைத் தோல் பூட்சுகள் மேல் படக் படக்கென அடித்தன. ஜமீலா தலையில் கட்டியிருந்த வெள்ளைக் குட் டை நெகிழ்ந்து பின்னே சரிந்திருந்தது. விழாநாட்களில் பகட்டாக அணியும் மிக நல்ல சீட்டி உடையும் அதன் மேல் வெல்வெட் ஜாக்கெட்டும் அணிந்திருந் தாள். அவளது ஒரு கையில் சின்ன மூட்டை இருந்தது. மற்றக் கையால் தானியார் மாட்டியிருந்த தொங்குபை

யின் வாரைப் பற்றியிருந்தாள். இரு வரும் ஏதோ உரையாடிக் கொண் டிருந்தார்கள்.

பாறை இடை வெளிக்கு அப்பால் ஈர்க்கம் புல் புதரூடே சென்ற ஒற்றை யடிப் பாதையில் அவர்கள் நடந்தார்கள். என்ன செய்வதென்று தெரியாமல் அவர் கள் போவதைப் பார்த்துக் கொண்டிருந் தேன். அவர்களைக் கூப்பிடலாமா? ஆனல் நாக்கு அண்ணத்தில் ஒட்டிக்கொண்டு விட்டது. குரலே கிளம்பவில்லை.

மலைத் தொடருக்குமேல் விரைந்து மிதந்து சென்ற மேகங்களின் இடுக்கு வழியே, மறையும் கதிரவனின் கடை சிச் செங்கிரணங்கள் எட்டிப் பார்த்தன. பின்பு திடீரென இருள் பரவலாயிற்று. ரயில் பாதைக் கிளையை நோக்கி நடந்த தானியாரும் ஜமீலாவும் ஒரு தரங்கூடத் திரும்பிப் பார்க்கவில்லை. புதர்களுக்கு மேலாக அவர்களின் தலைகள் இரண் டொரு முறை துருத்தின. அப்புறம் முற்றிலும் மறைந்துவிட்டன....

''ஜமீலா... ஆ... ஆ...'' என எட்டியவரை உரக்கக் கத்தினேன்.

''ஆ... ஆ... ஆ...'' என தீனமாக வந்தது எதிரொலி.

''ஜமீலா... ஆ... ஆ... ஆ...'' என மறுபடி கூவியழைத்து அவர்கள் போன வழியில் ஆற்றின் குறுக்காக வெறி கொண்டவன் போல் ஓடினேன்.

பனிக்கட்டி போல் குளிர்ந்த நீர்த் திவலைகள் என் முகத்தில் தெறித்தன. என் ஆடையெல்லாம் தொப்பலாக நனைந்துவிட்டது. நானோ, கீழே பார்க்காமலே தலை தெறிக்க ஓடினேன். வழியில் கால் தடுக்கி விழுந்தேன். விழுந்தவன், தலையை நிமிர்த்தாமல் அங்கேயே கிடந்தேன். கண்ணீர் என் முகம் முழுவதையும் நனைத்தது. இருள் என் தோள்கள் மீது கவிந்தது. ஈர்க்கம் புற்களின் மெல்லிய தண்டுகள் சோகம் ததும்ப ஈன சுரத்தில் தேம்பின.

''ஜமீலா! ஜமீலா!'' என்று விசித்தழுதேன்.

எனக்கு மிக மிக அருமையான, மிகமிக நெருங்கிய இருவரைப் பிரிந்து விட்டேன். அப்போதுதான், தரையில் கிடந்தபடியே, ஓர் உண்மையைச் சட்டெனப் புரிந்துகொண்டேன் — நான் ஜமீலாவைக் காதலித்தேன் என்பதே அவ்வுண்மை. ஆம், ஜமீலா மீது நான் கொண்ட காதல்தான் என் முதல் காதல்— குழந்தைப் பருவக் காதல்.

நனைந்த கரங்களில் முகத்தைப் புதைத்தவாறு நீண்ட நேரம் அங்கேயே கிடந்தேன். நான் பிரிந்தது ஜமீலாவையும் தானியாரையும் மட்டுமல்ல — எனது குழந்தைப் பருவத்தையும் பிரிந்து விட்டேன்.

இருளில் தட்டித் தடுமாறிக்கொண்டு ஒரு வகையாக வீடு போய்ச் சேர்ந்ததும் முன்முற்றத்தில் ஒரே அமளியாயிருந்தது. அங்கபடிகள் சடசடத்தன, ஆட்கள் குதிரைகளுக்குச் சேணம் பூட்டிக் கொண்டிருந்தார்கள். குடிமயக்கத்

திலிருந்த ஒஸ்மோன் குதிரைமேல் ஆரோகணித்து, இங்குமங்குமாகத் துள்ளித் தடபுடல் பண்ணிக் கொண்டிருந்தான்.

''அந்தத் தெறிகெட்ட பலசாதி நாயை நாம் என்றைக்கோ ஊரைவிட்டுத் துரத்தி யிருக்க வேண்டும்! வெட்கக் கேடு! குடும்பம் முழுவதற்குமே தலை குனிவு! என் கையில் மட்டும் அகப்பட்டானே, அங்கேயே கொலை பண்ணிப் போட்டுவிடுவேன்! தண்டனை கிடைத்தால் கிடைக்கட்டும். தெருவிலே போகிற நாடோடிப் பயல்களெல்லாம் நமது பெண்களை இழுத்துக்கொண்டு போக விடுவேனா? மாட்டவே மாட்டேன். ஊம், ஏறுங்கள் குதிரைகளில், ஜிகித்களா! வாருங்கள் போவோம். இவன் எங்கேயும் தப்பித்துக்கொள்ள முடியாது. நேரே ஸ்டேஷனுக்கே போய்ப் பிடித்து விடுவோம்!'' என்று தொண்டையைப் பிய்த்துக்கொண்டு கத்தினான் ஒஸ்மோன்.

எனக்கு மேல் காலெல்லாம் உதறலெடுத்தது. எந்தச் சாலை வழியே

தேடிப் போவார்கள் இவர்கள்? அவர்கள் கிளை ரயில் பாதைக்குச் செல்லும் வழியில் போகாமல் நேரே ரயில் நிலையம் செல்லும் சாலையில் போவதைக் கண்டபின்புதான் நான் யாருங் காணுத படி வீட்டுக்குள் புகுந்து, அப்பாவின் ஆட்டுத்தோல் கோட்டைப் போர்த்துக் கொண்டு சுருண்டு படுத்து, என் கண்ணீரை ஒருவரும் பார்க்கக் கூடாது என்பதற்காகத் தலையை மூடிக்கொண்டேன்.

பின்புதான் ஊரில் எவ்வளவு பேச்சு, எவ்வளவு வம்பு! பெண்கள் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு ஜமீலாவின் மண்டையை உருட்டினுர்கள்.

''மடமட்டிப் பெண்! இந்த மாதிரிக் குடும்பத்தை விட்டுவிட்டு, சுகத்தைக் காலடியில் போட்டு மிதித்துக்கொண்டு கிளம்பிவிட்டாளே!''

''அப்படி அவன்கிட்டே என்னத்தைக் கண்டு விட்டாள்? தெரியாமல் தான் கேட்கிறேன்!''

''பார்த்துக் கொண்டே யிரு. ஒரு நாள் புத்தி வரும் அழகுராணிக்கு! ஆனல் அதற்குள் காலம் கடந்துவிடும்.''

''அதையே தான் நானும் சொல்கிறேன். ஸாதிக்குக்கு என்ன, ஆண்பிள்ளைத்தனத்தில் குறைச்சலா, சம்பாத்தியத்தில் குறைச்சலா? நம் ஊர் ஜிகித்களுக்கெல்லாம் முதல் அல்லவா அவன்?''

''மாமியார்களைத்தான் சொல்லேன்! இந்த மாதிரி மாமியார்கள் எல்லாருக்குமா இருக்கிருர்கள்? எங்கே, ஊர் ஊராய்த் தேடேன், இந்த மாதிரி அத்தை கிடைக்கிருளோ பார்ப்போம்! முட்டாள் பெண், தன் தலையிலேயே மண்ணை வாரிப் போட்டுக்கொண்டு விட்டாள். எதற்காகவோ, யாருக்காகவோ தெரியவில்லை!''

எனக்கு ஜேனேயாயிருந்த ஜமீலாவை நிந்திக்காதவன் நான் ஒருவன் தான் போலும். தானியார் எங்கள் எவரையும் விட அதிக உளச் செல்வம் வாய்ந்தவன் என்பது எனக்கல்லவா

தெரியும்? அவனுடன் ஜமீலா சுகப்பட மாட்டாள் என்று என்னுல் நம்பவே முடியவில்லை. அம்மாவைப் பார்த்தால் தான் எனக்கு இரக்கமாயிருந்தது. ஜமீலாவோடு அம்மாவின் பழைய பலமெல்லாம் போய்விட்டது போல் இருந்தது. ஒரேயடியாகத் தொய்ந்து தளர்ந்து சூம்பிப் போய் விட்டாள். தொன்மையான அஸ்திவாரங்களை எல்லாம் வாழ்க்கை இப்படி ஒரேயடியாக, இவ்வளவு உக்கிரமாகத் தாக்கித் தகர்த்து விட முடியும் என்பதை ஒப்புக்கொள்ளவே அவள் மனம் மறுத்தது என இப்போது நினைத்துப் பார்க்கையில் எனக்குப் புலப்படுகிறது. புயலில் வேருடன் வீழ்ந்த பெருமரம் மீண்டும் நிமிர்வதில்லை. அம்மாவின் கதி அப்படியே ஆயிற்று. முன்னெல்லாம் ஊசியில் நூலைக் கோத்துத் தரும்படி ஒருவரைக் கேட்கவே அவளது தன்மானம் இடந்தராது. இப்போதோ, ஒரு தரம் நான் பள்ளிக் கூடத்திலிருந்து திரும்பிவந்தவன், அம்மாவின் கைகள்

நடுங்குவதையும், ஊசிக் காதைக் காண முடியாமல் அவள் தேம்புவதையும் கண்டேன்.

''இந்தாப்பா, இந்த நூலை ஊசியில் கோத்துக்கொடேன்!'' என்று என்னைக் கேட்டவள் ஆழ்ந்த ஏக்கத்துடன் பெருமூச்செறிந்தாள். ''இந்தப் பெண் ஜமீலா வாழ்வைப் பாழாக்கிக்கொண்டுவிட்டாளே. ஐயோ, எவ்வளவு அருமையான குடித்தனக்காரி ஆகியிருப்பாள் தெரியுமா? போய்விட்டாளே.... நம்மையெல்லாம் விட்டுவிட்டுப் போய்விட்டாளே! எதற்காக? நம் வீட்டில் அவளுக்கு எதிலாவது குறையுண்டா?..'' என்று புலம்பினாள்.

அம்மாவைக் கட்டிக் கொண்டு தேற்றி, தானியார் எப்பேர்ப்பட்ட மனிதன் என்பதை விவரிக்க என் மனம் துடித்தது. ஆனால் அது அம்மாவை முற்றிலும் அவமதிப்பதாகும் ஆகையால் அப்படிச் செய்ய எனக்கு மனம் துணியவில்லை.

ஆயினும் இந்த நிகழ்ச்சியில் நான் ஆற்றிய பங்கு ஒரு நாள் அம்பலத்துக்கு வந்தேவிட்டது....

ஸாதிக் சீக்கிரமாகவே குணமடைந்து திரும்பி விட்டான். நடந்ததைக் கேட்டு வருந்தினுன். எனினும் ஒரு நாள் குடித்துப் போதை யேறியதும் அவன் ஒஸ்மோனிடம் ''அட போனுல் போய்த் தொலேகிருள் என்கிறேன். எங்கே யாவது விழுந்து நாசமாய்ப் போவாள். இந்த நாட்களில் பெண்களுக்கா பஞ்சம்? எத்தனே பேர் வேண்டுமோ கிடைப்பார்கள். பொன்முடியழகியே யானுலும் சோற்றுக்குச் செத்த சோனிப் பயலுக்குக் கூடத் தகுதியாவாளா? மாட்டாள்'' என்று அளந்தான்.

''சரியாய்ச் சொன்னுய்!'' என்று ஒஸ்மோன் ஆமோதித்துவிட்டு, ''எனக்கு வருத்தமெல்லாம் அவன் என் கையில் அகப்படாமல் போனுனே என்கிறது தான். கொன்று போட்டிருப்பேன் —

அங்கேயே! அவள் தலைமயிரை என் குதிரை வாலோடு சேர்த்துக் கட்டி இழுத்து வந்திருப்பேன்! எங்கேயாவது தெற்கே பருத்திப் பண்ணைகளுக்கோ இல்லாவிட்டால் கஸாஃகுகளிடமோ போய்த் தொலைந்திருப்பார்கள். ஊரூராய் அலைந்து பழகியவளாயிற்றே அந்த நாடோடி! ஒன்றுதான் எனக்குப் பிடிபடவே மாட்டேன் என்கிறது. இதெல்லாம் எப்படி ஆரம்பித்தது, ஊம்? ஒருவருக்கும் தெரியவும் தெரியாது, எவனும் நினைத்திருக்கவே முடியாது. இதெல்லாம் அவள் வேலைதான். அந்தக் கீழ் மகள் தான் எல்லாச் சூழ்ச்சியும் பண்ணியிருக்கிறாள்! அகப்பட்டால் அவளை என்ன செய்வேன் தெரியுமா!'' என்று கறுவினான்.

இந்தப் பேச்சைக் கேட்டதும் எனக்கு மண்டிக்கொண்டு வந்தது.

''புல் வயலில் அவள் உனக்கு எப்படிப் பாடம் கற்பித்தாள் என்பதை இன்னும் மறக்க முடியவில்லையா உன்

ஞல்? கடைகெட்ட பயலே, நீ தான் கீழ் மகன்'' என்று சொல்ல நா துடித்தது.

ஒரு நாள் நான் வீட்டில் உட்கார்ந்து, பள்ளிக்கூடச் சுவர்ச் செய்தித்தாளுக்காகப் படம் வரைந்து கொண்டிருந்தேன். அம்மா அடுப்புக் காரியமாக இருந்தாள். திடீரென்று ஸாதிக் அறைக்குள் சடாரெனப் புகுந்தான். அவன் முகம் வெளிறியிருந்தது. என் அருகே பாய்ந்து வந்து ஒரு காகிதத்தை என் முகத்துக்கு முன்னே நீட்டி, ''இந்தப் படம் போட்டது நீ தானே?'' என்று கோபமாகக் கண்களை இடுக்கிக்கொண்டு கேட்டான்.

எனக்கா, வாயடைத்துப் போயிற்று. அது தான் நான் வரைந்த முதல் படம். காகிதத்திலிருந்து ஜமீலாவும் தானியாரும் உயிர்பெற்று என்னை விழித்துப் பார்ப்பது போல் இருந்தது.

''நான்தான் போட்டேன்'' என்றேன்.

''இவன் யார்?'' என்று விரலால் காகிதத்தின் மீது குத்தினன்.

''தானியார்.''

''துரோகி!'' என்று சீறினுன் ஸாதிக்.

படத்தைத் துண்டு துண்டாகக் கிழித்தெறிந்துவிட்டுத் தடதடவென்று தரையதிர நடந்து வெளியே போய் அறைக் கதவைப் படாரென்று அறைந்து சாத்தினுன்.

துயர் படிந்த நீண்ட அமைதிக்குப் பின் அம்மா என்னிடம், ''உனக்கு அப்போதே தெரியுமா?'' என்று வினவினுள்.

''தெரியும்.''

அடுப்புத் திண்ணையில் சாய்ந்தாற் போல நின்று கொண்டிருந்த அம்மா என்னைப் பார்த்த பார்வையில் தான் எவ்வளவு மனச் சோர்வு, எத்தகைய கண்டனம் வெளிப்பட்டது!

''அவர்கள் படத்தை இன்னெரு தரம் போடுகிறேன்'' என்று நான் சொன்னதற்கு வருத்தத்துடன் தலையசைத்தாள்.

தரையில் சிதறிக் கிடந்த காகிதத் துணுக்குகளைப் பார்த்ததும் ரோசம்

பொறுக்க மாட்டாமல் எனக்கு மூச்சு திணறியது. என்னைத் துரோகி என்று இவர்கள் நினைத்தால் நினைத்துவிட்டுப் போகட்டும். யாருக்குத் துரோகம் செய்தேன்? குடும்பத்திற்கா? எங்கள் இனத்திற்கா? ஆனால் நான் உண்மைக்கு, யதார்த்தத்துக்கு, இந்த இருவரையும் பற்றிய நிஜத்திற்குத் துரோகம் செய்யவில்லையே! ஆயினும் என் தாயாரே புரிந்து கொள்ள மாட்டாளாகையால் இதைச் சொல்ல முடியவில்லை.

என் கண்களுக்கு எல்லாமே சுழல்வது போல் தோன்றிற்று. சிதறிய காகிதத் துணுக்குகள் உயிர் பெற்றுவிட்டது போலவும் அறையில் சுற்றி வருவது போலவும் பிரமை தட்டியது. ஜமீலாவும் தானியாரும் படத்திலிருந்து என்னை விழித்துப் பார்த்த காட்சி என் நினைவில் துலக்கமாகத் தெரிந்தது. தானியாரின் பாட்டு, மறக்க முடியாத அந்த ஆகஸ்டு இரவில் அவன் பாடிய பாட்டு, என் காதுகளில் ஒலிப்பது போலிருந்தது.

கிராமத்திலிருந்து அவர்கள் வெளியேறிய காட்சியை நினைவு கூர்ந்ததும் நாமும் வெளியேற வேண்டும் என்று அடக்க முடியாத ஆசை என்னுள் எழுந்தது. அவர்களைப்போலவே உறுதியுடனும் துணிவுடனும் வெளியேறி, இன்பத்தை நோக்கிச் செல்லும் பாதையில் அடி வைக்க வேண்டும் எனத் தீர்மானித்தேன்.

''நான் வெளியூர் போய்ப் படிக்கப் போகிறேன் அம்மா. அப்பாவிடம் சொல்லேன். சித்திரக்காரனாக வர வேண்டுமென்று எனக்கு ஆசை!'' என நிச்சயத்துடன் சொன்னேன்.

கட்டாயமாக அவள் என்னைக் கடிந்து கொள்வாள், போரில் உயிர் துறந்த என் இரு அண்ணன்மாரை நினைத்து அழுவாள் என்றே எண்ணினேன். அவள் அழாதது எனக்கு ஆச்சரியமாய்ப் போயிற்று.

''உன் இஷ்டப்படியே செய் அப்பா. குஞ்சுகளாயிருந்த உங்களுக்குச் சிறகு முளைத்து விட்டது. சுயேச்சையாகப் பறந்து போகிறீர்கள். எவ்வளவு உயரே

பறப்பீர்களோ யார் கண்டது? உங்கள் எண்ணமே சரியா யிருக்கலாம். போய்வா. அங்கே போனபின் உன் மனது மாறினாலும் மாறும். படம் போடுவதும் சாயம் பூசுவதும்—இதுவும் ஒரு தொழிலாகுமா? கற்றுக்கொண்டபின் தானே தெரிந்து கொள்வாய். பிறந்த வீட்டை மாத்திரம் மறந்து விடாதே'' என்று சோகத்துடன் தாழ்ந்த குரலில் மொழிந்தாள்.

அன்று முதல் ''சின்ன வீடு'' எங்கள் வீட்டிலிருந்து பிரிந்துவிட்டது. இதற்குச் சில நாட்களுக்கெல்லாம் நான் படிப்பதற்காக வெளியேறினேன்.

இவ்வளவு தான் கதை.

ஓவியப் பள்ளியில் கற்றுத் தேறிய பின் அகாடமிக்கு அனுப்பப்பட்டேன். அங்கே பட்டம் பெறுவதற்காக நான் தீட்டியது பல வருடங்களாக நான் கனவு கண்டு கொண்டிருந்த ஓவியம்.

படத்தில் சித்திரிக்கப்பட்டவர்கள் தானியாரும் ஜமீலாவுமே என்று ஊகிப்

பது கடினமல்ல. இலையுதிர் காலத்திலே, ஸ்தெப்பிப் பாதை வழியே அவர்கள் நடக்கிறார்கள். அவர்களுக்கு முன்னே திகழ்கிறது, அகன்று பரந்த, ஒளிமயமான தொடுவானம்.

எனது இந்த ஓவியம் பூரணமான கலைச் சிறப்பு வாய்ந்ததில்லைதான். கலைத் தேர்ச்சி எடுத்த எடுப்பிலேயே வந்து விடுமா? இருந்தபோதிலும் எனக்கு இது அளவற்ற விலைமதிப்புடையது. எனது முதலாவது உண்மையான படைப்பு அனுபவம் இது.

இப்பொழுது கூட, சில சமயம் என் படைப்புக்கள் எனக்கே பிடிக்காமல் போவதுண்டு. சில கடினமான கணங்களில் என்மீதே நம்பிக்கையை இழந்து விடுவேன். அம்மாதிரிச் சமயங்களில் எனக்கு அருமையான இந்தப் படத்தை, தானியாரையும் ஜமீலாவையுமே சரணடைவேன். அவர்கள் இருவரையும் உற்று நோக்குவேன். ஒவ்வொரு தடவையும் அவர்களோடு பேசுவேன்.

''எங்கிருக்கிறீர்கள் நீங்கள்? எந்த வழிகளில் நடந்து முன்னேறுகிறீர்கள்? நமது ஸ்தெப்பிகளில் இப்போது எத்தனையோ புதிய புதிய சாலைகள் செல்கின்றன கஸாக்ஸ்தான் முழுவதற்கும், அல்தாய் மலைத்தொடர் வரையிலும், சைபீரியாவுக்குள்ளும்! துணிவுள்ள மக்கள் எத்தனையோ பேர் அங்கே உழைக்கிறார்கள். ஒருகால் நீங்களும் அங்கேதான் போயிருக்கிறீர்களோ? என் அருமை ஜமீலா, ஒரு தரங்கூடத் திரும்பிப் பார்க்காமல் அகன்ற ஸ்தெப்பி வழியே நீ சென்றுவிட்டாயே! களைத்துப் போனுயோ? தன்னம்பிக்கையை இழந்துவிட்டாயோ ஒருகால்? தானியாரை ஆதரவாகப் பற்றிக்கொள். காதலைப் பற்றியும், உலகைப் பற்றியும், வாழ்க்கையைப் பற்றியும் அவன் பாடும் பாட்டைக் கேள். ஸ்தெப்பி வெளி அந்தப் பாட்டைப் பிரதிபலித்து, எல்லா நிறங்களிலும், எல்லா வண்ணச் சாயல்களிலும் பூத்துக் குலுங்குவதாக! அன்றைய

ஆகஸ்டு இரவை நினைவு கூர்வாயாக! முன்னே செல், ஜமீலா, போனதற்கு வருந்தாதே, அரும்பாடு பட்டுத் தேடிய இன்பம் உனக்குக் கிடைத்துவிட்டது!''

அவர்களைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு தானியாரின் குரல் கேட்கும். வழிநடக்க வா என அவன் என்னை அழைக்கிறான். நான் யாத்திரைக்கு ஆயத்தமாக வேண்டும் என்பது அதன் பொருள். நான் ஸ்தெப்பியைக் கடந்து என் ஊருக்குப் போவேன். அங்கே புதுப் புது வண்ணங்கள் எனக்குப் புலப்படும்.

எனது தூரிகையின் ஒவ்வோர் இழுப்பிலும் தானியாரின் இன்னிசை ஒலித்திடுக! எனது தூரிகையின் ஒவ்வோர் இழுப்பிலும் ஜமீலாவின் இதயத் துடிப்பு எதிரொலித்திடுக!

''நான் 1928ல் பிறந்தேன். தொழில் நுணுக்கப் பள்ளியிலும், கிர்கீஸிய விவசாயக் கல்லூரியிலும் கற்றுத் தேறினேன். நான் எழுத ஆரம்பித்தது 1953ல். இப்போது எனது கதைகளின் ஒரு தொகுதி ருஷ்ய மொழியில் மாஸ்கோவிலும், கிர்கீஸிய மொழியில் கிர்கீஸிய அரசாங்கப் பதிப்பகத்தாலும் வெளியிடப்படுகின்றது.''

சிங்கிஸ் ஐத்மாத்தவ்

